
www.tamilarangam.net

சரிநிகர்
'SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

முஸ்லிம் தலைமைகளின் அறிக்கைப் போர் !

இதழ்-136
டிச.04-டிச.17,1997 விலை ரூபா 10.00



## இணைக்கப்பட்டுள்ள வடகிழக்கைப் பிரிக்கக் கூடாது !

ஈ.பி. ஆர். எல். எப். செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன்

## மணலாறு குடியேற்றம் :
## தாயகக் கோட்பாட்டை வலிவாக்கியதா?

## செந்தில் நாதன் விவகாரம் :
## ஆட்டுவித்தவர் யாரோ ?



## காணாமல் போனோர் கதை :
## விபரிக்கின்றது சர்வதேச மன்னிப்பு சபை



## மகசின் சிறை :
## தமிழ் அரசியல் கைதிகள் ஆயுதம் தயாரித்தார்களாம் !

*சிங்களப் பத்திரிகைகள் விபரிப்பு*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சரிநிகர்
இரு வாரங்களுக்கு ஒரு முறை

"சரிநிகர் சமானமாக
வாழ்வமிந்த நாட்டிலே"
-பாரதி

**ஆசிரியர் குழு**
ச. பாலகிருஷ்ணன்
சிவகுமார்
சரவணன்
எம். கே. எம். ஷகீப்
அரவிந்தன்
சி. செ. ராஜா
சிவகுருநாதன்
சேரன்

**வடிவமைப்பு**
ஏ. எம். றஷ்மி

**வெளியிடுபவர்**
ச. பாலகிருஷ்ணன்,
இல. 18/02, அலோ சாலை,
கொழும்பு 03.

**அச்சுப் பதிப்பு**
பிறின்ற் இன்,
இல. 07, கெகடிய இடம்,
சிறிமல் உயன,
இரத்மலானை.

**ஆண்டுச் சந்தா விபரம்**
இலங்கை ரூபா 300/=
வெளிநாடு US $ 50
(தபாற்செலவு உட்பட.)
காசுக் கட்டளை / காசோலை
யாவும்
MIRJE என்ற பெயருக்கு
எழுதப்படல் வேண்டும்.

எல்லாத்தொடர்புகளுக்கும்
**ஆசிரியர்**
**சரிநிகர்**
**இல. 04, ஜயரத்ன வழி,**
**திம்பிரிகஸ்யாய,**
**கொழும்பு 05.**

தொலைபேசி : 593615, 584380.
தொலை மடல் : 594229.
E-mail : sari@sri.lanka.net

முன்னைய பிரதிகள்
வேண்டுவோர் எழுதுக.
கைவசம் உள்ள பிரதிகள்
அனுப்பி வைக்கப்படும்.

பிரசுரத்துக்கென
அனுப்பப்படும் படைப்புகள்
திருப்பி அனுப்பப்பட
மாட்டாது.

## கல்வியைக் காப்பாற்றுங்கள் !

வடக்கு கிழக்கு மாகாண கல்வி நிருவாக பரப்பின் தென் பகுதி அந்தத்தில் இருப்பது கல்முனைக் கல்வி வலயம். இங்கு 9 கோட்டங்களுண்டு. சுமார் 20 பாடசாலைகளில் 3000 ஆசிரியர்கள் உள்ளனர்.

அண்மைக்காலமாக கல்முனை வலயம் பல கோணங்களிலும் வெகு ஜனத் தொடர்பு சாதனங்களில் இடம் பிடித்து வருகின்றது. தொடர்ச்சியான மூன்று போராட்டங்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டதும் அங்குதான். ஏனைய திருமலை, மட்டு மாவட்டங்களில் எதிர்பார்த்தளவுக்கு வெற்றியளிக்கவில்லை.

தொழிற் சங்கப் போராட்ட காலங்களில் நடைபெற்ற சம்பவங்களினால் அங்கு அதிகாரி - அதிபர் - ஆசிரியர் மாணவர் தொடர்பு, உறவு சற்றுச் சீர்குலைந்துள்ளது. மாகாணக் கல்விச் செயலாளரை பூப்போட்டுக் கும்பிடும் தொழிற்சங்கங்கள் கல்முனை வலயத்தில் கடமையாற்றும் ஆசிரியருக்கெதிராக வேண்டி வலய கல்விப் பணிப்பாளரைச் சாடுகிறார்கள்.

இந்தநிலையில் க.பொ.த. (சா/த) பரீட்சைக் கடமைகளுக்கு தமக்கு வேண்டிய அதிபர் ஆசிரியர்களை அலுவலகம் அமர்த்தியதாகவும் தொழிற்சங்க முன்னணி அதிபர்களை சேர்த்துக் கொள்ளவில்லையென்றும் குற்றம் சாட்டப்படுகிறது. அதுவும் குறிப்பிட்ட வலய ஆசிரியரே இதில் வரிந்து கட்டிக்கொண்டு நிற்கிறாராம்.

மேலும் அண்மையில் வலயத்தில் மூன்றாம் தவணைப் பரீட்சைக்காக தயாராயிருந்த வினாப்பத்திரம் கடைசித் தறுவாயில் வெளி வந்துள்ளன. இஸ்லாமிய ஆசிரிய சங்கம் செய்து வந்த இந்தப் பரீட்சை வேலைகளை இம்முறை வலயக் காரியாலயம் செய்தது குறிப்பிடத்தக்கது. இவ்வினாத்தாள் வெளியீட்டுக்கு யார் காரணம்? பாவம் அப்பாவி மாணவர்கள்! கல்முனையில் கல்வியைக் காப்பாற்றுங்கள்!

-நேசன்

## அபிவிருத்திக்குத் தடை !

கல்முனை - அக்கரைப்பற்று பிரதான வீதி அகலமாக்கும் திட்டம் பல கோடி ரூபா செலவில் உருவானது. அதன் முதற்கட்டமாக காரைதீவிலிருந்து கல்முனை வரையிலான பிரதான வீதியை அகலமாக்கும் வேலை அண்மையில் ஆரம்பமாகி திடீரென நிறுத்தப்பட்டுள்ளது.

எத்தனை அடி அலகமாக்குவது? என்பதில் இரு சாராருக்கிடையில் இழுபறி. அமைச்சர் இருவரது ஆதரவாளர்களுக்கு மத்தியில் கயிறிழுப்பு நடக்கிறது. இதுதான் சுருக்கம்.

முதலில் மொத்த வீதியின் அகலம் 56 அடியாக கொண்டு வீதி அபிவிருத்தி அதிகார சபை வேலைகளை செய்து வந்தது. 90% வீதியோர கடை, வீட்டுச் சொந்தக்காரர்கள் 56 அடிக்கு வசதியாக தமது கடையை, வீட்டை உடைத்துத் திருத்திக் கொண்டனர்.

ஆனால் சாய்ந்தமருதிலும் கல்முனையிலும் இருக்கக்கூடிய சுமார் 7 பேரளவிலான குழுவொன்று 50அடி ஆக்கினால் போதுமானது என்று அடம்பிடித்து அமைச்சர் பௌசியையும் நெருக்கியுள்ளதாம்.

7 பேருக்காக 70 ஆயிரம் பேர் பாதிக்கப்படுவதா வேலையைத் தொடரவும் என பொது மக்கள் கேட்கிறனர்.

-நேசன்

## மின்சார அசௌகரியம் !

கல்முனை மின்சார சபைக்குட்பட்ட பிரதேசத்தில் கடந்த ஒரு மாதகாலமாக மின்சாரம் அடிக்கடி தடைசெய்வதும், கூட வருவதுமாக உள்ளது. இதனால் பரீட்சை எடுக்கும் மாணவர் தொடக்கம் சாதாரண பொது மக்கள் வரை பலத்த அசௌகரியத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இது இவ்விதமிருக்க உடைக்கப்பட்ட மின்மாற்றிகளை மாற்றுவதில் மின்சார சபை பாரபட்சம் காட்டி வருவதாக கூறப்படுகிறது. தமிழ்ப் பிரதேசத்ததில் மின்மாற்றி பொருத்தப்படுவதென்றால் நீண்ட காலதாம மேற்படுகிறதாம்.

## திருடர்களுக்கு விடுதலை

வலிகாமம் வடக்குப் பகுதியில் மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக மீளக் குடியேறி வருகின்றனர். இப்பகுதியில் பெரும்பாலான வீடுகளில் மக்கள் குடியேறவில்லை. மக்கள் இல்லாத வீடுகளில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர். இப்பகுதியில் ஆட்களில்லாத வீடுகளில் திருடியதாக இப்பகுதி கிராமசேவகர்கள் திருடர்கள் சிலரைப் பிடித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். ஆனால் ஒப்படைத்த இரு தினங்களில் திருடர்களனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.. -பரமர்

## பிரபா சொன்னதைச் சொல்கிறார் சுரேஸ் !

'தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்க அனைவரும் ஒன்று படுவோம்.' பத்மநாபாவின் நினைவு தினத்தையொட்டி நவ. 19இல் யாழ்ப்பாணத்தில் ஈ.பி.ஆர். எல்.எப். இயக்கத்தினரால் ஒட்டப்பட்டிருக்கும் சுவரொட்டி இது. இதைத் தானே பிரபாகரனும் அம்மையாருடன் பேச்சுவார்த்தை நடத்திய போது வலியுறுத்தினார். இதில் புதிதாக என்ன இருக்கிறது. பிரபாகரனின் கோரிக்கையை செவி மடுக்காத ஜனாதிபதி, சுரேஷ் பிரேமச்சந்திரனின் கோரிக்கையைச் செவிமடுப்பாரா?

-பரமர்

## பெட்டிசன் புலிகள்

யாழ்ப்பாணத்தில் தற்போது இராணுவத்தினருக்கும் புலனாய்வுப் பிரிவினருக்கும் பெட்டிசன்கள் குவிந்த வண்ணம் உள்ளனவாம். இவை யாவும் (காகிதப்)புலிகளைப் பற்றியதே. அரச அதிகாரிகளும் இந்த பெட்டிசன் சக்கரவர்த்திகளிடமிருந்து தப்ப முடியாது. பெரும்பாலான பெட்டிசன்களுக்குக் காரணம் சொந்த கோபதாபங்கள், போட்டி பொறாமைகள், அந்தஸ்து, பதவி என்பனவே. இந்த பெட்டிசன்கள் காரணமாக குடாநாட்டில் பலர் விசாரணைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

-பரமர்

## கொழும்பு எரிபொருள்

யாழ்ப்பாண மக்களுக்கு யாழ்ப்பாணத்தில் தயாராகும் உற்பத்திப் பொருட்கள் மீது நாட்டம் கிடையாது. எதாகெடுத்தாலும் கொழும்பு கொழும்பு என்றே கடைகளில் கேட்பார்கள். எள்ளுப்பாகு கூட கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்டு யாழ் நகரில் விற்பனையாகிறது. மக்களின் இந்த அந்நிய மோகத்திற்கு ஒரு உதாரணம் தற்போது யாழ் சேவையில் ஒலிபரப்பப்பட்டு வரும் ஒரு விளம்பரம். 'கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட எரிபொருட்கள் மரக்கறி எண்ணெய் போன்றவற்றைப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்' என ஒரு கடைக்காரர் விளம்பரம் செய்து வருகிறார். எரிபொருட்கள் குடாநாட்டிலும் உற்பத்தியாகின்றதா என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா?

-பரமர்

## மனித உரிமைகள் தாமதம் !

97.10.07 அன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த சர்வோதயத் தலைவரும், ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட மனித உரிமைகள் ஆணை, குழுத்தலைவருமான ஆரியரத்தின.. நவ. 01 முதல் யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகம் இயங்கும் எனவும் அங்கு வந்து யாரும் முறைப்பாடுகள் தெரிவிக்கலாம் எனவும் பத்திரிகையாளர் மத்தியில் கூறினார். ஆரியரத்தினா கொழும்பு திரும்பி விட்டார். இது வரை மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகம் திறக்கப்படவில்லை. பொதுவாக அரச அலுவலகங்களில் அலுவல்கள் தாமதமாகவே நடைபெறுவது வழக்கம். இதுவும் சந்திரிகா அம்மையாரின் நேரடிக்கண்காணிப்பில் இயங்கும் ஒரு அமைப்புத் தானே. தாமதம் என்றால் இவர்களின் நடவடிக்கைகள் என்ன வேகத்தில் நடைபெறும் என்று கேட்கிறார் யாழ் வாசி ஒருவர். ஆரியரத்தினா யாழ்ப்பாணம் வர முன்னரே தொடர்பு சாதனங்கள் யாழ்ப்பாணத்தில் அலுவலகம் திறக்கப்பட்டு விட்டதாக செய்தி வெளியிட்டிருந்ததை ஆரியரத்தினாவே சுட்டிக் காட்டியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

-பரமர்

## மருத்துவ சிகிச்சை மறுக்கப்பட்ட மக்கள் !

யாழ்போதனா வைத்தியசாலையில் கை முறிவு காரணமாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த மட்டுவிலைச் சேர்ந்த சின்னக்குட்டி செல்லையா என்பவர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்கு செல்லுமாறு வைத்தியர்களால் பணிக்கப்பட்டார்.

பின்னர் இவர் பாதுகாப்பு படையினரின் அனுமதி பெற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரால் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டு கொழும்பு போதனா வைத்தியசாலையில் 72ம் வாட்டில் 13ம் திகதி அனுமதிக்கப்பட்டார்.

இவருடன் கூடவே [illegible]க்கு உதவியாக இவருடை[illegible] மகன் சுதாகரன் வந்தி[illegible] 14[illegible] திகதி வைத்தியசாலைக்கு வந்[illegible] மருதானைப் பொலிசார் சுதாகரனை[illegible] கைது செய்து கொண்டு சென்றனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சின்னக்குட்டி செல்லையா ஈ.பி.ஆர்.எல்.எப். உறுப்பினர் ஒருவருக்கு அறிமுகமானவர் என்பதால் வைத்தியசாலைக்கு அவரைப் பார்வையிடச் சென்ற ஈ.பி.ஆர்.எல்.எப். உறுப்பினர்கள் மூலமே சுதாகர் கைது செய்யப்பட்ட விடயம் ஐ.சி.ஆர். சிக்கு அறிவிக்கப்பட்டது.

மருதானை பொலிஸ் நிலையத்துக்கு ஐ.சி.ஆர்.சியினர் சென்று விசாரித்த போது தாம் 14ம்திகதி சுதாகரனை கைது செய்து 15ம்திகதி விடுதலை செய்து விட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளார்கள்.

ஆனால் 17ம்திகதி தான் மருதானைப் பொலிசாரால் சுதாகரன் கொழும்பு போதனா வைத்தியசாலையில் அப்பண்டிசைற் நோய் உள்ளவர் எனக் கூறி அனுதிமதிக்கப்பட்டுள்ளார்.

மருதானைப் பொலிசாரால் கைது செய்யப்பட்ட 12 வயதான சுதாகரன் நிர்வாணமாக்கப்பட்டு அடித்து துன்புறுத்தப்பட்டு பலத்த உட்காயங்களுக்குள்ளாக்கப்பட்டுள்ளார்.

மருதானைப் பொலிசாரால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சுதாகரனை ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தினர் கூட்டிச் சென்று தற்போது மேலதிக வைத்திய சிகிச்சைக்காக சிறுவர் புனர்வாழ்வு நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இதேவேளை சுதாகரனின் தந்தையான சின்னக்குட்டி செல்லையாவிற்கு வைத்திய சிகிச்சை அளிக்க வேண்டாமென பொலிசாரால் வைத்தியர்கள் கேட்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

அவ்வாறே 72 ம் வாட்டிலிருந்து சின்னக்குட்டி செல்லையா உடனடியாக 52ம் இலக்க வாட்டிற்கு மாற்றப்பட்டு இப்போதைக்கு ஒப்பரேசன் செய்யத் தேவையில்லை. மூன்று மாதத்திற்கு பிறகு தான் செய்யலாமெனவும் வைத்தியர்களால் கூறப்பட்டதாம்.

72ம் இலக்க வாட் சத்திர சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுவர்கள் உள்ள இடம். 52ம் இலக்க வாட் சத்திர சிகிச்சை முடிந்தவர்களை வைத்துப் பராமரிக்கும் இடமாகும்.

அவசர சிகிச்சைக்கென வந்தவரை பொலிசாரும், கொழும்பு போதனா வைத்தியசாலை வைத்தியர்களும் தமிழர் என்ற காரணத்துக்ககாக படுத்தும் பாட்டை என்ன சொல்வது?

இவ்விடயம் சம்பந்தமான முழு விபரங்களை ஜனாதிபதிக்கும் ஐ.சி.ஆர்.சிக்கும், மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும் ஈ.பி.ஆர். எல்.எப். செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் அறிவித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

கொழும்புக்கு சிகிச்சை பெற வடகிழக்கிலிருந்து வருபவர்களை சோதனை முகாம்களிலும் தங்குமிடங்களிலும் வைத்து கைது செய்வது ஒன்றும் புதிய ஓர் விடயமில்லை தான். தமிழர்களின் அடிப்படை மனித உரிமைகளையே காலில் போட்டு நசுக்குகின்ற ஜனநாயக நாட்டில் நாம் வாழ்கிறோம் என்பதை மறுத்தல் கூடாது தான்.

ஜூன் 2ம்திகதியன்று வேல்முருகு லிங்கநாதன் என்ற கிராமசேவகர் மட்டக்களப்பிலிருந்து தனது மனைவியின் கண் சிகிச்சைக்காக கொழும்பு வந்த போது கண் வைத்தியசாலையில் வைத்தே லிங்கநாதனும், அவர் மனைவியும் அவர்களுக்கு உதவியாக வந்த அருளப்பு மங்களராணியும் கைது செய்யப்பட்டது சரிநிகர் வாசகர்கள அறிந்ததே.

குற்றப்புலனாய்வு பொலிசாரல் கைது செய்யப்பட்ட இவர்களில் லிங்கநாதனின் மனைவி மட்டும் 26 நாட்களின் பின் விடுதலை செய்யப்பட்டார். ஏனைய இருவரும் இன்னமும் 6ம் மாடியில் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

குறைந்த பட்சம் வைத்திய சிகிச்சை பெற வருபவர்களையே இரக்கமற்ற முறையில் வேட்டையாடும் இந்த அரசும் அரச படைகளும் நாளை தமிழ் மக்களின் உரிமைகளை அங்கீகரிக்குமென இன்னும் நம்பிக்கொண்டிருப்பவர்களை என்ன சொல்வது...?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**பொ.ஐ.மு. அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வு யோசனைகள் பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?**

இத்திட்டம் முழுமையாக தமிழ் மக்களுடைய அபிலாஷைகளைத் திருப்திப்படுத்துகிறது என்று சொல்ல முடியாது. அதே சமயம் 13வது திருத்தச் சட்டம் அல்லது இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்களை விடக் கூடுதலான அதிகாரங்களை இது கொண்டிருக்கிறது என்றே நினைக்கிறேன். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் இருந்த சில அம்சங்கள் இதில் இல்லாமலும் இருக்கிறது. இதில் உள்ள பல விடயங்கள் இன்னும் செழுமைப்படுத்தப்பட வேண்டும். பல விடயங்கள் புதிதாகச் சேர்க்கப்பட வேண்டும். எனினும் இதில் பிரச்சினைக்குரிய முக்கியமான விடயமாக நாம் கருதுவது நிறைவேற்றுக் குழு முறை (Excutive Committee System) என்ற புதிய விடயம் புகுத்தப்பட்டிருப்பதையே. அதிகாரங்களைப் பகிர்ந்தாலும் நடைமுறையில் அப்பிராந்தியங்களைச் செயலின்மை ஆக்கும் விடயமே இது. இது டொனமூர் அரசியலமைப்புக் ...த்தில் கட்சி முறை இல்லாத நேரத்தில் கொண்டு வரப்பட்டது. அது தோல்வியடைந்து விட்டதால் தான் பாராளுமன்ற ஆட்சி முறை கொண்டு வரப்பட்டது. தப்பித்தவறி ஒரு பிராந்திய சபை உருவாக்கப்பட்டாலும் பிர்ாந்திய நிர்வாகத்தை இது நடாத்தவிடாது. ஆக, முதலாவதாக இந்த நிறைவேற்றுக் குழு முறை நீக்கப்பட வேண்டும். இதில் மிகவும் கவலைக்குரிய விடயம் என்னவென்றால், ஈ.பி.ஆர்.எல்.எப். தவிர்ந்த எந்தக் கட்சியும் இது தொடர்பாக வாய் திறக்கவில்லை என்பது தான். த.வி.கூட்டணியினர் இந்தத் தீர்வுத் திட்டம் உருவாகக் கடுமையாக வேலை செய்தவர்கள். அவர்கள் இது சரியென வாதிடுகிறார்கள். பாராளுமன்ற தெரிவுக் குழுவிலிருக்கிற புளொட், ஈ.பி.டி.பி. போன்ற கட்சிகள் இது பற்றி வாய்திறக்கவே இல்லை.


> தமிழ்க் கட்சிகளது
> குறுகிய அரசியல் இலாபங்களால்
> நியாயமான தீர்வு ஒன்றைப்
> பெற முடியாது போனால்
> அதற்கான முழுப் பொறுப்பையும்
> அவர்கள் ஏற்றுத் தானாக வேண்டும்

**த.வி.கூட்டணி நிறைவேற்றுக் குழு முறை தேவையானது என்று என்ன காரணத்துக்காகச் சொல்கிறார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?**

முக்கியமான விடயம் என்னவென்றால், பல கட்சிகள் ...ார்ச்சியுற்று வருவது ஜனநாயகம் வளர்வதைக் காட்டுகிறது. இந்த நிறைவேற்றுக் குழு முறை, பல கட்சிகள் போட்டியிட்டு ஒரு கட்சி அறுதிப்பெரும்பான்மையைப் பெற்று மற்றைய கட்சிகள் குறைந்த வாக்குகளைப் பெற்றாலும்கூட, குறைந்த வாக்குகளைப் பெற்ற கட்சிக்கும் அமைச்சர் பதவிகள் அரசியல் யாப்பு ரீதியாக வழங்கப்படப்போகிறதுஎன்பதையேது காட்டுகிறது. தேர்தல் கமிஷனரே, அதிகூடிய வாக்குளைப் பெற்ற கட்சிக்கு எத்தனை அமைச்சர்கள், அடுத்ததாக பெருமளவு வாக்குகளைப் பெற்ற கட்சிக்கு எத்தனை அமைச்சர் பதவிகள், அடுத்து பெரும்பான்மையைப் பெற்ற கட்சிக்கு எத்தனை அமைச்சர்க்ள் என்று அறிவிக்கப் போகிறார். உதாரணமாக ஒரு பிராந்திய சபையில் ஏழு அமைச்சர்கள் என்று சொன்னால் அறுதிப் பெரும்பான்மை பெற்ற கட்சிக்கு மூன்று அமைச்சும், மற்றைய கட்சிகளுக்கு ஒவ்வொன்றாக நான்கு அமைச்சும் வரக்கூடும். ஒரு அமைச்சரவையை உருவாக்கும் போது பெரும்பான்மை சிலவேளை முதலமைச்சருடைய கட்டுப்பாட்டுக்குள் இல்லாமல் இருக்கலாம் வேறு சிலர் அதனைக் கட்டுப்படுத்தக்கூடும்.

மற்றையது, ஏழு அமைச்சர்கள் எனக் கொண்டால், பிராந்திய சபையில் இருக்கும் மிகுதி அத்தனை அங்கத்தவர்களும் ஏழு பிராந்திய அமைச்சர்களின் கீழ் சரிசமனான குழுக்களாகப் பிரிக்கப்படுவார்கள். இதனால் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற விடயங்கள் இல்லாது போய் விடும். எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களும் பிரிந்து ஏதோ ஒன்றின் கீழ் வந்து விடுவார்கள். இதனால் ஜனநாயக வழிமுறையின் விழுமியங்களில் ஒன்றான ஆளும் கட்சி விடும் தவறுகளைத் தட்டிக்கேட்கும் எதிர்க்கட்சி இல்லாது போய்விடும். ஆக, ஜனநாயகப் பண்பு குழி தோண்டிப்புதைக்கப்படுகிறது. ஊழல் செய்பவர்களும், கொள்ளையடிப்பவர்களும் யோக்கியமாக கொள்ளையடிப்பதற்கும், ஊழல் செய்வதற்குமான களம் தான் இங்கு உருவாக்கப்பட்டிருக்கிறது. இதனூடாக மக்களுடைய தெரிவை அரசியல் சாசனமே மறுதலிக்கும் நிலை உருவாகிறது. எவ்வாறெனில், வளர்ச்சியடைந்த ஜனநாயகத்தில் மக்கள் தாம் விரும்பிய கொள்கைக்கு வாக்களிக்கும் உரிமை உள்ளவர்கள். ஆக, மக்கள் வாக்களிக்கும் போது தாம் விரும்பிய கொள்கை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காகவே அக்கட்சிக்கு வாக்களிப்பர். ஆனால் நிறைவேற்றுக் குழு முறையின் கீழ் மக்கள் விரும்பும் கொள்கையை நடைமுறைப்படுத்த பெரும்பான்மை மக்களால் வாக்களிக்கப்பட்ட கட்சிக்கு முடியாது போய் விடும். அரசியல் சாசனமே வேறு வேறு கொள்கைகளைக் கொண்ட வெவ்வெறு கட்சிகளுக்கு அமைச்சர் பதவிகளை வழங்குவதனூடாக மக்களுடைய உரிமையை மறுதலிக்கிறது.

மூன்றாவது, முதலமைச்சருடைய கட்டுப்பாட்டுக்குள் இவர்கள் இருக்கப் போவதில்லை. ஒரு அரசாங்கத்துள் பல அரசாங்கங்கள் இருக்கும் நிலைமையே உருவா



கும். சிலவேளைகளில் ஏதாவது தவறு காரணமாக முதலமைச்சரால் அவ்வமைச்சர் நீக்கப்பட்டாலும் அதே கட்சியைச் சேர்ந்தவரே மீளவும் அமைச்சராக்கப்படுவார். ஆக, முதலமைச்சர் தனது கடசியின் கொள்கைக்கு ஏற்றவாறு கட்சியை வழிநடத்த முடியாது. ஆக, எந்நாளும் பிரச்சினைகளும், மோதல்களும் தான் நடைபெறும்.

அரசாங்கம் சொல்லக்கூடும் சிறுபான்மை இனங்களுக்கு வாய்ப்பளிப்பதற்காகவே இது உருவாக்கப்பட்டது என்று. ஆனால், நான் நினைக்கிறேன்; இது சுத்த பைத்தியக்காரத் தனம் என்று.

# தமிழ் மக்களுடைய அபிப்பிராயங்களை

# “ நிராகரித்து விட்டு யாரும் தீர்வு காண முடியாது ! ”

## ஈ.பி.ஆர்.எல்.எப்.செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன்

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக ஒரு பிராந்திய அரசு உருவாக்கப்படும் போது அது நடைமுறையில் தனது நிர்வாகத்தை நடைமுறைப்படுத்த முடியாதளவுக்கு பிரச்சினைகளைக் கொடுக்கும் என்பதால் இது உண்மையில் பிரச்சினைக்குத் தீர்வாக இல்லை. அதனை மோசமாக்கும் ஒரு நடவடிக்கையாகவே இருக்கிறது.

தவறானது என முன்னர் நிராகரித்த இதனை படித்த பண்டிதர்கள் எனச் சொல்லப்படுகிற பேராசிரியர் பீரிஸோ, நீலன் திருச்செல்வமோ இப்போது தேவை என்று ஏன் சொல்லுகிறார்கள் என்பது தான் எனக்குப் புரியவில்லை. பீரிஸ் ஒரு முறை சொல்லியிருக்கிறார்; ஜனாதிபதி இதனை மத்தியில் அமுல்படுத்த விரும்பவில்லையென்று. மத்தியில் அமுல்படுத்த விருப்பமில்லாததை பிராந்தியங்களின் மேல் ஏன் திணிக்க வேண்டும்.

ஆக, அரசாங்கம் இதனை மீள் பரிசீலனை செய்ய வேண்டும். பாராளுமன்றத்தில் இருக்கும் தமிழ்க் கட்சிகள் எதுவும் இது தொடர்பாக வாய் திறந்ததாகத் தெரியவில்லை. முக்கியமாக இது சரி என்று சொல்லுகிற த.வி.கூட்டணி கூட பகிரங்கமாக பத்திரிகையில் இது எப்படிச் சரியானது என்று தெரிவிக்க வேண்டும். கூட்டணி எதற்காக இது சரி என்று சொல்கிறது என்று புரியவில்லை. கூட்டணிப் பிரமுகர்களுடன் உரையாடிய போது இது நீலனுக்கும், சம்பந்தனுக்கும் பிடித்திருக்கிறது என்று சொன்னார்கள். நீலனுக்கும், சம்பந்தனுக்கும் ஏன் பிடித்திருக்கிறது என்று கூட இவர்கள் சொல்லவில்லை. தமிழ் மக்களுக்கு இது விருப்பமானதா என்றும் எவரும் பேசவில்லை.

இதேபோலவே காணி, காணிப்பங்கீடு, பொலிஸ், சட்டமும் ஒழுங்கும், பிராந்திய அரசைக் கலைக்க ஜனாதிபதிக்கு உள்ள உரிமை, கல்வி, பௌத்தத்திற்கு முதலிடம் கொடுத்தல் என்னும் பிரச்சினைக்குரிய பல விடயங்கள் இருக்கின்றன. முழு இலங்கையும் மதச் சார்பற்றதாக இருக்க வேண்டும் என்றே நாம் விரும்புகிறோம். ஆனால் அது பௌத்தர்களுடைய உணர்வைப் புண்படுத்துகிறது என்று கருதினால் வட- கிழக்குப் பிராந்திய மக்களுடைய உணர்வை மதிக்கும் விதத்தில் வடகிழக்குப் பிராந்தியம் மதச்சார்பற்றதாக இருக்க அனுமதித்தல் வேண்டும். வடகிழக்கு மக்கள் மதச் சார்பற்ற பிராந்தியமாக இருக்க விரும்புவர் என்றே நான் நம்புகிறேன். அப்படியானால் தான் அங்கு வாழும் இந்துக்கள், கிறிஸ்தவர், முஸ்லிம்கள், ஏன் பௌத்தர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு ஆரோக்கியமான சமுதாயத்தைக் கட்டுவார்கள். அது முழு இலங்கைக்கும் முன்னோடியான ஒரு சமுதாயமாக இருக்கும்.

கல்வியென்ற விடயத்தில் கூட என்ன அடிப்படையில் தேசிய பாடசாலை உருவாக்கப்படுகிறது என்று கூறப்படவில்லை. ஜனாதிபதி போய் ஒரு பாடசாலையில் நின்று கொண்டு இது தேசியப்பாடசாலை என்றால் அது தேசியப்பாடசாலை ஆகி விடுமா? இது அங்குள்ள நல்ல பாடசாலைகள் எல்லாவற்றையும் தேசியப்பாடசாலைகள் என்று அறிவித்து விட்டு, கிராமப்புறத்திலுள்ள பாடசாலைகள் எல்லாவற்றையும் பிராந்திய அரசுக்குரியதாக்கி விடும். இதனூடாக மாணவர்கள் இரு கூறாக்கப்படுவர். தேசியப் பாடசாலைகள் மேல்மட்ட மக்களுக்கானதாக ஆகி விடும். ஆகவே தேசியப் பாடசாலைகள் என்ற விடயமே அகற்றப்படவேண்டும். அல்லது கல்வியைப் பிராந்தியத்துக்கு உரித்தானதாகக் கொடுக்க வேண்டும். அது மட்டுமல்ல, இனப்பிரச்சினைக்கு பாரியளவில் வழிவகுத்தது கல்வி, மீளவும் இதனைச் சிக்கலான நிலையில் வைத்திருக்கத் தேவையில்லை.

இதே போல தான் பொலிஸ் அதிகாரமும் உள்ளது. தேசியப்பொலிஸ் பிராந்திய பொலிஸ்என. இதே போன்றதுதான் காணியும். மத்திய அரசு பிராந்திய அரசின் முன்னேற்றத்துக்காக, நியாயமான ஒரு காரணத்துக்காக காணியைக் கேட்டால் யாரும் அதை மறுக்கப் போவதில்லை. ஆனால் மத்திய அரசோ, எமக்குத் தேவையான போது சொல்லிவிட்டு எடுப்போம் என்று சொன்னால் அதற்கு ஏதோவொரு உள்நோக்கம் இருப்பதாகவே சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. ஒரு நல்ல நோக்கத்துக்காகக் காணியை எடுப்பதாயின் பிராந்திய சபையே அதனைக் கொடுக்கும். அப்படி அது கொடுக்காவிட்டால் மத்திய அரசு உயர் நீதி மன்றத்துக்குப் போகலாம்.

தீர்வுத்திட்டத்தில் சில நல்ல அம்சங்களும் உண்டு. உதாரணமாக இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் முன்னர் இருந்தது ஒற்றையாட்சியின் கீழ் ஒரு அதிகாரப் பரவலாக்கம் ஆனால் இங்கு கிடைத்திருப்பது அதிகாரப் பகிர்வு. இதன் கீழ் பிராந்தியத்துக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரத்தை மீளப் பெறமுடியாத நிலை இருக்கிறதென்று நான் நினைக்கிறேன். இது 13வது திருத்தச் சட்டத்தில் இருக்கவில்லை.

இதேபோல் முன்னர் ஒரு பிராந்தியம் தனக்கு அளிக்கப்பட்ட அதிகாரம் தொடர்பில் ஒரு சட்டத்தை இயற்ற வேண்டுமாயின் அதற்கு ஒப்புதல் கொடுக்க வேண்டியது கடைசியாக பாராளுமன்றம் என்ற நிலையே இருந்தது. ஆனால் இப்போது அதை அந்தப்பிராந்தியங்களே செய்ய முடியும் என்பது ஒரு முக்கியமான விடயம்.

இதில் மிகவும் மோசமான விடயம் என்னவென்றால் வடகிழக்கு தற்காலிகமாக இணைக்கப்பட்டு கடந்த பத்து வருடங்களாக இருந்து வருகிறது. ஆனால் இலங்கை - இந்திய ஒப்பந்தம் வருவதற்கு முன்னர் பல தடவை பேசப்பட்டு நிராகரிக்கப்பட்ட மட்டக்களப்புக்கும், திருமலைக்கும் ஒரு சர்வஜன வாக்கெடுப்பு, அம்பாறை தொகுதி சிங்கள மக்களுக்கு ஒரு சர்வஜன வாக்கெடுப்பு, முஸ்லிம் மக்களுக்கு இல்லை. (அது அஷ்ரஃப் கேட்டதை அவரே கொண்டு போகலாம் என்ற அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ளது) என்று எல்லாவற்றையும் தடாலடியாகப் போட்டுடைத்துள்ளது.

உண்மையிலேயே அரசாங்கம் மக்களது மனவுணர்வுகளை மதித்து, உங்களுக்கு என்ன விருப்பம் எனக்கேட்டு அதியுயர் ஜனநாயகப் பண்பின் கீழ் செயற்படுகின்றதென்றால் முதலில் செய்ய வேண்டியது வட கிழக்கு மக்களிடம் இந்த நாட்டுடன் சேர்ந்து வாழப்போகிறீர்களா/ இல்லையா என்று கேட்க வேண்டியது தான். இது வெறுமனே ஒரு தர்க்க ரீதியான கேள்வி அல்ல. அரசாங்கம் மக்களுடைய மனவுணர்வுகளைப்புரிந்து கொள்ளத்தான் தேர்தல் நடத்துகிறது என்று சொன்னால் இதைத் தான் நான் கேட்கிறேன். ஆக, பத்து வருடங்களாக இணைக்கப்பட்ட வடகிழக்கை மீளவும் குலைக்கக் கூடாது. இதை உண்மையிலேயே பிரச்சினையாக்கியது அரசியல்வாதிகள் தான். மக்களல்ல. ஏன் இணைய வேண்டும் என்பதற்கு தமிழ் மக்கள் காத்திரமான பல காரணங்களை வைத்திருக்கிறார்கள். ஏன் இணையக் கூடாது என்பதற்கு அரசாங்கம், சிங்கள அரசியல்வாதிகள், இனவாதிகள் சொல்லும் காரணங்கள் ஏற்கக்கூடியவை அல்ல.

அரசாங்கம் குறைந்த பட்சத் தீர்வொன்றை உண்மையாகவே காண விரும்பினால் இது இன்னும் செழுமைப்படுத்தப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

**ஆனால் பா.தெ.குழுவில் எவ்வித உடன்பாடுகளும் காணப்படமாலேயே, எத்தகைய செழுமைப்படுத்தல்களும் செய்யப்படாமலேயே, தமிழ்க் கட்சிகளுடைய அபிப்பிராயங்கள் சரியாகக் கலந்துரையாடப்படாமலேயே அரசாங்கம் இதனை அறிக்கையாக பாராளுமன்றத்தில் முன்வைத்துள்ளது. இந்நிலையில் ஈ.பி.ஆர்.எல்.எப்பின் அடுத்த நடவடிக்கை எதுவாக இருக்க முடியும்?**


நீங்கள் சொல்வதில் நூறுவீத உடன்பாடு உண்டு. குறித்த ஒரு விடயம் தொடர்பாகப் பல கட்சிகளிடையே ஒரு இணக்கப்பாட்டிற்கு வருவதற்காகவே பா.தெ.குழு கூடப்பட்டது. இணக்கப்பாட்டிற்கு வந்தால் அதனைப் பாராளுமன்றத்தில் சட்டமாக்குவதற்கு இலகுவாக இருக்கும். இங்கு எந்தவொரு விடயத்திலும் இணக்கப்பாட்டிற்கு வரவில்லை. இதனை ஒரு புதுவிதமான பா.தெ.குழு என்று தான் நாம் சொல்லவும் வேண்டும். ஆனால் அரசாங்கம் பாராளுமன்றத்தின் முன் அதனை வைத்திருக்கிறது என்பதுதான் உண்மை. நான் தொடர்ந்து தமிழ்க் கட்சிகளைக் குற்றம் சாட்டுகிறேன் என்பதல்ல. நிச்சயமாக தமிழ்க் கட்சிகள் இதில் சரியான

→ 9

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# மணலாறு வலிஓய ஆக்கப்பட்டது ஒரு தூரநோக்கற்ற நடவடிக்கையே !

நன்றி : யுக்திய தமிழில் சி.செ.

தாயகக் கோட்பாடு இலங்கைத் தமிழ் சமூகத்துக்குப் புதிய கோட்பாடொன்றல்ல. அதற்கு ஒருவித வரலாறு உள்ளது தெளிவானது. விஷேடமாக இலங்கைத் தமிழ் தேசியவாதிகள் நீண்ட காலமாகவே இக்கோட்பாட்டு நிலைப்பாட்டில் இருந்தனர். ஆனாலும் சாதாரண தமிழ் மக்கள் மத்தியில் அக்கருத்து அவ்வளவு செல்லுபடியானதாக இருக்கவில்லை.

இவ்வாறிருந்த தாயகக் கோட்பாடு முழுத் தமிழ் சமூகத்தினதும் இதயத்தின் அடிப்பகுதியில் ஆழப்பதியும் சம்பவமொன்று 1984ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 24ம்திகதி பொழுது புலரு முன் நடைபெற்றது.

அப்போதிருந்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயர்வர்தனவின் மகனான ரவி ஜயவர்த்தனவினதும், அப்போதிருந்த முன்னாள் மகாவலி அமைச்சர் காமினி திசாநாயக்காவினதும் வழி காட்டலில் மணலாறு ( வலிஓய ) பிரதேசத்திலேயே அந்நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

அக்காலத்தில் அந்நடவடிக்கைக்கு தலைமை வகித்தவரான எச்.குணரத்ன சுயாதிபத்தியமுள்ள அரசொன்றுக்காக (For A Sovereign State) என்ற பெயரில் பின் எழுதிய புத்தகமொன்றில் மேற்கூறிய நடவடிக்கையை இலங்கையில் தமிழ்ப் பிரிவினைவாதத்துக்கு எதிராக விடுக்கப்பட்ட வரலாற்று பூர்வமான தாக்குதலொன்றாகவே அறிமுகம் செய்திருந்தார்.

நடவடிக்கை நடைபெற்ற பிரதேசம் இலங்கைநில அளவையாளர் வரைபடத்தில் ''மணலாறு'' என்ற பெயராலேயே அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. (மணல்+ ஆறு= மணலாறு) இந்நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு நான்கு மணித்தியாலங்களின் பின்பு மணலாற்றுப் பிரதேசத்தை நடவடிக்கைக் காரர்கள் சுத்தம் (Clear) செய்து வெற்றி கொண்டனர். அதன்படி அங்கு வாழ்ந்து வந்த ஐயாயிரத் துக்குக் குறையாத தமிழ் மக்கள் ஓர் இரவினுள்ளேயே ஊர் மண்ணை விட்டுத் துடைத்தெறியப்பட்டனர். அதிலிருந்து இராணுவக்கட்டுப்பாட்டிற்குள் உரிமையாக்கப்பட்ட அப்பிரதேசம் மணலாறு என்பதற்குப் பதிலாக அதே அர்த்தமுடைய சிங்களச் சொல்லிற்குப் புரள்வுற்று வலிஓய (மணல் = வலி - ஆறு= ஓய ஆக மணலாறு அதாவது வலிஓய) எனப் பெயரானது.

அதனுடன் நின்று விடாது அவர்கள் இம்மண்ணில் அமைந்துள்ள உயரமான மலை உச்சியை இராணுவத் தலைமையகமாகவும் அமைத்துக் கொண்டனர். அதுவரை மண்கிண்ணிடிமலை (மண் = பஸ் + கிண்டி= ஹாறன+ மலை = கந்த) என அழைக்கப்பட்ட இம்மலை அதிலிருந்து இராணுவத் தலைவரொருவரான ஜானக பெரேராவின் பெயரில் ஜானகபுர எனவும் பெயரிடப்பட்டது.

அன்றிலிருந்து இவ்விடம் இராணுவத்துடன் கூடிய சிங்களக் குடியேற்றமொன்றாக ஆக்கப் பட்டது. அதற்காகத் தென் பகுதியின் மிகுந்த கஷ்டமான கிராமியப் பிரதேசங்களிலிருந்து ட்ரக்டர் வண்டிகளில் ஏற்றப்பட்ட நூறாயிரம் எண்ணிக்கையிலான சிங்கள மக்கள் இரவோடிரவாக இவ்விடத்துக்குக் கொண்டு வந்து விடப்பட்டனர்.

அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட அந்நடவடிக்கையின் அடிப்படை நோக்கமானது தமிழ்ப் பிரிவினை வாதத்துக்கு அடிப்படையான நிலப்பரப்பைப் பிரிப்பதே என்பது மேற்கூறப்பட்ட புத்தகத்தினூடாக மேலும் தெளிவாகிறது. தமிழ் மக்கள் வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இரண்டினையும் இணைப்பது இங்கே கூறப்படும் மணலாறு/ வலிஓய பிரதேசமே ஆகும். அதனால் இவ்விரு மாகாணங்களையும் பூகோள ரீதியாகப் பிரிக்க முடியுமானால் அதனூடாகத் தமிழ்ப் பிரிவினை வாதத்தைத் தோல்வியடையச் செய்ய முடியுமென மேற்கூறிய திட்டத்தின் ஸ்தாபகர்கள் கனவு கண்டனர்.

அதற்கிணங்க ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கையால் வலிஓயாவைக் கைப்பற்றி, அங்கு சிங்களக் குடியேற்றமொன்றை ஏற்படுத்த முடிந்தாலும் அதன் இறுதிப் பெறுபேறானது அவர்களின் நோக்கத்தை அடிப்படையிலேயே சிதைத்து விட்டது.

தொலைநோக்கற்று ஆரம்பிக்கப் பட்ட நடவடிக்கை அதுவரை தமிழ்ச் சமூகத்துக்கு அவ்வளவு செல்லுபடியான கோட்பாடாக இல்லாதிருந்த தமிழ் தாயகக் கோட்பாட்டை ஒரே இரவினுள் மிக ஆழமாக உறுதிப்படுத்தியுள்ளது.

அதுவரை தமிழ் தீவிரவாதத் தலைவர்களாலும் தமிழ் சமூகத்தில் எழுச்சிபெற வைக்க முடியாதிருந்த ''தமிழ் தாயகக்கோட்பாட்டைச் சிங்களத் தீவிரவாத நபர்கள் சிலர் ஓரிரவிலேயே வெற்றி பெற வைத்தனர்.

அதுமட்டுமன்றி அத்தொலை நோக்கற்ற யுத்தத் தயாரிப்பு காணமாக அதுவரை எவரது கவனத்துக்கும் உட்படாதிருந்த நிலமொன்று ஈழ யுத்தத்தின் ''இதயபூமி''யாக்கப்பட்டு தீர்மான கரமான யுத்த நடவடிக்கைகள் பல அங்கு மேற்கொள்ளப்பட்டன. அதனால் இல்லாமல் போன சொத்துக்களதும், உயிர்களதும் எண்ணிக்கையும் அற்பசொற்பமல்ல.

இன்னும் உயிரைப் பாதுகாத்துக் கொண்டு இங்கு தங்கியுள்ள ஏழைக் கிராம மக்களும் வாழ்வுக்கும், மரணத்துக்கு மிடையே வாழ்கின்றனர். இன்று அது யுத்தத்துக்கு பலியிடப் பட்டுள்ள குடியேற்றமாகியுள்ளது போன்றதே.

இவை அனைத்தையும் விட இன்று வட - கிழக்குத் தமிழர்தாயகக் கோட்பாடு தொடர்பான அரசியல் சிக்கலிலும் அது மிகத் தீர்மான கரமான விடயமொன்றாகியுள்ளது. தொலை நோக்கற்ற யுத்தமய பெறுபேறு அப்படித்தானமையும் போலும்.

# படை அதிகாரிகளைப் பற்றியே கவலைப்படாத அரசு !

திரிபுரன்

அன்று, 02.07.1997 புதன்கிழமை. இரவாகி விட்டது. வழக்கம் போல் இரவு உணவை முடித்துவிட்டு படுக்கைக்குச் செல்ல ஆயத்தமானார்கள் இறக்கக்கண்டி மக்கள். கதவுகள் தட்டப்படும் ஓசை. திறந்து பார்த்தார்கள். எதிரே ஆயுதபாணிகளாக விடுதலைப் புலிப் போராளிகள் நின்று கொண்டிருந்தார்கள். 'திக்'கென்றானது இவர்களுக்கு.

''உங்களை விசாரிக்க வேண்டும். பெரியவர் சற்றுத் தள்ளி நிற்கிறார். தயவு செய்து எங்களுடன் வாருங்கள். பயப்பட வேண்டியதில்லை. விசாரித்து விட்டு விடுவிப்போம்.'' இப்படிக்கூறி பவ்வியமாக அழைத்துச் செல்லப்பட்டவர்கள் 39பேர் என்பது விடிந்தபிறகு தான் ஊருக்குத் தெரிந்தது.

இவ்வாறு தான் ஆரம்பித்தது அந்த 142 நாட்கள் நிறைந்த ''இறக்கக்கண்டி மக்கள் கடத்தல்'' என்ற நாடகம். அடுத்த நாளே அரசியல் ஆதாயம் தேடும் அரசியல்வாதிகள், புகழ் தேடும் புத்திஜீவிகள், வதந்திபரப்பும் வள்ளல்கள் எனப் பலதரத்தாருக்கும் தீனியாக அமைந்த இந்த நாடகம், 14.07.1997இல் ஏழு பேர் விடுதலையாகி, 30.9.1997இல் 12பேர் விடுதலையாகி, 27.11.1997இல் மீதி இருபது பேரும் சுகமே விடுதலையாகி வீடு சேர்ந்ததுடன் சுபமாக முடிவுற்ற போதிலும், இதன் பின்னணிகள் சற்றுப் பார்க்கப்பட வேண்டியவை.

''அன்று இரவு 9.40மணி. நன்றாக நினைவிருக்கிறது. என்னை மரியாதையாகவே அழைத்துப் போனார்கள் விடுதலைப்புலிகள். உடனடியாக விசாரித்துவிட்டு விடுவதாகச் சொன்னார்கள். ஆனால் அவ்வாறு அவர்கள் செய்யவில்லை. என்றாலும் எங்களை கடைசி நாள் வரை கண்ணியமாகவே நடத்தினார்கள்'' என்று கூறுகிறார் கடைசி அணியில் விடுதலையான இளைஞர் ஒருவர்.

''நான் வந்த போது மேலும் பலர் என்னைப் போல் கொண்டு வரப்பட்டு இருக்கிறார்கள் என்று தெரிந்தது. கண்கள் கட்டப்பட்டு நடத்தப்பட்டோம். சுமார் ஒரு மணி நேரம் நடந்திருப்போம். புல் தரை ஒன்றில் நித்திரை செய்ய அனுமதிக்கப் பட்டோம்.



விடிந்தது. பால் தேனீரும், பாணும் காலை உணவாக வழங்கப்பட்டது. தேனீர் வைப்பதற்கான பாத்திரம், லக்ஸ்பிறே, பாண் என்பவற்றை அவர்கள் கொண்டு வந்திருந்தார்கள். பின்னர் காலை ஏழுமணிதொடக்கம் 11 மணிவரை நடத்தப்பட்டோம். மத்தியானச் சாப்பாடாக சோறும், பருப்புக்கறியும் வழங்கப்பட்டது. ஓய்வெடுக்க அனுமதிக்கப்பட்டோம்.

இரவு தீ மூட்டி, புகை போட்டு நுளம்பு வராமல் காட்டின் மத்தியில் எங்களைப்படுக்க வைத்தனர். இரவுச் சாப்பாடு பருப்புக்கறியுடன் சோறு கிடைத்தது.

4ம்திகதி என நினைக்கின்றேன். காலை உணவின் பின்னர், அழைத்துச் செல்லப்பட்டோம். இந்தக் கட்டத்தில் நாங்கள் புதியவர்களிடம் ஒப்படைக் கப்பட்டோம். நடை, டிறக்ரர் பயணம். நடை என்றதன் பின்னர் ஒரு குளத்தருகே வந்து சேர்ந்தோம்.

குளிப்பதற்கு சவர்க்காரம் தந்தார்கள். ஐவ்வைந்து பேராகக் குளித்தோம். குளிக்கும்போது கண்கட்டை அவிழ்த்து விட்டார்கள். பிறகு கண்கள் கட்டப்பட்டன.

பிறகும் டிறக்ரர் பயணம். மதியச் சாப்பாடு தாமரை இலையில் வழங்கப்பட்டது. மீண்டும் இரவு வரை பயணம். கடற்கரைக்கருகில் கொண்டு வரப்பட்டு இராச்சாப்பாடு சோறு தரப்பட்டு, படகுகளில் ஏற்றப்பட்டோம்.

நீண்ட நேர ஓட்டத்தின் பின் படகு கரை தட்டியது. சோலை ஒன்றுக்கு கொண்டு வரப்பட்டோம். இந்த இடம் முல்லைத்தீவில் உள்ள ஒட்டிசுட்டான் என்பதைப் பின்னர் தெரிந்து கொள்ள முடிந்தது. விடுதலைப்புலிகள் அணியின் பொறுப்பாளர் ஒருவர் வந்து, எங்களைச் சந்தித்தார். ''நீங்கள் பயப்படவேண்டியதில்லை. எங்க

→9

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "மோதிரத்திற்காக எனது விரல்களை வெட்டினார்கள்"

-சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கையிலிருந்து

'யாழ் குடா நாட்டில் 1996 நடுப்பகுதியில் - ஆறு மாத காலத்துள் காணாமல் போன சுமார் 540 பேர்களின் கதி பற்றிய பல தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஒரு வருடத்துக்கு முன்பு, கைது செய்யப்பட்ட இவர்களில் இன்னமும் காணாமல் போனவர்களாகவே உள்ளவர்களில் பலர், ஆயுதப் படையினரின் சித்திரவதைகளினால், இறந்தோ, அல்லது திட்டமிட்டு தடுப்புக்காவல் நிலையில் கொல்லப்பட்டோ இருக்கலாம் என்றே அஞ்சப்படுகிறது."

-சர்வதேச மன்னிப்புச் சபை அண்மையில் (நவம்பர் 1997) வெளியிட்ட அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை அரச படைகளதும், புலிகளதும் மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் தொடர்பாக கண்டனம் தெரிவித்துள்ளதுடன், அந் நடவடிக்கைகள் பற்றிய தகவல்களையும் வெளிக் கொணர்ந்துள்ளது. மன்னிப்புச் சபையின் மூன்று உறுப்பினர்கள், யாழ் சென்று திரட்டிய தகவல்கள், கொழும்பில் முக்கிய அமைச்சர்கள், மற்றும் படை அதிகாரிகள், மனித உரிமையாளர்கள், ஆகியோரிடம், பெற்ற தகவல்கள், என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்பட்டிருக்கும் இவ்வறிக்கை, "வடக்கின் காணாமல் போதல்"களுக்கு நேரடியாக தெற்கின் அரசியல் தலைமைகளை பொறுப்பாக்க முடியா விட்டாலும் அரசாங்கம் இவற்றுக்குப் பொறுப்புச் சொல்லியாக வேண்டும் என்று சுட்டிக் காட்டியுள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம், பல அரசியல்வாதிகளதும், சர்வதேச மற்றும் உள்ளூர் மனித உரிமைகள் அமைப்புகளதும் நெருக்குதலின் காரணமாக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட விசாரணைச் (BOI-Board of investigation) சபையானது தனக்குக் கிடைத்த 760 முறைப்பாடுகளில் 180 பேரை இதுவரை இனங்கண்டுள்ளது. இது தவிர மனித உரிமை ஆணைக் குழுவும் யாழ் குடா நாட்டைச் சேர்ந்த 274 பேர் காணாமல் போனமை தொடர்பாக தகவல்களைத் திரட்டி வருகிறது.

"1994இல் பொ.ஐ.மு அரசாங்கம் பதவிக்கு வந்த போது அது மனித உரிமைகளைக் காக்க பல பாதுகாப்பு நடவடிக்கைகளை செய்வதாகவும், காணாமல் போதல்கள் மற்றும் சித்திரவதைகளை இல்லாமல் செய்வதாகவும் உறுதி கூறியது. அது பதவிக்கு வந்தபின் புலிகளுடன் பேச்சுவார்த்தையும் நடாத்தியது. ஆயினும் இந்தப் பேச்சுவார்த்தைகள் ஒருதலைப் பட்சமாக புலிகளால் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு யுத்தம் ஆரம்பமானபின் காணாமல் போதல்கள் மீளவும் தொடங்க ஆரம்பித்தன. சர்வதேச மன்னிப்புச் சபை 1995இல் இவ்வாறு காணாமல் போன 70 பேர் பற்றிய தகவல்களைப் பெற்றது. இவற்றில் பெரும்பாலானவை கிழக்கிலும் கொழும்பிலும் நடந்தவையாகும். 1996இல் காணாமல் போன கிட்டத்தட்ட 600 பேர் பற்றிய தகவல்கள் மன்னிப்புச் சபைக்கு கிடைத்துள்ளது. 1991க்குப் பிறகு பெருமளவு தொகையானவர்கள் காணாமல் போனது இதுவாகும். 1991இல் 410 பேர் காணாமல் போனதாக ஐக்கிய .நாடுகளின் செயற்குழு பதிவு செய்துள்ளது.

"1995க்கும் 96க்கும் இடையில் யாழ் குடா நாட்டில் அரச படைகள், கிட்டத்தட்ட நான்கு பெரிய இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டன. புலிகளிடமிருந்து கட்டுப்பாட்டை எடுத்துக் கொள்ள முனைந்த இந்த நடவடிக்கைக் காலகட்டத்தில் குடா நாட்டுக்கு யாரும் செல்வது பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. தவிரவும், அரசாங்கத்தால், அவசரகால தடைச்சட்டத்தின் கீழ், செய்தி தணிக்கையும் அமுலில் இருந்தது.

இக்காலகட்டத்தில் மூன்று லட்சம் பொதுமக்கள் புலிகளால் வலிகாமத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். இவர்களில் பலர் 1996 ஏப்ரல், மே மாதங்களில் தென்மராட்சி வடமராட்சியிலிருந்தும் வன்னியிலிருந்தும்-பல தடைகள் இதற்கெதிராக புலிகளால் மேற்கொள்ளப்பட்டபோதும்- மீளவும் தமது இடங்களை நோக்கி திரும்பினர். வேறு சிலர் தமது வீடுகள் ஷெல்களாலும் குண்டுகளாலும் உடைக்கப்பட்டு இருந்ததால், அல்லது இராணுவத்தினரால் பாவிக்கப்பட்டிருந்ததால், உறவினர்களது வீடுகளில் தங்கினர். குடா நாடு முழுவதும் பரவலாக இராணுவம் பல வீடுகளை தாம் எடுத்துக்கொண்டு அவற்றைச் சோதனைச் சாவடிகளாகவோ அல்லது தற்காலிக முகாம்களாகவோ மாற்றி இருந்தது.

இராணுவம் பொதுவாக இந்தக் காலமுழுவதும் உள்நாட்டு மற்றும், சர்வதேசிய தொடர்பு சாதனவியலாளர்கள், அங்கு போவதை முற்றாகத் தடை செய்திருந்தது. -ஓரிரு சந்தர்ப்பங்களில் தாமே தொடர்பு சாதனவியலாளர்களை கூட்டிச் சென்று காட்டியதை விட. இதனால் அங்குள்ள நிலைமைகள் பற்றிய சுதந்திரமான



## SRI LANKA
## Government's response to widespread "disappearances" in Jaffna

தகவல்கள் எவையும் எடுக்கப்பட முடியவில்லை. 1997இல் தொடக்கத்திலிருந்து மட்டுமே அங்கு தொடர்பு சாதனவியலாளர்கள் போக முடிந்தது.

யாழ் குடா நாட்டை அரச படைகள் கையில் எடுத்துக்கொண்டபின் அங்கு புலிகளது மனித உரிமை மீறல்களும் ஆங்காங்கே நடைபெற்றுள்ளன. ஆயினும், மிகவும் பாரதூரமான நிகழ்வுகள், இப்பகுதிக்கு வெளியேயே நடந்துள்ளன. த.வி.கூ.வின் பா.உ. தங்கத்துரை, ஐ.தே.க. பா.உ. மஹ்ரூப் மற்றும் பலரது கொலைகள் இவற்றுள் அடங்கும். சர்வதேச மன்னிப்புச் சபை கடந்த ஒக்டோபர் 15ஆம் திகதி நடந்த உலகச் சந்தை மீதான தாக்குதலின் போது கொல்லப்பட்ட 9 சிவிலியன்கள் பற்றியும் கூட அக்கறை கொண்டுள்ளது.

கடந்த பல வருடங்களாக சர்வதேச மன்னிப்புச் சபை புலிகளின் தலைமையிடம் திரும்பத் திரும்ப பொது மக்களை திட்மிட்டுக் கொல்வதையும், பிற மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவதையும் உடனடியாக நிறுத்தும்படியும் கோரி வந்துள்ளது.

தம்மைப் பற்றிய தகவல்களை கொடுப்பவர்கள் என்பதற்காகவும், சோதனைச் சாவடிகளை தாக்கும் போதும் பொது மக்களை புலிகள் பாரபட்சமின்றி கொலை செய்வதன் மூலமும், மனித உரிமை மீளல்களை நடாத்தியுள்ளார்கள்.

1996 நவம்பர் 9இல் அவர்கள் யாழ் நவீன சந்தையில் வீசிய கிரனைட்டினால், சுந்தராம்பாள் ரகுநாதன் என்ற 22 வயது கடை ஊழியை ஒருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் 12 பேர் காயமடைந்தனர். தவிரவும் பல சிவிலியன்கள் நிலக்கண்ணி வெடியிலும், யுத்தத்தின் போது அகப்பட்டும் கொல்லப்பட்டுள்ளார்கள்.

சர்வதேச மன்னிப்புச் சபை திரட்டிய தகவல்களில் சிவயோகினி பற்குண மாணிக்கம் என்ற பெண்மணி கொல்லப்பட்ட சம்பவமும் ஒன்றாகும். நல்லூரைச் சேர்ந்த இவரது உடல் 1996 ஜுலை மாதம் 19ஆம் திகதி கண்டு பிடிக்கப்பட்டது. வலிகாமத்திலிருந்து வெளியேறும்படி கூறிய போது அவர் வெளியேறாமையே இவரது கொலைக்கு காரணமாக இருக்கலாம் என தெரியவருகிறது. பொதுவாக இவ்வாறான கொலைகள் பற்றி திரட்டப்பட்ட 10க்கும் மேற்பட்ட சம்பவங்களில் காணப்படும் ஒரு அம்சம் என்னவென்றால் அவர்களில் பலர் வீட்டிலிருந்து பிடித்துச் செல்லப்பட்டுட சிறிது நேரத்தில் கொல்லப்பட்டுள்ளார்கள். அவர்களின் உடலின் மீது "துரோகி" அல்லது காட்டிக் கொடுப்பவர் என்பதற்காக கொல்லப்பட்டவர் என்ற ஒரு தட்டி வைக்கப்பட்டிருக்கும். காணாமல் போதல்களை பொறுத்தவரை அவை பொதுவாக வடக்குக்கு வெளியேயோ உள்ளேயே நடக்கும்அரச படைகளை சேர்ந்தவர்கள் மீதான புலிகளின் தாக்குதல்கட்குப் பழிவாங்கும் விதத்திலேயே நடந்துள்ளன. 19. ஓகஸ்ட் 96இல் தான் பெருமளவு காணாமல் போதல்கள் நடைபெற்றுள்ளதாகத் தெரியவருகிறது. யாழ் குடா நாட்டுக்கு வீடமைப்பு அமைச்சர் வந்திருந்த போது (யூலை 4ஆம் திகதி) நடந்த 12 சிவிலியன்கள் கொல்ப்பப்ட்ட புலிகளின் தற்கொலைத் தாக்குதல்களின் போதும் இத்தாக்குதலில் சீமெந்து தொழிலக தலைவரும் யாழ் நகருக்குப் பொறுப்பான பிரிகேடியர் உட்பட 8 அரச படையினரும் கொல்லப்பட்டனர்

முல்லைத் தீவுத் தாக்குதலின் போது 1300 படையினர் கொல்லப்பட்டபோதும் அரச படைகளின் மனித மீறல் சம்பவங்கள் அதிகமாக நடந்துள்ளன.

முல்லத் தீவு தாக்குதல் நடந்தது யூலை 19ஆம் திகதி. இந்தத் தாக்குதல் தான் இலங்கையின் யுத்த வரலாற்றில் ஒரு தனிப்பட்ட தாக்குதலில் பெருமளவு படையினர் கொல்லப்பட்ட தாக்குதலாகும்.

இந்தக் காலத்தில் "காணாமல் போதல்"கள் பொதுவாக சுற்றி வளைப்பு தேடுதல்களின் போது கைது செய்யப்பட்ட பின்னரே நடந்துள்ளன. 1996 ஓகஸ்ட் 27ஆம் திகதி குரு நகர் வலிகாமம் பகுதிகளில் பலர் இவ்வாறு கைது செய்யப்பட்டு காணாமல் போயினர்.

புனித ஜேம்ஸ் தேவாலயம் யாழ் பிரதான வீதி ஆகிய இடங்களில் எட்டு காட்டிக்கொடுப்போர் முன்னிலையில் நூற்றுக்கணக்கானோர் நிறுத்தப்பட்டடினர். அவர்களில் 10 பேர் அளவில் பிடித்துச் செல்லப்பட்டனர். ஜோசப் கணேஸ்வரன், வேதநாயகம் ஜெரோம், எமிலி ஜெனஸ், பில்டன் அஸ்பொன்ஸ் ஆகியோர் கண்கட்டப்பட்ட நிலையில் இராணுவ ட்ரக் வண்டியில் ஏற்றப்பட்டு கூட்டிச் செல்லப்பட்டனர். இதைக் கண்ணால் கண்ட சாட்சிகள் பலர் உள்ளனர். ஆயினும் இவர்கள் பற்றிய தகவல்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

இராணுவ நடவடிக்கைகளுக்கு உதவி பெற அங்கு கொண்டு செல்லப்பட்ட பொலிஸார் இந்த "காணாமல் போதல்"களுக்குப் பொறுப்பாகக் கூறப்படவில்லை. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்.) இன் உறுப்பினர்கள் இராணுவத்தினருக்கு தகவல்கள் கூறுவோராக பயன் படுத்தப்பட்டிருப்பதாகவும் புலிகளை இனங்காண இவர்கள் இராணுவத்துக்கு உதவுவதாகவும் கூறப்படுகிறது. வவுனியாவிலும் கிழக்கிலும் பலர் காணாமல் போதற்கு கடந்த காலங்களில் காரணமாக இருந்த பிற இயக்கங்கள் இந்த நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டதாகத் தெரியவில்லை. எப்படியாயினும் ஒரு அறிக்கையின்படி தமிழீழ விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த சிலர் - இவர்கள் இராணுவத்துடன் பிற பகுதிகளில் கூட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.- ஆட்கடத்தல் கப்பம் வாங்குதல் ஆகிய செயல்களில் ஈடுபட்டதாகத் தெரிய வருகிறது.

ஒரு முன்னை நாள் புலிகளது உளவுப் பிரிவு உறுப்பினர் தான் எப்படி தனது விருப்பத்துக்கு மாறாக சுற்றி வளைப்பு நடவடிக்கைகளின் போது தனது தலை மூடப்பட்டு கண்கள் ஓரளவு பார்க்கக்கூடியதாக கட்டப்பட்ட நிலையில் புலி உறுப்பினர்களை காட்டுவதற்காக தலையாட்டுமாறு கேட்கப்பட்டதாகவும் அப்படி யாரையும் காட்டாத பட்சத்தில் முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு தானும் பிற தகவல் கொடுப்போரும் தாக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு தாக்குதல் நடந்த பின் ஆகக் குறைந்தது 39 இளைஞர்கள் இவ்வாறு நாவற்குழி தென்மராட்சி பகுதிகளில் பிடித்துச் செல்லப்பட்ட பின் காணாமல் போயுள்ளார்கள். பிடிபட்ட ஒருவர் தெரிவித்த தகவல்களின் படி நாவற்குழியைச் சேர்ந்த வாசிகள் அனைவரும் கோயில கண்டி, லக்ஷ்மி மகாவித்தியாலயத்தின் முன்பாக கூடுமாறு பணிக்கப்பட்டார்கள். நூற்றுக்கணக்கான மக்கள் கிடுகு வேலிகளின் பின்னால் இருந்த முகமூடிகளின் முன்பாக நடந்து செல்ல அனுமதிக்கப்பட்டார்கள். இவர்களில் 13 பேர் பிடிக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டார்கள்.

முதலில் பிடிக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்ட ஒருவரின் தகவல்களின் படி எல்லோருமே கண் கட்டப்பட்டு கைகளும் பின்புறமாக பிணைக்கப்பட்டு பிடித்துச் செல்லப்பட்டார்கள். இவ்வாறே மறவன்புலவு வாசிகளுக்கும் நடந்தது.

மன்னிப்புச் சபை விசாரித்த போது பலர் தெரிவித்த தகவல்களின்படி கைது செய்யப்பட்டவர்களில் கொல்லப்பட்டவர்களது உடல்கள் பாழும் கிணறுகளிலும், மலகூடங்களிலும், இராணுவ முகாம்களுக்கு அருகிலும் வீசப்பட்டிருந்தன. இந்த உடல்களிலிருந்து மனித உடலின் அழுகிய நாற்றம் வீசியதாகக் கூறப்படுகிறது.

மீசாலையைச் சேர்ந்த 21 வயதான ஒரு விவசாயியின் மகன் தனது பாட்டியைச் சந்திக்கச் சென்ற வேளையில் தாம் கைது செய்யப்பட்டதாகவும் கூறினார்.

இராணுவத்தினர் என்னை துப்பாக்கியால் அடித்து நான் விழும்வரை தாக்கினார்கள். பின் எனது கைககளையும் கால்களையும் ஒன்றாகக் கட்டினார்கள். இதனால் எனக்கு சுவாசிப்பதே கஷ்டமாக இருந்தது.

அதன் பின் அவர்கள் எனது கழுத்தில் ஒரு துணியைச் சுற்றி அதை இரு புறமும் இழுப்பதன் மூலம் எனது கழுத்தை நெரித்தார்கள். இதன் பின் துவக்கில் பூட்டப்பட்டிருந்த கத்தி மூலம் என்னை வெட்டினார்கள். ஒரு இராணுவத்தான் எனது முதுகில் ஆறு இடங்களில் கத்தியால் குத்தினான். இதன் பின் எனது கழுத்தை வெட்டினார்கள். எனது கழுத்தைச் சுற்றி துணி இருந்ததால் அது எனக்குப் பெரிய காயத்தை ஏற்படுத்தவில்லை. இதன் பின் ஒருவன் எனது தலையில் வெட்டினான். எனக்கு இது பலத்த காயத்தைக் கொடுத்தது. நான் நினைவிழந்தேன்.

இந்த நிலையில் எனது கை விரலில் இருந்த இரு மோதிரங்களை கழற்ற அவர்கள் முயல்வதை என்னால் உணர முடிந்தது. அது முடியாமல் போகவே அவர்கள் எனது இரு விரல்களையும் வெட்டினார்கள். நான் திரும்பவும் உணர்விழந்தேன்.

எனக்கு உணர்வு வந்த போது நான் ஒரு மல கூட குழிக்குள் வீசப்பட்டிருந்ததை உணர்ந்தேன். அங்கிருந்த பூச்சிகள் எனது காயங்களை கடித்தவழியில் நான் கத்தினேன்.

நல்லவேளையாக இராணுவத்தினர் முகாமுக்கு திரும்பி விட்டிருந்தார்கள். இதனால் இவரது சத்தம் அவர்களுக்கு கேட்கவில்லை. அந்த பகுதியில் இருந்த மக்கள் இதைக் கேட்டார்கள். பெற்றோர் மறு நாட் காலையில் அவரை தேடி வந்தபோது அவரது அழு குரலைக் கேட்டனர். இதன் பின்னர் அவர் காப்பாற்றப்பட்டார். இதற்கு சில வாரங்களின் பின்னர் இன்னொரு உடலும் மலசல குழியில் கண்டு பிடிக்கப்பட்டது. வேறு சில சாட்சிகள் எவ்வாறு இராணுவத்தினரால் பல உடல்கள் எரிக்கப்பட்டன என்று தெரிவித்தனர். இவ்வாறு பல்வேறு விடயங்களை அவ்வறிக்கை கூறுகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மூதூர்: அரச மரங்களின் கதை!

சரிநிகரில் வெளியாகும் கட்டுரைகள், ஆக்கங்கள் என்பன எனது பிரதேசமாகிய கொட்டியாபுரப்பற்றில் (மூதூர்) நடந்தேறிய - காலத்தால் அழியாத பல சம்பவங்களின் வரலாற்று உண்மைகளாக சுவடுகள் பதித்தவைகள்.

சரிநிகர் 134இல் வெளியான 'அரச மரமும் அரசின் அதிகார பலமும், என்ற ஏ.றவூப் அவர்களின் கட்டுரை, என்னையும் பின் நோக்கி நகர்த்தி விட்டு, எழுதவும் வைத்துவிட்டது.

1948ம் ஆண்டு பொதுத்தேர்தலில் மூதூர் தொகுதியின் (கிண்ணியா பிரதேசமும் உள்ளடக்கியிருந்தது) பாராளுமன்ற உறுப்பினராக கிண்ணியாவைச் சேர்ந்த ஏ.ஆர்.ஏ.எம். அபூபக்கர் தெரிவு செய்யப்பட்டார். அதனைத் தொடர்ந்து தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களில் 1970வரை மூதூரைப் பிறப்பிடமாகக் கொண்ட எவரும் தெரிவு செய்யப்படவில்லை.

1977ல், முதன் முதலாக மூதூர் தொகுதியில் ஐ.தே.கட்சி கால் ஊன்றியதும், இரட்டை அங்கத்தவர் தொகுதியை ஒற்றை அங்கத்தவர் தொகுதியாக்கி சேருவில என்ற புதிய தொகுதி உருவாக்கப்பட்டதும் அத்தொகுதியில் ஐ.தே.கவைச் சேர்ந்த எச்.டி.எல். லீலா ரெட்ண பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டதும் 1977ற்கு பின்னர் புதிய தேர்தல் முறை (விகிதாசாரம்) அறிமுகம் செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கவைகள்.

### சிங்கள மக்களும் தலைமைத்துவமும்

மூதூர் பகுதியின் தமிழர், முஸ்லிம்கள் வாழும் இடங்களின் பிரதான சந்திகளில் திட்டமிட்டு சிங்களக்குடிகள் குறியேற்றப்பட்டனர். இவர்களில் சிலர் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பினும், இவ்விடத்தில் குடியேற்றப்பட்டதின் பின்னர், 'தேசிய' நலன்கருதி இலங்கையின் பௌத்த மதம் சிங்களவர்களுக்கு மட்டும் தான் உரிமையானதென்ற நோக்கத்தை மையமாகக் கொண்டு, இனத்தை பிரதிஷ்டை செய்யும் எண்ணத்துடன் அவர்கள் பௌத்த மதத்திற்கு மாறி அவ்விடங்களில் போதி மரத்தை ஏற்படுத்தத்தொடங்கினார்கள்.

கிளிவெட்டி துறைசந்தியில், எஸ். மாட்டின் சில்வா, கிளிவெட்டி கூட்டுறவுச் சந்தியில் கே.அப்புஹாமி, 58ம் கட்டை சந்தியில் ஆர். வில்பட், ஏ. கருணாரெட்ண, 59ம்கட்டைச் சந்தியில் பி. ஜயதிஸ்ஸ, டி. ஜனப்பிரிய, தோப்பூர் சந்தியில் எல். எம். பொடிநோனா, ஆர். வில்சன் (லியனமாத்தயா), மல்லிகைத்தீவு சந்தியில் நிமாலின் பெரேரா (சிறிசேன), சிறில் பெரேரா, பக்கனூர் (இருதயபுரம்) ஏ.ஆர். அப்புஹாமி.

இது போன்று பலர் சாலைகளின் சந்திகளை வசப்படுத்திலிருந்தார்கள். இப்பெரும்பான்மை மக்கள் சூழ இருந்த தமிழ் முஸ்லிம் மக்களுடன் நல்லுறவை வளர்த்து வாழ்ந்து வந்ததையும் மறுக்க முடியாது. அதற்குக்காரணம் அவர்களுக்குரிய 'சீரிய' தலைமைப் பீடம் இல்லாமை எனலாம்.

அக்காலத்தில் தான் (ஆதிவிநாயகப் பெருமாள் வீற்றிருந்த இடம்) சேருவில விகாரையின் விகாராதிபதி தம்ப கஸ்ஸாவே ஸ்ரீ சுமேதரகெர தேரர் அவர்கள் வழிகாட்டியாக மாறினார். அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட 'தேசிய துணிவு' பாரிய விளைவுகளை ஏற்படுத்தியது.

### அரச மரங்களும் தாக்கங்களும்

மூதூர் தொகுதியின் அரசியல் தலைமைத்துவம் மூதூர் பகுதியைப் (கிளிவெட்டி) பிறப்பிடமாகக் கொண்ட அமரர் அருணாசலம் - தங்கத்துரையினால் 1970ம் ஆண்டு வரலாற்றிலே முதன் முதலாக பிரதிநிதித்துவப் படுத்தப்படுகிறது. அப்போது அவரின் கிளிவெட்டி வாசஸ்தலத்திற்கு (1971) தொலைபேசி இணைப்பு வழங்குவதற்காக அவ்வொழுங்கை சந்தியில் நின்றிருந்த அரசமரத்தின் கிளைகள் தொலைபேசி இணைக்க வந்த ஊழியர் அமரர் சுப்பிரமணியம் - கந்தவனம் (தில்லை நகர் - திருகோணமலை) அவர்களால் தறிக்கப்பட்டது.

அதனையடுத்து கிளிவெட்டியில் வசித்த மாட்டின் சில்வா மூலமாக கிடைத்த தகவலின் அடிப்படையில் விகாராதிபதி தம்ப கஸ்ஸாவே ஸ்ரீ சுமேதரகெர தேரர் தலைமையில் பொலிசார் உட்பட அவ்விடத்தில் வாழும் பெரும்பான்மை மக்கம் பலரும் கூடி எதிர்ப்புத் தெரிவித்ததுடன் சுப்பிரமணியம் - கந்தவனம் (ரெலிபோன் ஊழியர்) அவர்களையும் பொலிசார் மூலமாகச் சிறையிட்டனர்.

''நம்மட தமிழ் ஊருக்குள்ள இருக்கிற நாங்க வைச்ச அரச மரத்தில, அதுவும் நம்மட எம்.பி.க்குத் தேவையான போது அதில ஒரு கிளை வெட்டினதிற்கு இந்த ஆட்டம் ஆடுறானுகள்'' என்ற நியாயபூர்வமான எண்ணங்கள் அவ்வூர் வாசிகளின் மனதில் தோன்றியதன் காரணமாக அருணாசலம் - குமாரதுரையின் (தங்கத்துரையின் தம்பி, தற்போது வெளிநாட்டிலிருக்கிறார்.) தலைமையில் அன்று இரவே அரச மரத்தின் அடிச்சுவடே இல்லாமல் தோண்டி அப்புறப்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து சி. தங்கராஜா, இ. நவரட்ணம் போன்ற 10 பேருக்கு மேற்பட்ட அப்பாவிகள் உட்பட பலர் கைது செய்யப்பட்டனர்.

கிளிவெட்டியில் நடந்த இச்சம்பவங்கள் ஏனைய தமிழப் பகுதிகளிலும் எதிரொலிக்கத் தொடங்கியது. 1978ம் ஆண்டு நிலாவெளி - கோபாலபுரத்திலும் இதே சாயலில் ஒரு அரச மரம் வெட்டப்பட்டது.

### அரசடி

திருகோணமலை நகரத்தின் மத்தியிலே (தந்தை செல்வநாயகம் வீதி ஆரம்பமாகும் சந்தி) அரசடிச்சந்தி என்றொரு இடம் உண்டு. தற்போது அவ்விடத்தில் அரசமரம் இல்லாவிடினும் 'அரசடி' என்ற பெயரில் கிராம உத்தியோகத்தர் பிரிவு இன்னமும் உள்ளது.

அச்சந்தியிலே பன்நெடுங்காலமாக ஓர் அரசமரமும், அதன் கீழ் விநாயகர் படமும் (1963) அச் சூழலை பிறப்பிடமாகக் கொண்ட அமரர் திருமதி விஸ்வலிங்கம் - சின்னப்பிள்ளை அவர்களால் பூஜிக்கப்பட்டு வந்தது. எவரும் எதிர்பாராமுகமாக மரத்தடியின் மறுபக்கம் போதி மாதவனின் சிலை ஒன்று திடீரென வைக்கப்பட்டிருந்தது. 'அரசமர' சம்பவங்கள் அப்பகுதி மக்களையும் உலுக்கியதால் வேகம் கொண்ட அமரர் சின்னத்தம்பி - செல்லையாவின் தலைமையில் அந்த இந்துக்களின் வழிபாட்டுத் தலமாக அமைந்திருந்த பிரமாண்ட புராதன அரச விருட்சம் (1963), அப்பகுதி மக்களின் கண்ணீர் வெள்ளத்தோடு அப்புறப்படுத்தப்பட்டது.

### விளைவுகள்

மதத்தால் இனத்தைச் சுட்டி நிற்கும் நிலைமை இலங்கையில் தோன்றியுள்ளமைதான், இனங்களுக்கிடையில் விரிசல்கள் பெருமளவு விசாலித்திருப்பதற்கான காரணம் எனலாம்.

பௌத்தமதம், சிங்கள பெரும்பான்மை இன மக்களுக்கே உரித்தென்பது தவறான கருத்து. அல்லாவிடின் உலகின் பிற நாடுகளில் பௌத்த மதத்தை அனுஷ்டிப்பவர்கள் அனைவரும் 'சிங்கள' மக்களாகவல்லோ அடையாளப்படுத்தப்பட வேண்டும்?

மூலத்தைக் கருத்தில் கொண்டால் போதிமரம் இந்துக்களுக்கும் வழிபாட்டு ரீதியாக உரித்தாகின்ற தென்பதை ஏற்றுக் கொண்டு தான் ஆக வேண்டும்.

வாழ்ந்த, வாழுகின்ற இடங்கள் யாவும் 'எமது பிரதேசம்' என இனஅடிப்படையில் தடம் பதிப்பதற்கு அரச மரங்களை ஆதாரமாகப் பயன்படுத்த எடுக்கும் முடிவுகள் என்றுமே நன்மை பயக்காது - தர்மமும் ஆகாது.

இவைகளையெல்லாம், இலங்கையின் விகாராதிபதிகளும், இன்றைய எதிர்கால அரசியல் தலைவர்களும் கருத்தில் கொள்ளல் அவசியம். அலட்சியப் போக்கில் இவை உணரப்படாத பட்சத்தில், மேலும் இன, மத பூசல்கள் விரிவடைந்து கொள்வதோடு இப்படியான 'அரச மரதறிப்புகள்' முற்றின்றி தொடர்வதற்கான நிலைமைகளையும் தவிர்க்க முடியாமற் போகலாம்.

**கனகசபை தேவகடாட்சம்**
*மூதூர்*

| பாராளுமன்ற உறுப்பினர் | பிறப்பிடம் | கட்சி | ஆண்டு | தேர்தல் தொகுதி |
|---|---|---|---|---|
| ஏ ஆர்.ஏ.எம். அபூபக்கர் | கிண்ணியா | ஐ.தே.க | 1948 | |
| எம்.ஈ.எச். முகம்மது அலி | கிண்ணியா | சுயேட்சை | 1952 | |
| எம்.ஈ.டபிள்யூ. முகம்மது அலி | கிண்ணியா | சுயேட்சை | 1956 | |
| டி.ஏகாம்பரம் | திருகோணமலை | தமிழரசுக்கட்சி | 1960 | இரட்டை அங்கத்தவர்கள் |
| எம்.ஈ.எச். முகம்மது அலி | கிண்ணியா | சுயேட்சை | 1960 | இரட்டை அங்கத்தவர்கள் |
| டி. ஏகாம்பரம் | திருகோணமலை | தமிழரசுக்கட்சி | 1960 | இரட்டை அங்கத்தவர்கள் |
| ஏ.எல். அப்துல் மஜீது | கிண்ணியா | ஸ்ரீ.ல.சு.க. | 1960 | இரட்[illegible] அங்கத்தவர்கள் |
| (டி. ஏகாம்பரத்தின் இறப்பையடுத்து 23.06.1962ல் இடைத்தேர்தல்) | | | | |
| ஏ.எல். அப்துல் மஜீது | கிண்ணியா | ஸ்ரீ.ல.சு.க. | 1962 | இரட்டை அங்கத்தவர்கள் |
| எம்.ஈ.எச் முகம்மது அலி | கிண்ணியா | தமிழரசுக்கட்சி | 1962 | இரட்டை அங்கத்தவர்கள் |
| ஏ,எல்.அப்துல் மஜீது | கிண்ணியா | தமிழரசுக்கட்சி | 1965 | இரட்டை அங்கத்தவர்கள் |
| எம்.ஈ.மும்மது அலி | கிண்ணியா | ஸ்ரீ.ல.சு.க. | 1965 | இரட்டை அங்கத்தவர்கள் |
| ஏ.எல்.அப்துல் மஜீது | கிண்ணியா | ஸ்ரீ.ல.சு.க. | 1970 | இரட்டை அங்கத்தவர்கள் |
| ஏ. தங்கத்துரை | கிளிவெட்டி மூதூர் | தமிழரசுக்கட்சி | 1970 | இரட்டை அங்கத்தவர்கள் |

# இலக்கியமும், அரசியலும் பிரிக்க முடியாதன!

ரவீந்திரன் அவர்கள் எழுதியுள்ள கடிதம் தொடர்பாக என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இங்கு தரலாம் என நினைக்கின்றேன்.

ரவீந்திரன் அவர்கள் இலக்கியத்தையும், அரசியலையும் இரண்டாகப் பிரித்து வைத்துப் பார்ப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இலக்கியத்திற்கும், அரசியலிற்கும் உள்ள பிரிக்க முடியாத தொடர்பை அவர் மறுதலிப்பது ஆச்சரியத்திற்குரியதே. கவிதைத்தளம் என்ற ஒன்றை அரசியலில் இருந்தோ, சமூகத்திலிருந்தோ பிரிக்க முடியாது என்பதே என் கருத்து. அதனை எனது முதலாவது கடிதத்திலும் வலியுறுத்தியிருந்தேன். அவ்வகையில் 'அழகியல்' என்பது சமூக இயக்கங்களின் போராட்டங்களினால் புதிய அர்த்தத்தைப் பெறுகின்றது என்பதை மறுக்க முடியாது. கோணேஸ்வரிகள் விவாதமானது இலங்கைத் தமிழ்ச் சமூகத்தின் விமர்சன வறுமையின் ஒரு குணாம்சமான, இறுகிப் போன, முன்னரே விதைக்கப்பட்ட கருத்துக்களை வெளிப்படுத்தல் என்பதை எடுத்துக் காட்டுவதற்கு நல்ல ஒரு உதாரணமாகும்.

கவிதை, நாவல் போன்ற இலக்கிய வடிவங்களில் கருத்தியல் எவ்வளவு தூரம் மேலாதிக்க நிலையைச்சுட்டி நிற்கின்றன என்பதை வியாக்கியானப் படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் உத்திகளில் ஒன்றாக அவற்றை கட்டவிழ்த்துப்பார்த்தல் (Deconstruction) என்பது அமைகின்றது. அவ்வகையில் வாக்கியங்களிற்குப் பின்னால் உள்ள கருத்தியலை அறிய வாக்கியங்களினூடாகச் செல்வது சில சமயங்களில் அவசியமாகின்றது. அது சொற்களோடும், வாக்கியங்களோடும் தங்கிவிடாது. கருத்தியலை வியாக்கியானப்படுத்தும் ஒரு உத்தி. இங்கு கவிதை வெளி எந்தக் கருத்தியலிற்குள் அடங்கிச் சிறைப்பட்டுக் கிடக்கின்றது என்பதைக் கவனிக்கத் தவறலாகாது.

**கமலினி, மட்டக்களப்பு**

# ஆண் மேலாதிக்க மொழி!

*கடந்த வாரம் சரிநிகர் வாசகர் எனத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட அன்ரனி பெர்னாண்டோ என்பவர் சரிநிகருடன் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு, நீங்கள் ஏன் 'கற்பழிப்பு' என்ற சொல்லைப் பாவிப்பதில்லை, பதிலாக 'பாலியல் வல்லுறவு' என்ற சொல்லைப் பாவிக்கின்றீர்கள் என வினவினார்.*

*கற்பழிப்பு என்ற சொல்லில் உள்ள ஆணாதிக்கத் தன்மையையும் பெண்ணினுடைய ஒழுக்கத்தை (?) அது எவ்வாறு தீர்மானிக்கிறது என்பதையும், மொழி எவ்வாறு ஆண் நிலைப்பட்டுள்ளது என்பதையும் விளக்கி, பதிலீடாக சரிநிகர் ஆரம்பித்த 1990ஆம் ஆண்டிலிருந்தே பாலியல் வன்முறை என்ற சொல்லைப் பாவித்து வருவதாகக் கூறினேன். எனினும் பாலியல் வன்முறை என்ற சொல் sexual violence என்ற அர்த்தத்தைப் பிரதிபலிப்பதால் Rape என்பதைப் பிரதிபலிக்கக் கூடிய சரியான தமிழ் சொல் ஒன்றிற்கான தேடலில் இருந்தோம்.*

*ஏறத்தாழ 3, 4 வருடங்களின் பின்னர், 'பாலியல் வல்லுறவு' என்ற சொல்லை அறிந்து கொண்டோம். அது Rape என்பதற்கு நெருங்கிய சொல்லாக இருந்ததால் அதனையே பின்னர் பாவித்து வருகிறோம் என்றும் விளக்கினேன்.*

*'அப்படியானால் ஏன் தினகரன், வீரகேசரி என்று எல்லாப் பத்திரிகைகளும் இப்போதும் கற்பழிப்பு என்ற சொல்லையே பாவிக்கிறார்கள்' என்று கேட்டார் அவர். 'இந்தக் கேள்வியை நீங்கள் அவர்களிடமே கேட்டுப் பாருங் கள்' என்றேன்.*

*மறுநாள் திரும்பவும் அவரே தொடர்பு கொண்டு, தான் இரண்டு தினசரிகளுடனும், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு இது தொடர்பாகக் கேட்டதாகவும், கற்பழிப்பு என்ற சொல்லையே தாங்கள் தொடர்ந்து பாவித்து வருவதால் அதனை உடனடியாக மாற்ற முடியாது என்று அவர்கள் முதலில் 'பிகு' பண்ணினாலும் அச்சொல் தவறானது என்பதை அவர்கள் நீண்ட உரையாடலின் பின் ஏற்றுக் கொண்டதாகவும் கூறினார். கூடவே இங்குள்ள சில பெண்கள் அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு இவ்வாறான தவறான சொற்பிரயோகங்கள் பத்திரிகைகளில் இடம்பெறுகின்றனவே அவற்றைத் தடுக்க பெண்கள் அமைப்புக்களான நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்று தான் கேட்டதாகவும், எவரும் தனக்குத்திருப்தியான பதிலைத் தரவில்லை என்றும், சிலர் இது தொடர்பாக சரிநிகருடன் பேசுங்கள் என்று கூறியதாகவும் அவர் சொன்னார். கூடவே ஒரு கலந்துரையாடல் ஒன்றில் அவர்கள் பெண்கள் அமைப்பின் பிரதிநிதி தாங்கள் சொல்லித்தான் சரிநிகரே 'பாலியல் வல்லுறவு' என்ற சொல்லைப் பாவிக்கின்றனர், என்றும் சொன்னார். அது உண்மையா என்று கேட்டும் வைத்தார்.*

*புலிகள், வெளியிட்ட 'தமிழீழ ஒறுப்புச் சட்டம்' என்ற நூலில்தான் 'பாலியல் வல்லுறவு' என்ற சொல் முதன் முதலாகப் பாவிக்கப்பட்டிருக்கிறது. அது புலிகளது புத்தகமாயினும் அந்தச் சொல் பெருமளவுக்கு பொருத்தமான சொல்லாக இருப்பதாக எமக்குப் பட்டதால், நாங்களும் அச்சொல்லை எடுத்துப் பாவிக்கத் தொடங்கினோம். நீங்கள் குறிப்பிட்ட பெண்கள் இயக்கத் தலைவி எமக்கு இது பற்றி ஒரு போதும் சொன்னதில்லை. ஒரு வேளை புலிகள் இந்தச் சொல்லைப் பாவிப்பதற்கு அவர்தான் காரணமோ என்பது எங்களுக்குத் தெரியாது. நீங்கள் அவரிடமே கேட்டுப் பாருங்கள் என்றேன்.*

*இது நடந்து இரண்டோ மூன்று நாட்களுக்குப் பிறகு தினகரன், வீரகேசரி ஆகிய இரண்டு பத்திரிகைகளிலும் கிருஷாந்தி பாலியல் வல்லுறவு செய்யப்பட்டு கொல்லப்பட்ட வழக்கு விசாரணை தொடர்பான செய்தியில் 'பாலியல் வல்லுறவு' என்ற சொல்லே பாவிக்கப்பட்டிருந்தது. தினகரனில் செய்திப் பிரிவுக் கூட்டம் ஒன்றில் பாலியல் வல்லுறவு என்ற சொல்லையே பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டதாகவும் அறியக் கிடைத்தது. (இதற்கு கொஞ்சக் காலத்திற்கு முன்னமிருந்தே, வாசகி ஒருவர் சுட்டிக் காட்டியதன் காரணமாக தினமுரசு பாலியல் வல்லுறவு என்னும் பதத்தைப் பாவிக்கத் தொடங்கியிருந்தது.)*

*இது நடந்து சில நாட்களின் பின்னர் வீரகேசரியில் 'சந்தியில்' என்ற பத்தியில் கற்பழிப்பு என்ற சொல்லைத் தவிர்த்து பாலியல் வல்லுறவு எனும் சொல்லைப் பயன்படுத்துமாறு கோரும் கடிதம் ஒன்று வெளியாகியிருந்து. இதனை பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த செல்வி திருச்சந்திரன் எழுதியிருந்தார். நல்ல விடயம். இவ்வாறான விடயங்களில் பெண்கள் அமைப்புகள் முனைப்புடன் செயல்படுவது வரவேற்கப்பட வேண்டியதே. கூடவே அவர்கள் ஆணாதிக்க நிலைப்பட்ட மொழி குறித்தும் அவதானமாக இருப்பது அவசியம். குறித்தகடிதத்தில் இப்படி ஒரு வரி வருகிறது.*

*'இது ஒரு ஆண் மேலாண்மைக் கருத்தியலின் வெளிப்பாடு.'*

*இதில் 'மேலாண்மை' என்ற சொல் கூட ஒரு ஆண் நிலைப்பட்ட சொல் என்றே சரிநிகர் கருதுகிறது. மேலாண்மை என்ற சொல் தரும் அர்த்தத்தைக் கொண்ட 'மேலாட்சி', 'மேலாதிக்கம்' போன்ற சொற்கள் தமிழில் உண்டு. சரிநிகர் எப்போதும் மேலாண்மை என்பதற்குப் பதிலாக மேலாட்சி என்றே பாவித்து வந்திருக்கிறது. இது மட்டுமன்றி மனிதன், தமிழன், ஒருவன் என்பன போன்ற பல சொற்களை பால் நிலைப் பொது சொற்களாகப் பாவிப்பதைத் தவிர்த்தும் வருகிறது.*

*இதை எழுதும் போது தான் இன்னொரு விடயம் ஞாபகத்துக்கு வருகிறது, ஆங்கிலத்தில் இவ்வாறான ஆண் நிலைப்பட்ட சொற்களைத் (உதாரணமாக Chairman, Human) தவிர்க்குமாறும், பதிலாக புதிய சில சொற்களை அறிமுகம் செய்தும் பட்டியல் ஒன்றை ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு அனுப்பிவைத்திருந்தது ஒரு பெண்கள் அமைப்பு. ஏன் இதே போல் தமிழ் பெண் நிலைவாதிகள் முனையக்கூடாது?*


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மகசீன் சிறை: உண்ணாவிரதக் கைதிகள் மீது தாக்குதல்!

## வெடிமருந்துகள் உள்ளே இருந்தனவா?



மீண்டும் கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையில் அப்பாவி தமிழ் அரசியல் கைதிகளின் மீது சிங்களப் படையினரின் கோ(ழை)ரத்தனமான தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

இம்முறை இத்தாக்குதலை அரசு திட்டமிட்டு மூடி மறைத்து வருவதுடன் தமிழ் கைதிகளின் மீது அபாண்டமான குற்றச் சாட்டுக்களையும் சுமத்தி பிரச்சாரப்படுத்தி வருகின்றது. பேரினவாதமயப்பட்ட சிங்கள "தேசிய" நாளிதழ்களும் உள்ளே தமிழ் கைதிகளுக்கு நடந்துள்ள எந்த வித அநியாயங்களையும் வெளியிடாததுடன் அபாண்டமான பிரசாரங்களைச் செய்து வருகிறது. எந்த வித காரணமுமின்றி கைது செய்யப்பட்டு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுவதாகக் காரணம் கூறி இவர்களை பல மாதங்களாக, வருடங்களாக தடுத்து வைத்திருக்கும் எந்த செய்திகளையும் இப்பத்திரிகைகள் வெளியிடுவதில்லை. சகல கைதுகளையும் "புலி கைது", என்றே செய்தி வெளியிட்டு வந்திருக்கின்றன. கைதின் போதும் அதன் பிறகும் சிறைகளிலும், நீதிமன்றங்களிலும் அவர்களுக்கு நடக்கும் எந்தவிதமான கொடுமைகள் குறித்தும் இப்பத்திரிகைகள் செய்தி வெளியிட்டதில்லை.

உண்மையை உள்ளபடி சொல்லாதது மட்டுமன்றி அதற்கு மாறான செய்திகளை வெளியிட்டு வருகின்றன. சிங்கள மக்களுக்கு உண்மைகளை மறைக்கும் இப்போக்கானது தமிழ் மக்கள் எதிர்நோக்கும், பிரச்சினைகளைச் சிங்கள மக்களுக்கு தெரியாமல் செய்து விடுகிறது. அது மட்டுமன்றி இவை, தமிழ் மக்களை சிங்கள மக்களிடமிருந்து அந்நியப்படுத்த மட்டும் தான் இதுவரை உதவியுள்ளது. இப்போக்கின் நீடிப்பு தான் தமிழ் மக்களின் போராட்டத்தை மீள மீள உறுதி செய்து கொண்டிருக்கிறது.

ஐ.தே.க அரசாங்கம் தொடக்கம் இன்றைய சந்திரிகா அரசாங்கம் வரை அப்பாவித்தமிழ் மக்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்வதும் சித்திரவதை செய்வதும் நடந்து கொண்டு தான் இருக்கிறது. சந்திரிகா பதவியிலமர்வதற்கு உதவிய முக்கிய கோஷங்களில் ஒன்று தான் "சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்வேன் என்பது". ஆனால் ஆட்சியிலமர்ந்த பின், அதன்படி செய்யாததுடன் மேலும் அப்பாவித் தமிழ் மக்களை கைது செய்து அடைத்து சித்திரவதை செய்வது தொடர்ந்து வருகிறது. முன்னைய கைதிகளும் இன்றைய கைதிகளும் தொடர்ச்சியாக முன் வைத்து வரும் கோரிக்கை என்னவென்றால் "எங்களை விசாரணை செய்யுங்கள் நிரூபிக்கப் பட்டால் தண்டனை தாருங்கள். அல்லது விடுதலை செய்யுங்கள்" என்பதே. இக்கோரிக்கைளுக்காக கொழும்பு மகசீன் மற்றும் களுத்துறை ஆகிய சிறைச்சாலைகளில் இக்கைதிகள் அவ்வப்போது உண்ணாவிரதம், சாகும்வரை உண்ணாவிரதம் என்பவற்றை மேற் கொண்டு வந்துள்ளனர். ஆனால் அவை எல்லாமே ஒன்றில் கடுமையாக அடக்கப்பட்டன. அல்லது அரசியல்வாதிகளின் தலையீட்டால் வாக்குறுதிகள் தந்து கைவிடச் செய்யப்பட்டன. இப்படியே இவர்களின் உண்ணாவிரதப் போராட்டங்கள் தாக்குதலுக்கும் வாக்குறுதிகளுக்கும் பலியாகிய சந்தர்ப்பங்கள் எத்தனையோ அவ்வப்போது அவை சரிநிகரில் தொடர்ச்சியாக வெளி வந்துமுள்ளன.

தொடர்ச்சியாக ஏமாற்றத்துக்குள்ளாகி வந்த இக்கைதிகள் மீண்டும் கடந்த 27 நவம்பர் ஆம் திகதியன்று தமது அமைதியான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். இவ்வுண்ணாவிரதத்தை ஆரம்பிக்க உடனடிக் காரணமாக இருந்தது, கடந்த மாதம் சிறைச்சாலைக் காவலர் யு.தென்னகோன் என்பவர் பஸ்ஸில் சென்று கொண்டிருந்த போது கொல்லப்பட்டதைத் தொடர்ந்து கைதிகள் நீதிமன்ற விசாரணைக்கு கொண்டு செல்லப்படவில்லை. வருடக்கணக்காக இழுத்தடிக்கப்பட்டு வரும் நீதிமன்ற விசாரணையில் ஒவ்வொரு நீதிமன்ற விசாரணை தினத்தன்றும் ஒவ்வொரு கைதியும் இன்றுடன் தீர்ந்தது என்ற நம்பிக்கையுடனேயே போகின்றனர். ஆனால் ஒவ்வொரு முறையும் நம்பிக்கைகள் சுக்குநூறாகும்படி தவணை போய்க் கொண்டிருக்கும். இந்நிலையில் 27, 28 ஆகிய தினங்களில் விசாரணைக்கென கைதிகள் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லப்படாததைத் தொடர்ந்து தங்களது நீண்டகால கோரிக்கைகளை மீண்டும் முன்வைத்து உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்கினர்.

"விடுதலை செய் அல்லது விசாரணை செய்." என்ற கோஷத்துடன் அன்றைய 27ஆம் திகதியன்று கூரைக்கு மேல் ஏறி நின்று உண்ணாவிரதிகள் அமைதியான முறையில் போராட்டம் நடாத்தினர். இப்போராட்டத்தை நசுக்கவென சிறை ஊழியர்கள், பொலிஸார் என்போர் ஏராழமாக நிறைக்கப்பட்டனர். கூரைகளின் மேல் ஏறி அவர்களைக் கடுமையாக தாக்கி மேலிருந்து தள்ளிவிட்டனர். மீண்டும் கீழே இறக்கி பொல்லுகள் கொண்டு தாக்கியதுடன் அவர்களின் "செல்"(அறை) களிலிருந்த அவர்களின் நூல்கள், உடுப்புகள் என்பவற்றை கிழித்தெறிந்தனர். உண்ணாவிரதிகளின் போராட்டத்தை ஒடுக்கவென வலுக்கட்டாயமாக பாணை நனைத்து வாயில் திணித்து உண்ணச் செய்தனர். இவவட்டூழியங்களைத் தொடர்ந்து இவ்விடயம் வெளித்தெரியாதிருப்பதற்காக உடனடியாகவே களுத்துறைச் சிறைக்கு மாற்றப்பட்டனர். சென்ற வருடம் யூன் மாதம் தமிழ் அரசியல் கைதிகள் களுத்துறைச் சிறைச்சாலையில் ஆரம்பிக்கவிருந்த உண்ணாவிரதப் போராட்டத்தை நசுக்கவென அரசு அவ்வுண்ணாவிரதிகளை இப்படித்தான் களுத்துறையிலிருந்து மகசின் சிறைக்கு உடனடியாகவே மாற்றினர். (என்ற போதும் மகசீன் கைதிகளும் சேர்ந்து இணைந்து அவ்வுண்ணா விரதப் போராட்டத்தை நடத்தினர். செல்லச்சாமி, ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோர் சென்று அவர்களின் கோரிக்கைகளை வாக்குறுதிகளை நிறைவேற்ற உத்தரவாதம் வழங்கியதைத் தொடர்ந்து அவ்வுண்ணாவிரதம் கைவிடச் செய்யப்பட்டது.)

இம்முறையும் அதே போல மகசின் சிறையிலிருந்த கைதிகள் 214 பேரை களுத்துறைக்கு மாற்றினர். மாற்றிவிட்டதுமல்லாமல் இக்கைதிகளின் மீது அபாண்டமான பழி சுமத்தப்பட்டுள்ளது.

→ 9

# தலித்தியக் குறிப்புகள்



## டி.என்.எல். 'சேவை'யும் சாதியமும்

கடந்த நவம்பர் 11ஆம் திகதியன்று புதன் கிழமை 8.30க்கு டி.என்.எல். தொலைக்காட்சி சேவையில் "கப்பிரிஞ்ஞா வாத பைலா" எனும் நிகழ்ச்சி போய்க்கொண்டிருந்தது.

போர்த்துக்கீசர் அறிமுகப்படுத்திய "கப்பிரிஞ்ஞா பைலா"வை ஒரு விவாத பைலாவாக எதுகை மோனையுடன் ஒருவரையோ அல்லது எதனையோ-எவற்றையோ தாக்கி மாறி மாறி "பைலா" படிக்கும் ஒரு கலாசாரம் சிங்கள கலாசாரத்துடன் பிணைந்து சேரிப் புறங்களில் இருப்பதைப் பரவலாகக் காணலாம். புதிய தலைமுறையினரிடமிருந்து இது மங்கிப் போய்க் கொண்டிருந்தாலும் மூத்த தலைமுறையினரிடம் இதன் மீதான ஈடுபாடு ஈடுபாடு இன்னமும் உண்டு.

டி.என்.எல். சேவையில் போகும் சிங்கள "வாத பைலா"வை ஏனைய சமூகத்தர்களும் விரும்பிப் பார்க்கும் ஒரு நிகழ்சியாக இருந்து வருகின்றது.

மேற்படி தினத்தில் ஒளிபரப்பப்பட்ட இந் நிகழ்ச்சியை வழமைபோல் அபிமானிகள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பைலாவில் கலந்து கொண்ட ஐந்து பேரும் ஒருவரைத் தாக்கி (மற்றும் அவரின் கருத்தைத் தாக்கி) மற்றொருவர் பைலா படித்துக் கொண்டிருந்தனர். திடீரென்று பைலாவில் ஒருவருக்கொருவர் "சக்கிலியர்" என திட்டிக் கொண்டே சென்றனர். ஏறத்தாழ மூன்று சுற்றுக்கள் தொடர்ந்த இந்த சக்கிலியர்க்கு எதிரான பைலாவில் "சக்கிலியப் பொம்பிளை", "சக்கிலி நாய்", "சக்கிலி மூதேவி", என ஆளுக்காள் மாறி, மாறி சூடுபறக்க பைலா படித்தனர்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த சிலர் வேதனைப்பட்டனர். சிலர் ஆத்திரம் கொண்டனர். இந்த நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருக்கும் வேறு பலருக்கு இதேவித உணர்வுகள் ஏற்படப் போவதில்லை. ஒருவரைத் தாக்கி ஒருவரை இவ்வாறு "சக்கிலியர்" எனப் பாவித்து எதுகை மோனையுடன் திட்டித் தீர்ப்பது வேடிக்கையாகவும், நகைச்சுவையாகவும், ஒருவகை இன்பமூட்டும் நிகழ்ச்சியாகவும் இருந்திருக்கும் என்பது நிச்சயம். அதேவேளை ஒரு சமூகத்தினரை புண்படுத்தலுக்கும், வேதனைக்கும், இழிவுக்கும், அசிங்கத்துக்கும் உள்ளாக்கி கொண்டிருக்கிறது என்பதை அறிந்திருக்க நியாயமில்லை. ஏற்கெனவே எந்த இழி செயலைச் செய்தவர்களையும் "சக்கிலியர்" என திட்டும் மரபொன்று நடைமுறையில் நிலவி வரும் இந்த நிலையில், இந்த நிகழ்ச்சி அதே மரபான கருத்தை ஆழப் பதிக்க துணை புரிந்திருக்கும் என்றால் அது மிகையில்லை. இந்தச் சம்பவத்தால் பாதிக்கப்படுவோரால் மாத்திரமே அந்த உணர்வின் அனுபவிப்பை உணர்ந்திருக்க முடியும். அந்த ஒடுக்கப்படும் சமூகத்திடம் அதிகாரமில்லை. அரசியல் ஸ்தாபனம் இல்லை. ஆதரவாளர்கள் கூட இல்லை. இருந்திருந்தால் இத்தனை நேரத்துக்குள் இப்படியான சம்பவங்களுக்கு எதிராக என்னென்னவோ எதிர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கும். ஒரு தலித்தின் பிரச்சினையை ஒரு தலித்தால் தான், அதே விதத்தில் உணர முடியும் என்பது இவ்வாறான போக்குகளுக்கூடாகத் தான் நிரூபிக்கப்படுகிறது. எனவே தலித் மக்களின் பிரச்சினையை ஒரு பேசுபொருளாக்கக் கூட எந்த சக்தியும் தயாரில்லாத நிலையில் தனித்து அவர்களுக்காக அவர்களே ஒன்றிணைவதும், அணிதிரள்வதும், அமைப்புகளை உருவாக்கிக் கொள்வதும், அதனை முன்னெடுப்பதும் தவிர்க்க முடியாத விளைவாகிறது.

## ஒடுக்கும் சித்தாந்தத்துக்கும் ஒடுக்கப்படுவோருக்கும் உள்ள உறவு?

அகில இலங்கை அருந்ததியர் சங்கத்தைச் சேர்ந்த முன்னாள் நிர்வாக உறுப்பினர் ஒருவரை அண்மையில் சந்தித்தேன். அவர் தன்னைப் பற்றி விசாரிப்போரிடம் தன்னை நாயக்கர் சமூகத்தவர் என சொல்லிக் கொள்வதாக பெருமையுடன் தெரிவித்தார். இன்று இவர் இன்னொரு "சீர்திருத்த" அமைப்பொன்றின் தலைவராக இருந்து வருகிறார். பெரியார் ஒரு முறை இவ்வாறான செயல்களுக்கு பதிலளிக்குமுகமாக இப்படிச் சொல்கிறார் *"பிறந்த சாதியை இழிவாக மதித்து இன்னொரு சாதியை உயர்வாக மதித்து. அதனிடம் அடைக்கலம் புகுவதைவிட இழிவு வேறொன்றுமில்லை. இவ்வழியில் இறங்கவே கூடாது".*

மேற்படி சம்பவத்தை தனிநபர் சார்ந்ததாகப் பார்க்கத் தேவையில்லை. இதே தலித்தியக் குறிப்பில் சில தனிநபர்களின் அனுபவங்கள், சம்பவங்கள் என்பனவற்றைக் குறிப்பிட்டு வந்துள்ள போதும் அவை தனிநபர்களை இலக்காகக் கொண்டு பேசப்பட்டவை அல்ல என்பதையும், மாறாக அவ்வாறான போக்குகளை விளக்க உபயோகிக்கப்பட்ட உண்மைகள் என்பதையும் வாசகர்கள் கருத்திற்கொள்ள வேண்டுகிறேன்.

மேற்குறிப்பட்ட சம்பவமும் கூட அந்தப் போக்கை விளக்கப்படுத்தும் முயற்சியே.

இவ்வாறாக தனது சாதியை மறைத்து மேற்சாதி உளவியலையும் அதன் பண்புகளையும் தன்னகத்தே வலிய கொண்டிருக்கச் செய்யும் முயற்சியானது சமூக மேநிலையாக்கத்தோடு தொடர்புடைய மத்திய தர வர்க்க குணாம்சமும் கூட.

இந்த மேற்சாதி உளவியலும், ஆழப்பதிந்த உயர் சாதிய கருத்தியற் பண்புகளும் கட்டாயம் இருக்கத் தான் செய்யும். இதில் அவரவருக்கு அளவு வேறுபாடு இருக்கக் கூடும். இவ்வாறு அடக்குமுறை சக்திகளின் ஆதிக்க சித்தாந்தங்களை கொண்டிருக்கும் போக்கைக் கூட சாதியத்தோடு மட்டும் ஒப்பிட்டுப் பார்க்கத் தேவையில்லை. பல்வேறுபட்ட சமூகப் பிரச்சினைகளிலும் இது விரவிக் கிடக்கும். உதாரணத்துக்கு வீட்டில் மூத்த பெண் (தாயோ அல்லது தமக்கையோ) இளைய பெண்(களை)ணை ஆணாதிக்க நிலைப்பாடொன்றிற்காக வற்புறுத்துகிறார். என்றால் அவ்வாறான போக்கை பெண்ணின் தவறாகவே ஆணாதிக்கம் சொல்லும். ஆனால் சமூகத்தில் ஆதிக்க சித்தாங்களின் வேர்களையும் அதன் ஊடுருவலையும் விளங்கிக் கொள்ளும் எவராலும் அந்த மூத்த பெண்ணும் ஆணாதிக்க சித்தாந்தங்களை தன்னகத்தே கொண்டிருப்பதே இந்த விளைவுக்கு காரணம் என்பதை விளங்கிக் கொள்ள இயலும். ஆணாதிக்க சித்தாந்தத்தை நிச்சயம் ஆண் தான் கொண்டிருக்க வேண்டும் என்றில்லை. அதனைப் பெண்ணும் கட்டாயம் கொண்டிருப்பது சமூக யதார்த்தம். இது போலத் தான் சாதியம், வர்க்கம், நிறவாதம், இனவாதம் என்பவை எல்லாமே.

இதனை மேலும் விளக்க உதாரணத்துக்காக பெரியார் கூறிய ஒரு கூற்றை எடுப்போம்.

*'நம் கடவுள் சாதி காப்பாற்றும் கடவுள்,*
*நம் மதம் சாதி காப்பாற்றும் மதம்*
*நம் அரசாங்கம் சாதி காப்பாற்றும் அரசாங்கம்*
*நம் இலக்கியம் சாதி காப்பாற்றும் இலக்கியம்*
*நம் மொழி சாதி காப்பாற்றும் மொழி'*

இங்கு பெரியார் ஆதிக்க சித்தாங்களுக்குப் பலியாகிக் கிடக்கும் குறிப்பிட்ட துறைகளை குறிப்பிடுகிறார். இதில் "சாதி" எனும் இடங்களுக்குப் பதிலாக "ஆணாதிக்கம்", "பேரினவாதம்" (இலங்கைச் சூழலில் ஒப்பிடலாம்), "வர்க்கம்" போன்றவற்றை இணைத்துப் பார்த்தால் எமக்கு புலப்படும்.

இப்படியாக ஒடுக்குவோரின் ஆதிக்க கருத்தியல் கூறுகளை ஒடுக்கப்படுவோரும் கொண்டிருப்பது ஒன்றும் அதிசயமான அல்லது தற்செயலான நிகழ்ச்சி அல்ல.

ஆழப்பதிந்த உயர் சாதியக் கருத்தியலானது கீழ் சாதியினரையும் அதுவாகவே மாற நிர்ப்பந்திக்கும். ஒளித்தோடச் செய்யும். வேஷமிடச் செய்யும். உயர் சாதியினருடனான உறவைக் கூட வலிந்து தேடச் செய்யும். சக சாதியினரையே புண்படுத்தும் வகையில் கேலி செய்ய, இழிவு படுத்த விளையும்.

எனவே இந்தப் போக்குகளை எதிர்த்து நிற்கும் சக்திகள் கூட "இதற்குப் பதில் சொல்ல வேண்டிய கடப்பாடு, பொறுப்பு ஒடுக்கப்படுவோரையும் சார்ந்தது" என்றும் அவர்களே இதற்கு காரணதாரிகள் என்பதும் ஆபத்தான போக்குக்கு இட்டுச் செல்லும். இங்கு உண்மையில் உணரப்படவேண்டிய விடயம் "ஆதிக்க சித்தாந்தம்", "அது குடிகொண்டுள்ள இடங்கள்", "அதற்குப் பலியாக்கும்-பலியாகும் சக்திகள்" என்பவையே ஒழிய ஒடுக்கப் படுபவர்கள் அல்ல. இந்தப் போக்கை அடையாளம் காண மறுத்தோமானால், அடக்குவோரையும் அடக்கப்படுவோரையும் அடையாளம் காண்பதில் தவறிழைத்து விட்டவர்களாவோம். அது ஆதிக்க சக்திகளுக்கு துணை போவதில் தான் போய் முடியும். வரலாற்றில் அது போல நிகழ்ந்து விட்டன. இனியுமா?

**-அருந்ததியன்**

www.tamilarangam.net



## எழுதாத வரலாறு :

# 60 ஆண்டுகளுக்கு முந்திய பதில்

### சிவசேகரத்திற்கு எஸ்.வி.ஆர். பதிலளிக்கிறார்.

**இறுதிப்பகுதி**

மீண்டும் 'இலங்கைத் திராவிடர் இயக்கத்'திற்கு வருவோம் ''எந்த நேரத்திலும் அரைடசினாவது இருந்த''(மற்றவர்களது தமிழ் எழுத்து நடையைக் கிண்டலடிக்கும் சிவசேகரத்தின் தமிழ் இது) திராவிட முன்னேற்றக் கழகங்களிலிருந்த அத்தனை பேரும் ஒன்றுக்கும் உதவாத 'குப்பை மனிதர்களாகவே' இருந்தார்கள் என்று ஒரு வாதத்திற்கு ஒப்புக்கொள்வோம். எனினும் இ.தி.மு.க. மீது தடைவிதிக்கப்பட்ட போது அவர்களின் அடிப்படையான குடிமை உரிமைக்காக (Civil Right) குரல் எழுப்பாமல் இருந்ததுடன் அவர்களைப் பற்றிய அவதூறான, பொய்யான செய்திகளை வெளியிட்ட மாஸ்கோ, பீகிங் ஆதரவுக் கம்யூனிஸ்ட் கட்சிகளின் பத்திரிகைகளின் செயல்பாட்டைப் பற்றி முத்துலிங்கம் எழுதியிருக்கிறாரே? அதுவும் கூட முத்துலிங்கம் திரித்துள்ள சரடு என்று சிவசேகரம் கருதுகிறாரா?

மறுபடியும் பெரியார் பற்றிய அவதூறுகள் குறித்துச் சில விடயங்கள்:

பெரியார் தனது வாழ்வில் எத்தனையோ அவதூறுகளைச் சந்தித்திருக்கிறார் - பார்ப்பனர், பார்ப்பனரல்லாத உயர்சாதியினர், கத்தோலிக்கர், சைவர்கள், பார்ப்பனரல்லாத கீழ்சாதியினர், தலித்துகளிற் சிலர், தி.மு.க.வினர், காங்கிரசார், கம்யூனிஸ்டுகள் எனப்பல தரத்தவரிடமிருந்து அவரையும் அவரது இயக்கத்தையும் அவதூறு செய்வதற்காகவே 'தேசபந்து' என்ற சஞ்சிகை காங்கிரசாரால் பல ஆண்டுகள் நடத்தப்பட்டது. அந்த அவதூறுகள், தனது இயக்கத்தின் வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவிக்கும், தனது மனித நேயத்திற்குக் களங்கம் ஏற்படுத்தும் என்று அவர் கருதிய சமயங்களில் மட்டுமே, அப்படி ஊறுவிளைவிற்கும் அளவிற்கு சக்தியிருந்தவர்களுக்கு மட்டுமே பதில் சொல்லியிருக்கிறார். ''நான்தான் உலகம், நான் தான் கடவுள், எனக்குப் பதில் சொல்லியே தீர வேண்டும்'' என்று கேட்கும் அகம்பாவம் பிடித்த தனிமனிதர்களை அவர் பொருட்படுத்தியதே இல்லை.

'பார்ப்பான் - பாம்பு' சமாச்சாரத்திற்கு அவர் பதில் சொல்லியிருக்கிறாரா என்பது எனக்குத் தெரியாது. சிவசேகரம், கி. வீரமணி அவர்களுக்குக் கடிதம் எழுதி தன் சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்ளலாம். (அக்கடிதத்தில் என் பெயரைக் குறிப்பிடாமல் இருப்பது நல்லது. வீரமணி அவர்களால் விரும்பப்படாதவர்களில் நானுமொருவன்) எனினும் கிட்டத்தட்ட அதே மாதிரியான குற்றச்சாட்டுக்குப் பெரியார் சொன்ன பதில்கள் சிலவற்றை நான் அறிவேன். அவற்றிலொன்றைக் கீழே தருகிறேன். ஏனெனில் இன்னுமொரு 40 (அல்லது 39) ஆண்டுகளுக்கு சிவசேகரம் இதே சந்தேகத்தை வைத்துக் கொண்டிருக்கக் கூடாது அல்லவா? பெரியாரவர்கள், தான் பேசும் கூட்டங்களில் கேள்விகள் கேட்கப்படுவதை ஊக்குவிப்பது வழக்கம். அப்படி ஒரு கேள்விக்குக் கூறிய பதில் இது:


''பார்ப்பனப்பூண்டை ஒழிக்கவே நான் உயிருடன் இருக்கிறேன்'' என்று எங்கோ (நான்) சொன்னதாக கேள்வியில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. அந்தக்காரியம் என்னால் முடியாது என்றும், யாராலும் முடியாது என்றும் முடியுமானால் அது அல்ல என்னுடைய அபிப்பிராயமென்றும் பல தடவை சொல்லியும் எழுதியும் வந்திருக்கிறேன். ஆனால் நான் கூறிவந்ததும் இப்பொழுதும் வன்மையாகக் கூறுவதும் பார்ப்பனீத்தை அடியோடு ஒழிப்பது என்பதுதான் எனது முக்கியமானதும், முதன்மையானதுமான காரியம் என்று கூறுகிறேன். பார்ப்பனீயத்தை மாத்திரமல்லாமல் காந்தியத்தையும் ஒழித்தாக வேண்டுமென்று பல தடவை கூறி இருக்கிறேன். சுயநலப்பார்ப்பனர்களும் பதவி மோகம் கொண்ட பார்ப்பனர்களும் இதை தங்கள் சமூகத்தவரிடம் திருத்திக் கூறி பார்ப்பனர்களுக்கு நம்மிடம் துவேஷம் உண்டாகும் படி செய்து கொள்கிறார்கள். எனக்கு அதைப் பற்றிக் கவலையில்லை. தப்பாக அநாவசியமாக நம்மிடம் அல்லது நமது இயக்கங்களிடம் துவேஷங் கொள்ளுவார்களேயானால் அதன் பலனை அவர்கள்தான் அடைய நேரிடுமே ஒழிய எனக்கு முழுகிப் போவது ஒன்றுமில்லை. யோக்கியப் பொறுப்பும் நடு நிலைமையுமுள்ள பார்ப்பனர்கள் பார்ப்பனீயத்திடம் இருக்கும் அதிருப்தியை பார்ப்பனர்களிடம் ஏற்படும்படி செய்து கொள்ளக்கூடாது என்று எச்சரிக்கிறேன்.

சுயநலமும் பதவி மோகமும் பணத்தாசையும் கொண்ட சில பார்ப்பனர்கள் பதவிக்கு வந்து தங்கள் சமூகத்தாருக்கு ஏதோ உத்தியோகம் கொடுக்கப் போவதாகச் சொல்லிக்கொண்டு பல பார்ப்பனரல்லாதாருக்கு கேடு விளைவித்துக்கொண்டும் தங்கள் சுயநலத்துக்கு ஏராளமான பணம் பல நாணயக் குறைவான வழிகளில் சம்பாதித்துக்கொண்டும் வருவதை நடுநிலைமையுள்ள பார்ப்பனர்கள் ஆதரித்து வருவதாலேயே இன்று நாட்டில் பார்ப்பனீயத்தின் மீது உள்ள வெறுப்பு பார்ப்பனர்கள் மீது திரும்புவதை அவர்கள் அறிவதில்லை. ஆனால் ஒரு சமூகம் நாட்டில் ஒற்றுமையோடு வாழுவதற்கு இது வழி திறக்காது. அன்றியும் இது பழி வாங்கும் எண்ணத்தைத்தான் தூண்டிவிடும். எனக்கு சனாதன தர்மிகளிடம் துவேஷமோ அல்லது அவர்களைப் பலி கொடுத்து சாதித்துக் கொள்ள வேண்டிய சுயநலகாரியமோ கிடையாது. சனாதன தர்மம் எனது சமூகத்திற்குக் கேட்டையும் இழிவையும் தரும்படியான காரியம் என்று நான் கருதுகிறேன். இது நான் மாத்திரமல்ல, அநேக பார்ப்பனர்களும் கருதுகிறார்க்ள். 'அது விஷயமாய் நாம் ஒருவருக்கொருவர் முட்டிக் கொள்ளாத மாதிரியில் காரியங்கள் செய்து கொள்ளலாம். இன்று முஸ்லிம் தருமங்களுடன் நாம் முட்டிக்கொள்கிறோமோ? அவர்கள் நம்தருமங்களில் முட்டிக் கொள்கிறார்களா? சனாதன தருமம் என்பது ஒரு தனிமதமாக அவர்கள் செய்து கொண்டு முஸ்லிம்கள், கிறிஸ்துவர்கள் முதலிய மதஸ்தர்களைப்போல் தங்களைப் பிரித்துக்கொள்வதோ அல்லது எங்களைப் பிரித்து விடுவதோ செய்து விட்டால் இப்போதைக்கு நம் இருவர் கஷ்டமும் ஒரு அளவுக்காவது குறைந்து விடும். அப்படிக்கில்லாமல் ஒருவருடைய கொள்கைகளை மற்றவர்கள் மீது திணிப்பதும் சனாதன தர்மத்திற்கும் நமக்கும் சம்பந்தமில்லையென்பவர்களையும் சனாதன தர்மத்திற்குள் ஆக்குவதுமான காரியங்கள் வரும்போதுதான் நாம் ஒருவருக்கொருவர் பாதிக்கப படுகிறோம்.

பழைய பழக்கவழக்கங்களும், அபிப்பிராயங்களும் அந்தந்த சமூகத்திலே எவ்வளவோ தூரம் மாற்றமடைந்து வந்த காலத்தில் மற்ற சமூகத்தின் மீது வலியுறுத்துவதென்றால் அது சுலப சாத்தியமாகவோ சாந்தியை அளிக்கக் கூடியதாகவோ இருக்க முடியுமா என்பதை யோசித்துப்பார்க்கும்படி வேண்டுகிறேன். எந்தக் காரியம் எப்படி இருந்தாலும் அரசியலில், பொது வாழ்க்கையில் கண்டிப்பாக மனித தர்மம் புகுத்தப் படக்கூடாது என்பதுதான் என் ஆசையே ஒழிய உலகத்தில் உள்ள மக்கள் எல்லாம் என் இஷ்டம் போல்தான் நடக்க வேண்டும் என்பதல்ல. காலப்போக்கையும் பொறுத்தே நான் 'பேசுகிறேன்'' (குடி அரசு 17.091939)

1952இல் 1965இல், 1971இல் பெரியாரவர்கள் இது போன்று பேசியுள்ளதையும் என்னால் எடுத்துக் காட்ட முடியும். இருப்பினும் '40 ஆண்டுகால சந்தேகத்திற்குக் குறைந்த பட்சம் 60 ஆண்டுகளுக்கு முந்திய பதிலைத் தருவது தானே சரியாக இருக்க முடியும்!

**எஸ்.வி.ராஜதுரை**
**இந்தியா**



எனது தகப்பனின்
நம்பிக்கையற்ற பார்வைகளினூடும்
தாயின் குமுறல்களினூடும்
உறவுகளின்
என் திருமணம் பற்றிய
சகிக்க இயலாத பேச்சுக்களினூடும்
சுதந்திரமாய் நான் வாழ்வதென்பதெவ்வாறு?

என் இனிமை,
இதம் என்பனவெல்லாம் அவளுக்கானவை.
அவளற்ற என் உலகு பற்றி
கனவுகளும் வேண்டாம் ஒருவருக்கும்.
போலியும்
வஞ்சகப் பாசமும் நிறைந்த முகங்கள் தான்
எனைச் சூழ எங்கும்.
மென் மேலும் என்னால்
தோல்வியுறுதல் இயலாது.
எனது அவள் தோழி மட்டுமல்ல....

அது பற்றியும் சொல்வேன்.
அது காதல்
அவனது வேர்களைப் பிடுங்கி எறியவும்
பிறகிருக்கும் மனதின் பரப்பெங்கும்
கள்ளிச் செடிகள் நட்டுப்பார்க்கவும்
கணம் கணம் இங்கு போர்
எவ்விதம் பிரிவேன் அன்பே!
எவ்விதம் வாழ்வேன் நான்?

ஆயினும் ஆயினும் வாழ்வேன்
ஆச்சரியமேயாயினும்
எனையழுத்தும் இவ்
இறுகிய பாறைகளினூடிருந்து
வீறு கொண்டதொரு புல்லாய் நிமிர்வேன்
கூவத்தான் முடியாதாயினும்
ஈனஸ்வரத்திலேனும் என் பாடல்களை முனகியபடி
யார் முன்னும் பணிதலன்றி
எனது உணர்வுகளோடும் அவாக்களோடும்
எவ்வகை வாழ்வெனப் புரியாத இது
குழப்பமிகு வாழ்வேதானாயினும்

வாழ்வேன்
வாழ்வேன்
வாழ்வேன் நான்

பொன்னையா
97.11.28

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## தமிழ் மக்களுடைய...

ஒரு பாத்திரத்தை வகித்திருக்க முடியும். முக்கியமாக பாராளுமன்றத்தில் இருக்கும் தமிழ்க் கட்சிகள் கூட்டாக இது பற்றி ஆலோசித்து பா.தெ.குழுவில் திட்டவட்டமாகத் தமது கருத்துக்களை வைத்திருப்பார்களாக இருந்தால் குறைந்த பட்சம் ஒரு ஆரோக்கியமான தீர்வுத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்க முடியும் என்றே நான் நினைக்கிறேன். இதில் பாராளுமன்றத்தில் உள்ள தமிழ்க் கட்சிகள் தவறு செய்துள்ளன என்றே நான் நினைக்கிறேன். இது ஒரு விடயம்.

இரண்டாவது விடயம், ஐந்து தமிழ்க் கட்சிகள் ஆரம்பத்தில் ஒன்று சேர்ந்து பா.தெ.குழு முன் சில விடயங்களை முன்வைத்தன. ஆனால், இக்கட்சிகள் தாம் முன்வைத்த விடயத்தைப் பா.தெ. குழுவில் வலியுறுத்தியதாகவும் தெரியவில்லை.

***ஆக, இந்தத்தீர்வுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமானால் அதற்கான பெரும் பொறுப்பு தமிழ்க் கட்சிகளிடமே உண்டு என்று நீங்கள் சொல்கிறீர்களா?***

நான் சொன்ன அடிப்படையில் இதனைச் சீர்செய்வதற்கு இன்னமும் காலம் கடந்துவிடவில்லையென்றே நான் கருதுகிறேன். இதற்காகவாவது தமிழ்க் கட்சிகள் ஒன்றுபடவேண்டும் என நான் நினைக்கிறேன். அப்படி இல்லாவிடின் நீங்கள் சொன்னது போல ஒரு நியாயமான தீர்வை எடுக்கச் சக்தி இருந்தும் தத்தமது ...றுகிய அரசியல் இலாபங்களால் நியா...மான தீர்வொன்றைப் பெற முடியாது போகும். அதற்கான முழுப்பொறுப்பையும் தமிழ்க் கட்சிகள் ஏற்றுத் தானாக வேண்டும்.

***இதில் ஈ.பி.ஆர்.எல்.எப்பின் பங்கு என்ன என்று நினைக்கிறீர்கள்?***

செப். 28ம்திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் சந்திரிகா ஒரு விடயத்தைச் சொல்லி இருந்தார். புலிகளை மக்களுடைய பிரதிநிதிகளாக எம்மால் ஏற்க முடியாது. ஆகவே புலிகளுடன் பேசமுடியாது. இப்போது பாராளுமன்றத்தில் இருப்பவர்களும் ஒழுங்காகத் தெரிவு செய்யப்பட்டு வந்தவர்களல்ல. ஆகவே நான் மக்களிடம் சென்று அபிப்பிராயங்களைக் கேட்கப்போகிறேன்என்று. இதில் சரி பிழை என்பது விவாதத்திற்குரிய விடயம். ஆனால், வடகிழக்கில் உள்ள மக்கள் எதைக் கேட்கிறார்கள் என்ற விடயத்தை வெளியில் கொண்டு வர வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அதனை வெளியில் கொண்டு வர என்னென்ன நடவடிக்கைகள் எல்லாம் எடுக்க முடியுமோ அந்தந்த நடவடிக்கைகளை நாம் எடுப்போம். தமிழ்க் கட்சிகள் எல்லாம் இணைந்து செயற்பட்டால் அதனை விரைவாகவும், பலமாகவும், சரியாகவும் செய்ய முடியும். அதற்கு தமிழ்க் கட்சிகள் ஒத்து வரவில்லையானால் ஈ.பி.ஆர்.எல்எப் தன்னாலியன்றவரை அவற்றைச் செய்யும்.

***தமிழ்க் கட்சிகள் தங்களுக்கிடையேயான இணக்கப்பாட்டிற்கு வருவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளனவா?***

தீர்வுத்திட்டம் சம்பந்தமாக நாங்கள் ஒரே குரலில் பேசவேண்டும் என்ற அடிப்படையிலேயே ஆரம்பத்தில் இந்த ஐந்து கட்சிகளும் ஒன்று சேர்ந்தன. ஆனால் அந்த ஐந்து கட்சிகளுக்குள் ஒரு பொதுவான திட்டத்தை உருவாக்குவதில் விருப்பமின்மையிருந்தது. ஒவ்வொருக்கும் ஒவ்வொரு சொந்தத் திட்டம் இருந்தது. உதாரணமாக இடைக்கால நிர்வாகம் தான் இன்று ஒரு முக்கியமான பிரச்சினையென்று ஒரு கட்சி சொல்லிக் கொண்டிருக்கிறது. வேறு சிலருக்கு வேறு விதமான திட்டங்கள் இருந்தன.

நாங்கள் அரசாங்கத்துக்கு உறைக்கிற மாதிரி சில விடயங்களைச் சொல்ல வேண்டும். அதற்காகப் பல ஜனநாயகப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்று ஈ.பி.ஆர்.எல்.எப் வலியுறுத்திய போதும்கூட அதை ஏற்றுக் கொள்ளக்கூடிய பக்குவம் பலருக்கு இருக்கவில்லை. அவ்வாறான ஒரு சூழ்நிலையில் இந்த ஐந்து கட்சிக்கூட்டு தொடர முடியாமல் போய்விட்டது.

***ஆக, தமிழ்க் கட்சிகள் தமிழ் மக்களது நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்குப் பதிலாக தங்களுடைய சொந்த நலன்களுக்காகவே அவர்கள் இயங்குவதாக நீங்கள் குற்றம் சாட்டுகிறீர்களா?***

ஆம், நிச்சயமாக அப்படியான போக்கு இருக்கிறது. அதனை மறுக்க முடியாது.

***கருத்துக்கணிப்பிற்கு எதிரான தமிழ்க் கட்சிகளின் அப்பிராயத்தை தான் கணக்கெடுக்கப்போவதில்லை என்று அமைச்சர் ஜீ.எல்பீரிஸ் சொல்லியிருந்தாரே. இது தொடர்பாகத் தாங்கள் என்ன கருதுகிறீர்கள் ?***



முழுமையாகத் தமிழ் மக்களை விரோதித்துக் கொண்டு, த்மிழ்க் கட்சிகளின் நிலைப்பாடுகளை முழுமையாக நிராகரித்துக் கொண்டு தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண யார் முயற்சித்தாலும் அது சாத்தியம் என்று நான் நினைக்கவில்லை.

***தமிழ்க் கட்சிகள் ஜனநாயக வழிக்கு வந்து பத்து வருடங்களாகி விட்டன. இந்தப் பத்து வருடங்களில் ஆட்சியாளர்களிடம் இருந்து தமிழ் மக்களுடைய உரிமைகள் என்று எதனையாவது பெற முடிந்ததா?***

இது பொதுவாக எல்லோராலும் கேட்கப்படும் கேள்வி. நான் சொல்லவில்லை ஜனநாயக வழிக்கு வந்த பின்னர் தமிழ் மக்களுடைய உரிமைகள் எதையாவது பெற்றுவிட்டோமென்று. ஆனால் மறுபுறத்தில் தொடர்ச்சியான யுத்தம்மூலம், தமிழ் மக்கள் எதையாவது பெற்றார்களா? அல்லது தமிழீழத்தைத் தான் பெற முடியுமா? புலிகளுக்கு முக்கியமான ஒரு கடமை இருந்தது. முழு உலகத்தையும் தம்பால் திருப்ப வேண்டும். அந்த விடயத்தில் அவர்கள் தவறு இழைத்துவிட்டார்கள் என்றே நான் நினைக்கிறேன்.

***நீங்கள் ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தின் மத்திய குழு உறுப்பினர். ஆரம்பகால உறுப்பினர்களில் ஒருவர். 80களில் ஈ.பி.ஆர்.எல்.எப். தோற்றம் பெற்ற போது அது தன்னை ஒரு இடதுசாரி அமைப்பாக இனங்காட்டியது. இலங்கை அரசை சிறிலங்கா தரகுமுதலாளித்துவ பேரினவாத அரசாக இனம் கண்டு, அதனால் ஒடுக்குமுறைக்குள்ளாகும் தமிழ் மக்களின் விடுதலையை பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் முன்னெடுத்து சோசலித் தமிழீழம் ஒன்றை உருவாக்கப் போவதாகச் சூளுரைத்தது தங்களுடைய கட்சி. ஆனால், நீங்கள் 87இல் பாராளுமன்ற ஜனநாயகவழிக்கு வந்ததோடல்லாமல், நீங்கள் முன்னர் கூறிய விடயங்களுக்கு முற்றிலும் முரணாக அதே சிங்கள பௌத்த பேரினவாத சிறிலங்கா அரசின் மீன்பிடி அமைச்சின் ஆலோசகராக இருக்கின்றீர்கள். ஆக, முன்னர் நீங்கள் கூறிய விடயங்கள் தவறென்று கருதி அதனை மாற்றிக் கொண்டீர்களா? அல்லது அவற்றை முற்றாகவே நீங்கள் கைவிட்டு விட்டீர்களா? இதனை எப்படி விளங்கப்படுத்துவீர்கள்?***

நிச்சயமாக இல்லை. தமிழ் மக்களுக்கு த்னிநாடு தான் தீர்வு என்றதோடு சோசலிசத் தமிழீழம் ஒன்றின் ஊடாகவே முழு மக்களும் விடுதலையடைய முடியும் என்பதில் எங்களுக்கு எந்தக் கருத்து முரண்பாடும் இல்லை. போராட்டம் வேறு ஒரு திசையில் போகும் போது, பிராந்திய அரசியலும் சர்வதேச அரசியலும் இதற்கு விரோதமாகப் போகும் போது குறைந்தபட்சம் எமது மக்களை ஆசுவாசப்படுத்தி அவர்களுக்குத் தேவையான தீர்வை உருவாக்கிக் கொண்டு நகர்த்துவது தான் புத்திசாலித்தனமாக இருக்க முடியும் என்று நான் நம்புகிறேன். அவ்வடிப்படையில் தான் மாற்றங்கள் இருந்ததே தவிர நாம் சொன்ன விடயங்களை மறந்ததாலல்ல.

ஒன்று, புலிகளால் போராட்டம் சீர்குலைக்கப்பட்டது. இரண்டாவது, எங்களுடைய ஆதரவு சக்திகளை நாங்கள் இழந்தது. மூன்றாவது, எங்களுடைய பிராந்திய சக்திகள். நான்காவது, சர்வதேச சூழ்நிலைகள் எப்படி எங்களுடைய போராட்டத்துக்கு சாதகமாக, அல்லது பாதமகாக இருக்கிறது என்ற விடயங்கள். இவை எல்லாவற்றையும் மறந்து போய் விட்டு வெறும்னே ஆயுதம் ஏந்திப்போராடுவது தான் போராட்டம் என்று நாங்கள் கருதவில்லை.எங்களுடைய மாற்றுச் செயல்பாடுகள் இவ்வடிப்படையில்தான், ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்திக் குணவர்த்தன என்ற இடதுசாரிக் கட்சியைச்சேர்ந்த ஒருவர் இந்த அமைச்சராக இருந்த காரணத்தால், அவர் என்னை வந்து தனக்கு உதவி செய்யுமாறு கேட்டுக் கொண்டதன் பேரில் எனது கொள்கைகள் அவருடைய கொள்கைகளுடன் ஒத்துப் போனதன் அடிப்படையில் வடகிழக்கில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு சில உதவிகளைச் செய்யலாம் என்ற அடிப்படையிலேயே இங்கு வந்தேன். மற்றும்படி எமது கொள்கைகளை விற்றோ அவற்றைக் கைவிட்டோ அல்ல.

## படை அதிகாரி...

...ால் உங்களுக்கு எந்தத் தீங்கும் ஏற்படாது. அவ்வாறான நோக்கம் எங்களுக்கு இருக்குமானால் உங்களை இவ்வளவு தூரம் அழைத்து வந்திருக்க வேண்டியதில்லை. தப்பியோட முயல வேண்டாம். ஊர்ச் சனங்களுடன் தொடர்புகளை தவிர்த்துக்கொள்ள வேண்டும்'' என்ற சாரப்பட உரையாடினார். குளித்தோம். காலை உணவாக பச்சை அரிசிக் கஞ்சி தந்தார்கள்.'' என்று அந்த இளைஞன் கடத்தப்பட்ட பயணத்தை விபரித்தார்.

பணயக்கைதிகள் சுதந்திரமாகவே இருக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இழிவான வார்த்தைகளோ, மனதைப் புண்படுத்தம் கடும் சொற்களோ விடுதலைப்புலிகளால பயன்படுத்தப்பட வில்லை. விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இறக்கக்கண்டி கடற்பரப்பில் வைத்து தங்கள் உறுப்பினர்கள் பாதுகாப்பு படைகளிடம் சிக்கிக் கொள்ளக் காரணமாக இருந்தவர்கள் யார் என்பது பற்றியதாகவே விசாரணைகள் அமைந்திருந்தன.

எங்களைப் பிடித்து வைத்திருப்பதன் மூலம் இறக்கக்கண்டியில் கைதான போராளிகளை விடுவிக்கலாம் என எண்ணுகிறீர்களா என்ற தோரணையில் கடத்தலுக்கு ஆளானவர்களின் தரப்பில் ஒரு கட்டத்தில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு, அப்படி நாங்கள் எதிர்பார்க்கவில்லை. உயர் இராணுவ அதிகாரிகள் பலர் இன்னும் எங்கள் கைதிகளாக இருக்கிறார்கள். அவர்களைப் பற்றியே கவலைப் படாத அரசு, உங்களைப் பற்றி அக்கறை கொள்ளப் போவதில்லை. என்றாலும், உங்கள் மூலம் சில செய்திகளைச் சொல்ல முடியும் என நம்புகிறோம் என்ற விதத்தில் விடுதலைப் புலிகளின் பதில் அமைந்திருக்கிறது.

கடற்புலிகளின் தளபதி சூசை இவர்களுடன் உரையாடியுள்ளார். ''நாங்கள் விடுதலைக்காக போராடிவருகிறோம். எங்கள் தரப்பில் உள்ள நியாயத்தை உங்கள் அரசியல்வாதிகள் புரிந்து கொள்ள வேண்டும். போராட்டம் தமிழ் பேசும் மக்களுக்குப் பொதுவானது. அதற்கு ஊறு நேரும் வகையில் யார் நடந்தாலும் அதை அனுமதிக்க மாட்டோம்'' என்ற தொனிப்பொருளில் தனது கருத்துக்களை அவர் கூறியிருக்கிறார்

முதற்கட்டமாக ஏழு பேர் விடுதலை செய்யப்பட்டார்கள். 14.7.1997ல் விடுதலையான இவர்களில் ஒருவர் மௌலவி. ஏனைய அறுவரும் பாடசாலை மாணவர்கள்.

ஏனைய 32 பேரில் இருபது பேரை ஒரு குழுவாகவும், 12 பேரை ஒரு குழுவாகவும் பிரித்து வைத்திருக்கிறார்கள். சிறு சிறு வேலைகள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சிறு குற்றங்களில் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்ட போராளிகள் போலவே தாங்களும் நடத்தப்பட்டதாக விடுவிக்கப்பட்டவர்கள் கூறுகிறார்கள்.

20பேர் கொண்ட குழுவுக்கு கிராம சேவகர் ஒருவர் (இவரும் 32பேரில் ஒருவரே) பொறுப்பாக நியமிக்கப்பட்டு அவர் மூலமாகவே அச்சிறு சிறு வேலைகள் வாங்கப்பட்டிருக்கின்றன

இரண்டாவது தொகுதியில் 12 பேர் 30.09.1997இல் விடுவிக்கப்பட்டனர். இரு குழுக்களிலிருந்தும் ஆறு பேர் வீதம் தெரிவு செய்யப்பட்டே இவர்கள் விடுதலையானார்கள். ஏனையோர் கடிதங்கள் கொடுத்தனுப்ப அனுமதிக்கப்பட்டனர். கடிதங்கள் மேலோட்டமாக வாசிக்கப் பட்டபின்பே அனுமதிக்கப்பட்டன. 'நாங்கள் கடிதம் வாசித்ததையிட்டு குறை நினைக்காதீர்கள். உங்களையறியாமலே உங்களுக்கு பாதகமான சில விடயங்கள் எழுதப்பட்டு விடக் கூடாது என்பதற்காகவே பார்த்தோம்' என்று இதுற்கு விளக்கம் அளித்தும் உள்ளார்கள் விடுதலைப் புலிகள்.

இரண்டாவது தொகுதியினரும், விடுதலையான பின்னர் எஞ்சியிருந்த 20 பேருக்கும் அவர்கள் ஆறுதல் கூறியிருக்கிறார்கள். உங்களையும் கூடிய விரைவில் விடுதலை செய்வோம் என உறுதியளித்திருக்கிறார்கள். ரம்ழானை உங்கள் வீட்டிலேயே கொண்டாடலாம் என உற்சாகப் படுத்தியிருக்கிறார்கள்.

விடுதலையாவதற்கு இரு வாரங்களின் முன்னர் வந்த ஒரு புலி உறுப்பினர், ''மாவீரர் தினத்துக்கு முன்னர் உங்களை விடுதலை செய்யவுள்ளோம்'' என்று கூறிய செய்தி 20 பேருக்கும் தேனாக இனித்ததாம். தங்கள் உறவையும் சுற்றத்தையும் சந்திக்கப்போகிறோம் என்ற மகிழ்ச்சிஅவர்களுக்கு.

''20.11.1997இல் பாலன் என்றழைக்கப்படும் அரசியற்பிரிவைச் சேர்ந்த போராளி வந்து எங்களைச் சந்தித்தார். உங்களைத் தடுத்து வைக்க நேர்ந்தமைக்காக நாங்களும் வருந்துகிறோம். உங்களுக்கும் உங்களைச் சேர்ந்தவர்களுக்கும் ஏற்பட்ட உடல், உள உலைச்சல்களுக்காகவும் கவலைப் படுகிறோம். நீங்கள் எங்களவர்கள். விடுதலைப் போராட்டம் எல்லோருக்கும் பொதுவானது. நாங்கள் உங்களுடன் நடந்து கொண்டவிதம் பற்றி நீங்கள் தாராளமாக உங்களைச் சேர்ந்தவர்களிடம் கூறலாம். எங்கள் போராட்டத்தின் தேவையை, நியாயத்தை, உங்கள் நண்பர்களிடமும், உறவினர்களிடமும் கூறுங்கள். குறிப்பாக கதிரைக்கு ஆசைப்பட்டு தில்லுமுல்லு செய்யும் உங்கள் அரசியல் வாதிகளிடமும் எங்களைப் பற்றிக் கூறுங்கள். சந்தோசமாக வீடு சென்று உங்கள் குடும்பத்தவர்களுடன் வாழுங்கள்'' என்று கூறி எங்களை வழியனுப்பினார்.

புதிய உடுப்புக்கள் எங்களுக்கு வழங்கப்பட்டன. வாகனம் ஒன்றில் ஏற்றப்பட்டு, மல்லாவியில் வைத்து செஞ்சிலுவைச்சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டோம். அங்கிருந்து வீடு வந்து சேர்ந்தோம்'' என்று கூறினார் அந்த இளைஞர்.

இதயங்களும், உணர்வுகளும் எங்கும் ஒரே மாதிரித்தான் இருக்கின்றன. நல்லாட்சியொன்று நாட்டில் அமையுமானால், அவற்றின் வெளிப்பாடுகள் பயனுள்ளதாகவும், ஆரோக்கியமானதாகவும் அமையும். பிழைகள் நேரும் இடத்து அவை ஆட்சியாளர்களின் சுயநல அரசியலின் விளைவே என்பதைத் தவிர வேறு என்ன கூற முடியும்!

## மகசீன் சிறை...

அடுத்த நாள் இவ்வுண்ணாவிரதப் போராட்டம் குறித்தோ, தமிழ் அப்பாவி கைதிகள் தாக்கப்பட்டது குறித்தோ அதனை மூடி மறைக்கவென களுத்துறை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டது குறித்தோ சிங்களப் பத்திரிகைகள் மூச்சுக் கூட விடவில்லை. தமிழ் பத்திரிகைகளில் மட்டும் தான் இவை வெளிவந்தன. டிசம்பர் முதலாம் திகதியன்று இலங்கையில் அதிகம் விற்பனையாகும் சிங்கள (பேரினவாத) தினசரிப் பத்திரிகைகளான "திவய்ன", "லங்காதீப" ஆகியவற்றில் கொட்டை எழுத்தில் வெளியான தலைப்புச் செய்தியில் சிறைச்சாலையிலிருந்து புலிகள் தப்பிப்போக முயற்சி வெடிமருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டன என்ற செய்தி வெளியாகியிருந்தது.

திவய்னவில் செய்தி இப்படி வெளியானது.

"வெலிக்கடையிலிருந்த புலிகள் மாற்றம். வெற்றிலைக் கூறு கூட கொண்டு செல்ல முடியாத சிறைச்சாலைக்குள் வெடிமருந்துகள் போனதெப்படி?...." இச்செய்தியில் புலிகளோடு தொடர்பு கொண்டிருந்த மலையக வாலிபர்களும் இதில் அடங்குவர். (இவ் இளைஞர்கள் சந்திரிகா பதவியிலமர்ந்து இரண்டே மாதங்களில் -1994 ஒக்டோபர் அளவில்- மலையகத்தில் நடத்திய வேட்டையின் போது கைது செய்யப்பட்டு இன்னமும் விசாரணை முடியாமல் தடுத்து வைக்கப்பட்டிருப்போராவர்)


லங்காதீப பத்திரிகையின் தலைப்புச் செய்தியில் ...

"அதிகாரிகளை தாக்கிவிட்டு தப்பிப் போகும் திட்டம்! புலிகள் கள்ளச் சாவி செய்து சிறையிலிருந்து தப்ப முயற்சி, விசாரணை நீடிக்கிறது. பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. பல சிறு சிறு ஆயுதங்கள், வெடிமருந்து பொருட்கள் கண்டெடுப்பு..." என செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

—> 20

www.tamilarangam.net






# ஆர்டிக்கில்-19 அம்மாவுக்கு எழுதுவது

தமிழில் எம்.கே.எம்.ஷகீப்

இலங்கையின் புகழ் பெற்ற பத்திரிகையாளரும், சண்டே டைம்ஸ் பத்திரிகையின் பாதுகாப்பு, மற்றும் இராணுவம் தொடர்பான செய்திகளை எழுதி வருபவருமான இக்பால் அத்தாசுக்கு எதிராக உத்தியோகபூர்வமான முறையில் திட்டமிட்டுச் செய்யப்படும் பிரச்சாரங்களையிட்டு தணிக்கைக்கு எதிரான சர்வதேச அமைப்பான Article 19 ஆழ்ந்த கவலையும், கரிசனையும் கொள்கிறது. இக்பால் அத்தாஸ் தொடர்ந்தும் தனது புலனாய்வுச் செய்தியறிக்கைகளை எழுதவிடாது தடுக்கும் நோக்குடன் இம்முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை அறிய முடிகிறது.

பல்வேறு சர்வதேசச் செய்தித் தொடர்பு அமைப்புகளுக்கும் செய்தியாளராகச் செயற்படும் இக்பால் அத்தாஸின் நிலைமை தொடர்பாக மீண்டும் தங்களுக்கு எழுதவேண்டியிருப்பதையிட்டு மனம் வருந்துகிறோம். இதற்கு முன்னமும் இவ்வருடம் இவர் அச்சுறுத்தலுக்காளாகி, கண்காணிக்கப்பட்டு வந்தது தொடர்பாகத் தங்களுக்கு எழுதியிருந்தோம்.

இலங்கையின் தொலைக்காட்சி, வானொலி பத்திரிகைகள் போன்றவற்றில் அண்மையில் பல தடவைகள் மேற்கொள்ளப்பட்ட குற்றச்சாட்டுக்களை நாம் மிகுந்த கரிசனையுடன் அவதானித்து வந்திருக்கிறோம். இவையெல்லாம் புலிகளின் மொழி பெயர்ப்பாளராக இருந்து பாதுகாப்புப் படையினரிடம் அண்மையில் சரணடைந்த செல்வதுரை செந்தில்நாதன் அளித்த வாக்கு மூலங்களின் ஊகங்கள் மூலம் எழுந்தவையாகும். இவ்வாறான ஒரு கருத்துருவாக்கத்தின் மூலம் இக்பால் அத்தாசை "புலிகளின் ஒரு பணியாளராகக் காட்டும் நோக்கம் இருப்பது தெரிகிறது. புலிகள் மற்றச் செய்தி ஊடகங்களை அவதானிப்பது போன்று இவரின் வாராந்தப் பத்தியையும் தொடர்ந்து அவதானித்து வந்திருப்பதாகக் கூறப்பட்டதாலேயே இவ்வாறான நிலை தோன்றியுள்ளது. பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும் விமானப்படைத் தளபதியும் கூட இக்பால் அத்தாசை புலிகளின் கையாள், என்று குற்றஞ்சாட்டியிருந்ததை நாங்கள் அவதானித்தோம்.

மிக அண்மையில் இக்பால் அத்தாஸ் அச்சுறுத்தல்களுக்கும், புலனாய்வுப் பிரிவினரின் கண்காணிப்புக்கும் உட்பட்டு வந்தார். அதைத் தொடர்ந்ததாக இந்தக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. அவர் பற்றி அறிவதற்கான புலனாய்வாக சீ.ஐ.டி. வாகனங்கள் பின் தொடர்ந்து கண்காணித்ததாக நாம் அதைக் கொண்டாலும் இது வரையில் அந்தப் புலனாய்வுகள் எதுவிதமான முடிவுகளையும் தெரியப்படுத்தியிருக்கவில்லை. இவ்வாறான ஒரு நிலையில் மீண்டும் அவர் மீது இக் குற்றங்கள் சுமத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இக்பால் அத்தாஸ் மீதான அசசுறுத்தல்களும், தற்போது ஒரு சில உயர் மட்டங்களின் விருப்பத்தின் பேரில் அவரை அவமதிக்கும் வகையிலம் மேற்கொள்ளப்படும் குற்றச்சாட்டுக்களும் அவரின் பொது வாழ்வைப் பாதித்து, தொடர்ந்தும் தான் ஒரு பத்திரிகையாளராக அவரது கடமைகளைச் செய்ய விடாது தடுத்துவிடும் என்று நாம் அஞ்சுகிறோம். அண்மையில் கூட அவர் விமானப்படையின் 16 விமானங்களுக்கு ஏற்பட்ட கதி குறித்து விசாரணைகளை மேற்கொள்ள ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக எழுதியிருந்தார். விமானப்படைக்குள் இடம்பெற்ற ஒழுங்கீனங்கள், ஊழல்களே விபத்துகளுக்கு காரணமென குழு கண்டறிந்தது. எனினும் அரசாங்கம் இது தொடர்பாக எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. மாறாக இது பற்றி எழுதும் பத்திரிகையாளரை அவமதிக்கிற வேலைகளும் விமானப் படையதிகாரிகளை பாதுகாக்கிற வேலைகளுமே மேற்கொள்ளப்படுகின்றன. அதே வேளை அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட விவாதம் உட்பட பாராளுமன்ற விவாதங்களில் பாதுகாப்பு அமைச்சு மிகுந்த ஈடுபாடு கொண்டிருப்பதாகவும் தெரிகிறது.

செந்தில்நாதனின் "ஊகமான" அறிக்கைகள் பத்திரிகைகளில் வரமுன்னமே மேல்சொன்னவாறான நிலைமைகள் இடம்பெற்றுவருவதாக Article 19 உடன் தொடர்பு கொண்டு தெரிவித்திருந்தார். இரண்டு வாரங்களுக்கு முன்னமே புலியிலிருந்து சரணடைந்த ஒருவரை தனது பத்தி புலிகளின் நலன் கருதி அவர்களுக்காக எழுதும் வகையில் உள்ளதாகக் கூறுமாறு பயிற்றுவிக்கப்படுவதாக, தனக்கு சில விமானப் படையதிகாரிகளால் எச்சரிக்கை விடுவிக்கப்படுவதாகவும் அத்தாஸ் தெரிவித்திருந்தார். தற்போது அதுவே இடம்பெற்றள்ளது. இக்பால் அத்தாசுக்கு அதிலும் குறிப்பாக சண்டே டைம்ஸ் மற்றும் ஏனைய பத்திரிகைகளுக்கு எதிரான தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெற அனுமதிக்கப்படக் கூடாதென நாம் விரும்புகிறோம்.

நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு பாதகமாக அமையக் கூடிய விதத்தில் எழுதப்படும் செய்திக் கட்டுரைகட்கும் புலனாய்வுத் தகவல் செயற்பாட்டுக்கும் இடையில் தெளிவான ஒரு எல்லைக் கோடு ஒன்று போடப்படுவதும், அது உயர்த்திப் பிடிக்கப்படுவதும் அவசியமாகும். புலனாய்வுத் தகவல் அறியும் செயற்பாடானது அக்கறைக்குரிய ஊழல் நிர்வாக முறைகேடுகள் என்பன பற்றி அவை பாதுகாப்புத்துறை என்றால் என்ன, வேறு அரசாங்கத் துறைகளாக இருந்தால் என்ன அவற்றை எடுத்துரைப்பதன் மூலம் மிகவும் முக்கியமான, மக்களது நலன்களைக் காக்கும் ஒரு "காவல் நாயின்" பாத்திரத்தை ஆற்றுகிற ஒன்றாகும். எங்களது அபிப்பிராயத்தில் இக்பால் அத்தாஸ் அவர்களது எழுத்துக்கள் இந்த ரகத்தையே சார்ந்தவை என்பதில் எந்தச் சந்தேகங்களும் இல்லை. இத்தகைய ஒரு செயற்பாட்டை அடக்க எடுக்கப்படும் எந்தவொரு முயற்சியும் அதிகார துஷ்பிரயோகமாகவே கருதப்பட வேண்டும் என்பதுடன் உடனடியாக நிறத்தப்படவும் வேண்டும்.

பாதுகாப்புப் படையினரால் தனது வீடு நேரடி கண்காணிப்புக்குள்ளாவது தொடர்பாக தங்களுக்கு அத்தாஸ் முன்னர் செய்த முறைப்பாட்டையிட்டு நீங்கள் எடுத்த நடவடிக்கை மாதிரி இது விடயத்திலும் தாங்கள் பொருத்தமான நடவடிக்கைகள் எடுத்து, ஒரு சுயாதீனமுள்ள பத்திரிகையாளராக செயற்படுவதற்கான உறுதிப்பாட்டை வழங்குவீர்கள் என எதிர்பார்க்கிறோம்.

இது விடயம் தொடர்பாக தங்களின் பதிலை எதிர்பார்க்கிறோம்.

மால்கம் ஸ்பாட்
பிரதிப் பணிப்பாளர்.

# நெலும் கமகே விவகாரம்:
# ஜனாதிபதியின் திரிசங்கு சொர்க்க நிலை !

சஞ்ஜித்

தாமே கொடுத்த அதிகாரத்தை தம்மீதே பரீட்சிக்க முயன்ற கதைகளை புராணங்களில் பலரும் படித்து இருக்கலாம்.

ஆனால், ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அப்படிப்பட்ட நிலையொன்று வந்திருப்பது பற்றி பலருக்கு தெரியாதிருக்கலாம்.

லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பெயரால் அந்தக் கதி அவருக்கு வந்திருக்கிறது.

ஆம், இந்த பொ.ஐ.மு அரசாங்கம் பதவிக்கு வந்தபோது தான் கொடுத்த வாக்குறுதிப்படி ஒரு சிறந்த லஞ்ச ஊழல் ஆணைக்குழுவொன்றை நியமிக்கும் சட்டமொன்றை கொண்டு வந்தது. ஏற்கெனவே இரு தடவை ஆணைக்குழுவுக்கும் அதன் தலைவருக்கும் இருந்த அதிகாரங்கள் போதாது என்பதால், புதிதாக மேலதிக அதிகாரங்களுடன் இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. .ந்த ஆணைக்குழுவுக்கு இரு ஆணையாளர்களையும், ஆணையாளர் நாயகத்தையும் கொண்ட மூன்று பேரை இந்த ஜனாதிபதி அவர்களே நியமித்துமிருந்தார். இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தபின் செய்த மிகவும் முக்கியமான மிகவும் வரவேற்கத் தக்க நடவடிக்கை இது என்று சொல்லலாம்.

இந்த ஆணைக்குழு சுதந்திரமானதும், அரசியலமைப்பு சட்டத்தினால் மட்டுமே கட்டுப்படுத்தப்படுவதாகவும், அந்த அரசியல் தலையீடுகட்கும் அப்பால் பட்டதாயும் அமைய வேண்டுமென்ற அடிப்படையிலேயே இந்த ஆணைக்குழுவை அமைப்பதற்கான சட்டம் கொண்டு வரப்பட்டது. ஏற்கெனவே ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் அப்போது இருந்த ஆணைக்குழுவால் அரசியல் பிரமுகர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் குறித்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட பல சந்தர்ப்பங்களில் அதன் பணிகளில், அரசியல் தலையீடு இருந்ததையும், அத்தலையீடுகள் காரணமாக அப்போது லஞ்ச ஊழல் ஆணையாளராக இருந்த நெலும் கமகே அவர்களை ஐ.தே.க. அரசு, பழி வாங்கியதையும் காரணமாகக் காட்டி பொ.ஐ.மு இச்சட்டத்தை மிகவும், சக்தி வாய்ந்த சடடமாக அறிமுகப்படுத்தியது.

இச்சட்டப்படி ஆணைக்குழுவை கட்டுப்படுத்தும் அதிகாரமும் அதன் உறுப்பினர்களை மாற்று அதிகாரமும் பாராளுமன்றத்தின் மூன்றில் இரு பெரும்பான்மைக்கே உண்டு, இச்சட்டப்படி நிரந்தர ஆணைக்குழுவான இது குற்றச்சாட்டுக்கள் குறித்து புலனாய்வு செய்வதுடன் குற்றவாளிகள் மீது, வழக்கு தாக்கல் செய்யவும் முடியும்.

இந்த ஆணைக்குழு, உருவாக்கப்பட்டபோது, முன்னர் இருந்த ஆணைக்குழு தலைவராக இருந்த, பொ.ஐ.மு.வால் வெகுவாகப் பாராட்டப்பட்ட பெண் அதிகாரியான நெலும் கமகே அவர்கள், இயக்குனர் நாயகமாக நியமிக்கப்பட்டார்.

இந்த ஆணைக்குழுவின் சம்பளம், அதன் செயற்பாடு, அதன் பதவிக்காலம், என்பவை குறித்து எந்த மாற்றத்தையும் செய்யும் அதிகாரம், மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு மட்டுமே சாத்தியமாகும்.

ஆனால், மதுரைக்கு வந்த சோதனை போல வந்தது சோதனை ஜனாதிபதி சந்திரிகாவுக்கு.

ஆணைக்குழுவுக்கும், அதன் இயக்குனர் நாயகத்துக்குமிடையில், ஏற்பட்ட முரண்பாடு காரணமாக பலத்த சலசலப்பு ஏற்படத் தொடங்கியது. ஆணையாளர்கள், இயக்குனர் நாயகம் நெலும் கமகே அவர்களை விசாரிக்க முயன்ற போது, அந்த விசாரணைக்கான காரணங்கள், போலியானவை, சட்டபூர்வமற்றவை, திட்டமிட்ட அவமானப்படுத்தும் நோக்கிலானவை என்ற காரணங்களுக்காக அந்த விசாரணையை தடை செய்ய உத்தரவு கோரி நீதிமன்றத்தில் மனுச் செய்தார் நெலும் கமகே. அந்த விசாரணை இப்போது தொடங்கியுள்ளது.

இதே வேளை இந்த விசாரணைகள் பல அரசியல் நெருக்கடிகளை வெளியே அம்பலத்துக்கு கொண்டு வரலாம் என்பதாலோ என்னவோ, ஜனாதிபதி அவர்கள், இதற்கு ஏதாவது ஒரு முடிவு காண வேண்டுமென்று பொ.ஐ.மு அமைச்சர்கள், அவர்களை நெருக்கத் தொடங்கினார்கள்.

"இந்த விடயத்தில் நாம் தலையிட முடியாது. அது பாராளுமன்றத்தின் வேலை." என்று அவர்களை சமாதானம் செய்யப் பார்த்தார் ஜனாதிபதி.

ஆனால் முடியவில்லை போலும்.

எனவே ஆணைக்குழுவின் இப்போதைய ஆணையாளரான ருத்ரா ராஜசிங்கத்தையும், குழுத்தலைவர் விஜேசுந்தர அவர்களையும் ஆணைக்குழுவிலிருந்து, இராஜினாமா செய்யுமாறு கோரி விட்டார் ஜனாதிபதி.

அப்படி உத்தரவிட அவருக்கு சட்டபூர்வ உரிமையில்லை தான். ஆனாலும் அவரே கொண்டு வந்த சட்டம், அவரே நியமித்த ஆணையாளர். கேட்டுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை அவருக்கு.

ஆனால் பாவம் அவர்.

ஆணையாளர்கள் பதவி விலக மறுத்துவிட்டார்கள். மறுத்தது மட்டுமல்ல அப்படி தம்மை கோர ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லை என்றும் தெரிவித்து விட்டார்கள்.

இயக்குனர் நாயகம் நெலும் கமகேயைப் பொறுத்தவரை அவரைப் பதவியிலிருந்து மாற்ற ஜனாதிபதிக்கு சட்டபூர்வ உரிமை உண்டு. ஆயினும் அவரும். ஜனாதிபதியின் கோரிக்கையை நிறைவேற்றவில்லை.

விரும்பினால், முன்பு ஜனாதிபதி வீஜேதுங்க செய்ததைப் போல் செய்யட்டும் என்று நினைக்கிறாரோ என்னவோ?

ஜனாதிபதிக்கு ரெண்டும் கெட்டான் நிலை.

ஒரு புறம் தனது கட்சி சகாக்களின் அழுத்தம். மறுபுறம் வளர்த்த கடா மார்பில் பாய்வது போல தாம் நியமித்தவர்களே தனது கோரிக்கையை மறுக்கும் பரிதாபம்.

ஆணைக்குழுவினுள் நடக்கும் போர். அரசாங்கத்தின் பெயரை நாசமாக்குவது மட்டுமல்லாமல். ஜனாதிபதிக்கே சவால் விடும் ஒன்றாகவும் மாறிப் போயிருப்பது ஒரு விசித்திரமான துயர நிலை தான்.

எந்த அதிகாரம் தனக்கு வேண்டாம் என்று ஜனாதிபதி சொன்னாரோ அந்த அதிகாரத்தையும். பயன்படுத்தி தாம் எவ்வளவோ காரியங்களைச் செய்து விட முடிகிறது என்பதால். அதை இன்னமும் அவர் இறுக்கிப் பிடித்திருக்கிறார். அவர் அதை விட மாட்டார் என்கிறார்கள் விமர்சகர்கள்.

ஆனால் அந்த அதிகாரமும் இங்கு சறுகிப் போய் விட்டது.

இந்த நிலையை அன்றைய புராணக் கதைக்கு ஒப்பிடலாமோ?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அரசு-வான் படை-அத்தாஸ்-செந்தில் நாதன்
# தடியைக் கொடுத்து அடி வாங்கிய அதிகாரிகள்!

ஆறாம் வகுப்பு என்று ஞாபகம்

அப்போது எங்களுக்கு சமயபாடம் படிப்பித்துக் கொண்டிருந்த ஆசிரியர் ஒரு பண்டிதர். அவரை எல்லோரும் பண்டிதர் என்றே அழைப்பார்கள். நன்றாக வகுப்பைச் சிரிக்க வைத்தே நேரத்தை ஓட்டி விடுவார். அவர் வகுப்புக்கு வந்தாலே எமக்கு கொண்டாட்டம் தான். பெரும்பாலான நேரங்களில் எதையாவது கதைத்து எம்மைச் சந்தோசமாக சிரிக்க வைப்பார். எப்பவாவது திடீரென்று இருந்தால் போல் ஞாபகம் வந்து படிப்பிப்பதும் உண்டு.

அவருக்குப் பிடிக்காத ஒரு விடயம், அவரிடம் கேள்வி கேட்பது. 'எனக்கு இது விளங்கவில்லை' என்று சொன்னால் அவருக்குப் பிடிக்கும். 'இப்படி என்றால் என்ன' என்று கேட்டால் அவருக்குப் பிடிக்காது. அதுவும் அவருக்கு உடனடியாக ஞாபகத்துக்கு வராத ஏதாவது சந்தேகத்தை கேட்டு விட்டாலோ, அவ்வளவு தான். அவர் ஏசுகிற ஏச்சுக்கு அளவே இருக்காது. கேள்வி கேட்டவரை முழு முட்டாள் என்று நிரூபிக்காமல் அவர் வகுப்பை விட்டு வெளியேறவே மாட்டார்.

ஒரு முறை எங்கள் வகுப்பில் ஒரு சந்தேகம். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் பற்றிய சந்தேகம் அது. ஆணவம் என்றால் புரிகிறது. மாயையும் புரிகிறது. கன்மம் என்றால் என்ன என்று புரியவில்லை. புத்தகத்தில் தேடிப்படிக்கும் ஆர்வம் பெரிதாக இருக்கவில்லை. ஆசிரியரிடம் கேட்டு விடலாமே என்ற நினைப்பு. ஒரு வேளை அவருக்கே தெரிந்திருக்குமோ என்னவோ என்றும் நாம் எங்களுக்குள் கதைத்தும், சிரித்தும் இருந்தோம்

ஒரு மாணவன், ஆசிரியர் வந்ததும் வராததுமாக முட்டாள் தனமாக எழுந்து நின்று கேட்டுவிட்டான்.

''சேர்.. கன்மம் என்றால் என்ன?''

அவருக்கு மட்டுமல்ல, அவன் அவசரப்பட்டு அப்படிக் கேட்டது எங்களுக்கே ஒரு மாதிரி இருந்தது.

ஆசிரியர் தான் கொண்டு வந்த கூடையை மேசைமீது வைத்தார். தனது சால்வையை எடுத்து ஒரு முறை முகத்தை ஒத்திவிட்டு கதிரையில் போட்டார்.

''யார் அது கன்மம் என்றால் என்ன என்று கேட்டவன்... இஞ்சாலை வா''

நாம் நடக்கப்போகிற ஒரு திகில் நாடகத்தைப் பார்க்கும் தவிப்புடன் உட்கார்ந்திருந்தோம்.

''உன்ரை பேர்''

''.......'' சொன்னான்.

''கொப்பனார் பேர்''

''போன முறை சமயத்திலை எத்தினை மார்க்ஸ்''

''நாற்பத்தி ஏழு''

''நாற்பத்தி ஏழு எடுக்கிற நாய்ப்பயல், நீ கேள்வி கேட்கிறாய் என்ன கேள்வி...''

''சேர்...''

''பொத்துவாய்''

''சரிசேர்''

''திருக்குறள்ளை எத்தினை அதிகாரம் இருக்கு''

''.......'' அவனுக்குத் தெரியவில்லை.

''திருநாவுக்கரசரின் இயற்பெயர் என்ன''

''........'' அவன் பதில் பேசவில்லை.

''வைச வினாவிடையை எழுதியது யார்''

''.......''

''இதொண்டுக்கும் மறுமொழி தெரியாது, கன்மத்தைப்பற்றிக்கேள்வி கேட்க வந்திட்டார் கேள்வி...

அவனுக்கு எத்தனை அடி விழுந்தது என்று ஞாபகம் இல்லை. ஆனால் 'செமத்தியான' அடி என்பது மட்டும் ஞாபகம்.

எங்களுக்கு பிறகு அந்தக் கேள்விக்கு பதில் அவரிடமிருந்து கிடைக்கவே இல்லை. ஆசிரியருக்கு அது தெரியுமோ என்று நாம் அறிந்து கொள்ள முடியவும் இல்லை. இந்தக் கதையை நான் இப்போது எழுதுவதற்கு ஒரு காரணம் இருக்கிறது.

உங்களிடம் ஒருவர் பிழைபிடித்தால், முதலில் அவர் மீது ஆயிரம் பிழையைப் பிடித்து உரத்துக்கத்தி விடுங்கள். அப்போது உங்கள் பிழைபற்றிய கதை அடிபட்டுப் போய்விடும்.

ஆனால் பிடிக்கிற பிழை ஒழுங்கான பிழையாக இருக்க வேணும். அதிலே தப்பிவிட்டால், அவ்வளவு தான். விமானப்படைத் தலைமையகம் போல மூக்குடைபட்டு சந்திசிரிக்க நிற்க வேண்டும்!

ஆம். விமானப்படைத் தலைமையகம் அரச பத்திரிகைகளையும். தொலைக்காட்சி, வானொலியையும் பயன்படுத்தி பத்திரிகைகள் மீதும் இக்பால் அத்தாஸ் மீது பிழைபிடிக்க எடுத்த முயற்சிகள் போல அவை 'அம்போ' ஆகிவிடும்.

விமானப்படையின் விமானங்கள் தொடர்ச்சியாக வீழ்ந்து நொருங்கியதற்குக்காரணம் என்னவென்று விசாரிக்கவென ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசாரணைக் கமிசன் அவற்றுக்கு விமானப்படைத்தளபதி ஒலிவர் ரணசிங்கவின் பொறுப்பீனமும், விமானங்களை வாங்குவதில் நடைபெற்ற முறைகேடுகளுமே காரணம் என்று தெரிவித்திருந்தது தெரிந்ததே. இதைச் சுட்டிக் காட்டி, அரசாங்கம் ஏன் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேள்வி எழுப்பியிருந்தார் பத்திரிகையாளர் இக்பால் அத்தாஸ்.

இக்பால் அத்தாஸின் இந்தக் கேள்விக்கு நேரடியாக முகம் கொடுக்க முடியாத அரசாங்கமும், பாதுகாப்பு அமைச்சும், விமானப்படைத் தலைமையும், அவரை மிரட்டும் விதத்தில் நடவடிக்கைகளில் இறங்கின. அதுவும் பெரிதாக எடுபடாமல் போகவே அவர் எழுதும் கட்டுரைகள், இராணுவத்தின் இரகசியங்களை எதிரிக்கு தெரிவிக்கும் விதத்தில் அமைந்துள்ளன என்று பிரச்சாரம் செய்தன.

இந்தப் பிரசாரத்திற்கு கடைசியாக அவர்களுக்குக் கிடைத்த துருப்புச்சீட்டுத்தான் செல்வத்துரை செந்தில்நாதன் என்ற மொழிபெயர்ப்பாளர். புலிகளுக்கு ஆங்கிலப் பத்திரிகைகளில் வரும் கட்டுரைகளை மொழிபெயர்க்கும் வேலையில் இருந்ததாக சொல்லப்படும் இந்த நபர், தற்போது படையினரிடம் சரணடைந்துள்ளார். இவர் தமக்கு வழங்கிய தகவலின்படி இக்பால் அத்தாஸின் கட்டுரைகள் புலிகளுக்குப் பல இரகசியங்களை அறியத்தருவனவாக விமானப்படை அதிகாரிகள் அவர் மீது குற்றம் சாட்டியுள்ளனர்.

இலங்கை வானொலி, ரூபவாஹினி, லேக்ஹவுஸ் பத்திரிகைகள் என்பவற்றின் மூலமாக பெரிதுபடுத்தி வெளியிடப்பட்ட இந்த 'செந்தில்நாதன்' பற்றிய செய்திகளை கேட்ட, பார்த்த, படித்த எவரும் அது ஒரு வெறும் வெற்றுத் தோட்டாவே என்பதைத் தெளிவாகவே புரிந்து கொள்வர்.

ரூபவாஹினியில் திரும்பத் திரும்பக் காண்பிக்கப்பட்ட செந்தில்நாதனின் பேட்டியில் ஒரு விஷேடம் என்னவென்றால், பேட்டி காண்பவரை கமரா காட்டவில்லை. அவரது குரல் மட்டுமே ஒலிக்கிறது. செந்தில் நாதனோ, வார்த்தைக்கு வார்த்தை 'சேர்' போட்டுப் பேசுகிறார். யாரோ ஒரு படை அதிகாரியால் காணப்பட்டதாகக் கூறப்படும் இப்பேட்டியில் செந்தில்நாதன் கூறும் தகவல்களைப்பார்த்தால், அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்க முடியாது என்பது தெரியும். ஒரு கட்டத்தில் அவர், தான் இக்பால் அத்தாஸின் கட்டுரையை எந்தப் பத்திரிகையில் இருந்து மொழி பெயர்த்தேன் என்று கூடத் தெரியவில்லை என்கிறார்.

இக்பால் அத்தாஸ் பற்றிய கேள்விகளை வேண்டுமென்றே இந்தப்படையதிகாரி கேட்டு தமக்குச் சாதகமான பதிலைப் பெற முயன்றுள்ளார் என்பதை பேட்டியைக் கவனிக்கும் ஒருவர் இனங் கண்டு கொள்ள முடியும். படையதிகாரிகளே பேட்டியாளர்களாக மாறி 'பேட்டி தயாரிப்பது' இது முதல் தடவையல்ல. இக்பால் அத்தாஸ் விவகாரத்தில் ஏற்கெனவே விமானப்படை தளபதியை 'பேட்டி' கண்டதாக கூறப்படும் பேட்டி ஒன்று பத்திரிகைகட்கு வழங்கப்பட்டிருந்தது. இந்தப்'பேட்டி'யும் கூட ஒரு திட்டமிட்ட பிரச்சார 'கேள்வி பதில்' விடயம்தான் என்று சண்டே ரைம்ஸ் பத்திரிகை சுட்டிக்காட்டியிருந்தது.

இந்த செல்லத்துரை செந்தில்நாதன் என்ற நபர் புலிகளுக்குக் கிடைத்துள்ள பயனுள்ள தகவல்கள் எவை என்பதைப்பற்றி எதுவும் சொல்லவில்லை. படையதிகாரியும், புலிகளைப்பற்றி அதிகமாக அறிந்து கொள்ளக்கூடிய கேள்விகள் எதையும் கேட்கவில்லை. பிரபாகரன் அப்பிள் ஜூஸ் குடிக்கக் கொடுத்த கதையைத் தவிர வேறெதையும் அவர் தெரிவிக்கவில்லை. பிரபாகரன் பற்றி இப்படிக் கதைகளைக் கூறுவதில் அரசாங்க தொடர்புசாதனங்களுக்கு இருக்கும் அக்கறைக்கு அளவே இல்லை' முன்பொரு தடவை பிரபாகரன் தங்கியிருந்த சொகுசு மாளிகை என்று கம்பன் கழக மண்டபத்தைக் காட்டினார்கள். இவர்களது நியாயம் திருப்பிக் கேட்கப்படலாம் என்பது பற்றி இவர்கள் நினைத்துப்பார்ப்பதே இல்லை! யுத்தத்தில் உயிரிழக்கும் படையினர் அவர்களது குடும்பங்கள் பற்றி கவலையுற்று இவர்களது பாதுகாப்பு அமைச்சர் பாணும் சீனியில்லாத பிளேன்ரீயுமா குடித்துக் கொண்டு இருக்கிறார் என்று எரிச்சலுடன் கேட்கத் தோன்றும் அளவுக்கு இவர்களது கேலிக்கூத்துக்கள் அமைந்திருந்தன.

புலிகளின் மொழிபெயர்ப்பாளர் வெறும் மொழிபெயர்ப்பாளர். அவருக்குக் கொடுக்கப்படுவதை அவர் மொழி பெயர்த்தார். இக்பால் அத்தாஸின் கட்டுரைகளும் மொழிபெயர்க்கப்பட்டன. இதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது? பிரச்சினை இக்பால் அத்தாஸின் கட்டுரையைப் படிப்பது, இராணுவ தகவல்களை அறியத்தான் என்று கூறத்தான். ஆக, புலிகள் இலங்கை அரசாங்கத்தின் இராணுவத் தகவல்களை அறிய கொழும்பின் ஞாயிறு இதழ்களைத்தான் நம்பியிருக்கிறார்கள் என்று கூற மக்களுக்கு காதிலே பூ சொருக நினைக்கிறது வான் படை.

எப்படியோ இந்த முயற்சியும் தோற்றுவிட்டது.

வான்படையையும் அரசாங்கத்தையும் நோக்கி இக்பால் அத்தாஸ் கேட்ட கேள்வி இன்னமும் வலிதாகி நிற்கிறது.

தடியைக் குடுத்து அடிவாங்கிய நிலையில் தவிக்கிறார்கள் விமானப்படை அதிகாரிகள்!

o

– அரவிந்தன் –

# மெல்லத் தமிழினி...

## உப்பன் கம கொஹேத ?

இரண்டு வாரங்களுக்கு முன்பு.

ஒரு சனிக்கிழமை, மாலை நேரம். கொழும்பு காக்கை தீவுக் கடற்கரையில் பொழுது போக்குக்காக திரண்டிருந்தவர்கள் வீடு நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தார்கள்.

அவர்களில் ஒழிந்திருக்கக் கூடிய புலிகளைப் பிடித்துவிட வேண்டும் என்ற அவசரத்துடன் இரண்டு இராணுவ வீரர்கள்.

புலிகளை இனங்காண அவர்களுக்கு தெரிந்த ஒரே கேள்வி "உப்பன் கம கொஹேத?" (பிறந்த இடம் எது?)

ஒரு பதினைந்து நிமிடத்தில் கிட்டத்தட்ட பத்துப் பேர் வரை மாட்டுப்பட்டு விட்டார்கள்.

அத்தனை பேரும் பிறந்த இடம் குடாநாட்டிலுள்ள ஏதாவது ஒரு இடமாக இருந்தது.

குடா நாட்டிலுள்ள ஊரொன்றில் பிறந்தவர் என்றால், அவர் பொலிஸில் பதிந்திருந்தால் என்ன, அடையாள அட்டை வைத்திருந்தால் என்ன, கொழும்பில் வேலை பார்ப்பவராக இருந்தால் என்ன அவர்கள் புலிகள் தான் என்பது அந்த இராணுவத்தினர் இருவருக்கும் சொல்லிக் கொடுக்கப்பட்டிருந்தது. போலும்!

வீட்டிலே தன்னைப் பார்க்க வந்திருந்த நண்பர் ஒருவருடன் பேசிக் கொண்டிருந்த இன்னொரு நண்பர் சிகரட் வாங்க அந்த நண்பருடன் வெளியே வந்தார்.

"ஷ்.." என்று அழைத்தார் ஒரு இராணுவத்தான்.

தம்மைத்தான் கூப்பிடுகிறார்கள் என்று அறிந்த இருவரும் அருகில் வந்தார்கள்.

"உப்பன் கம கொஹேத"

"...." தமது ஊர்ப் பெயர்களை அவர்கள் சொன்னார்கள்.

அவ்வளவு தான் வேறு கதை எதுவும் இல்லை. அடையாள அட்டையை வாங்கிப் பார்க்கவும் இல்லை. "முன்னால் நடவுங்கள்" என உத்தரவிட்டு பின்னே நடந்தார்கள் இராணுவத்தினர் இருவரும்.

நண்பர்கள் இருவரும் அரசாங்கத்திலும், தனியார் துறையிலும் உத்தியோகம் பார்ப்பவர்கள். கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக கொழும்பில் இருப்பவர்கள். சரளமாக சிங்களம் பேசுபவர்கள். தம்மைப் பற்றிக் கூறி "ஏன் அழைத்துச் செல்கிறீர்கள்" என்று கேட்டிருக்கிறார்கள்.

இவை அந்த இராணுவத்தினர் காதில் விழவில்லை.

"அங்கே வந்து "சேரிடம்" சொல்லுங்கள். சந்தியிலே பஸ் நிற்கிறது. அங்கே சேர் இருக்கிறார்."

சந்திக்கு மொத்தம் பதினைந்து பேர் இருக்கும், நடந்து வந்தார்கள்.

சந்தியில் சேரும் இல்லை. பஸ்சும் இல்லை.

இராணுவத்தினர் அவர்களை முகத்துவார பொலீஸ் நிலையத்தை நோக்கி நடக்கச் சொன்னார்.

நடந்தார்கள். பொலிஸ் நிலையத்தில் அவர்களது "சேர்" பஸ்ஸில் இருந்தார். ஆனால் இவர்கள் கதையை கேட்கத் தயாராக அவர் இருக்கவில்லை.

பொலிஸ் நிலையத்தில் அனைவரும் ஒப்படைக்கப்பட்டனர்.

இரண்டு பேர் கூட ஒழுங்காக தடுத்து வைக்கப்பட முடியாத கம்பிக் கதவு போட்ட அறைக்குள் 15 பேரும் உள்ளே தள்ளப்பட்டார்கள்.

பொலிஸ்காரரிடம், பிடிபட்டவர்களது உறவினர்கள் போய் முறையிட்டார்கள். விடும்படி கேட்டார்கள்.

"நாங்கள் ஒண்டும் செய்யேலாது. ஆமி கொண்டு வந்து தந்தபடியால் என்.ஐ.பி. றிப்போர்ட் வரும்வரை விடேலாது...."

"அப்ப ஏன் பிடிச்சவை?"

"தெரியாது... அவங்கள் யாழ்ப்பாணம் எண்டதுக்காக இரண்டு முஸ்லிம் பொடியன்களையும் பிடிச்சு வந்திருக்கிறாங்கள்.. நாங்கள் என்ன செய்ய?"

மறுநாள் மாலை (ஞாயிறு) கொழும்பு அடையாள அட்டை வைத்திருப்பவர்கள் யாராவது வந்தால் பிணையில் உள்ளிருப்பவர்களை விடலாம் என்று பொலிஸ் அதிகாரிகள் சொன்னார்கள்.

அதுவும் பிடிபட்டவர்களது அடையாள அட்டையை வாங்கி வைத்துவிட்டுத்தான் விடுவார்களாம்..!

அடையாள அட்டையை மறுநாள் (திங்கள்) என்.ஐ.பி. றிப்போர்ட் வந்த பின் வந்து பெற்றுக் கொள்ளலாம் என்று சொன்னார்கள்.

ஆக, இரண்டு நாட்கள், பதினைந்து பேர் எந்தக் குற்றமும் இன்றி குடாநாட்டில் பிறந்த ஒரே காரணத்துக்காக, நின்ற நிலையில் கூட்டுக்குள் வைக்கப்பட்டிருந்தார்கள்.

ஒரே நாடு ஒரே மக்கள் என்ற முழக்கம் கேட்க மட்டும் தான் அழகு.

நடைமுறையில் அந்த ஒரே மக்கள் குடாநாட்டுக்கு வெளியே பிறந்தவர்கள் அல்லது சிங்கள மக்கள் மட்டும் தான் போலும்!

தமிழர்கள் இந்த நாடு தமது நாடு அல்ல என்று உணர்வதற்கு இதை விட வேறு புதிய காரணம் வேண்டுமா என்று கேட்கிறார் உள்ளுக்குள் இருந்து விட்டு வந்த நமது நண்பர்.

அம்மையாருக்கு இதெல்லாம் புரியுமோ என்னவோ?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே.. 44



## அரைத்த இறைச்சியும் முட்டையும் போல சிறுவர்களும் பயமும் !

டொக்டர் ஜெயிம் ஜி ஜினொல்ட்
தமிழில் : அருண்

### மிகவும் நல்லதனமாக இருத்தல்

சில குழந்தைகள் யதார்த்த நிலைமைக்கு அப்பாற்பட்டு மட்டுமீறிய நல்ல பிள்ளைகளாக இருக்கிறார்கள். அவர்கள் கீழ்ப்பணிவுள்ளவர்களாக, சொன்னபடி கேட்பவர்களாக திருத்தமானவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தாயின் உடல் நலத்தைப்பற்றி, தகப்பனாரது வியாபாரம் பற்றி, சின்னச் சகோதரியைக் கவனிப்பது பற்றிக் கவனம் செலுத்துகிறார்கள். அவர்களது முழு வாழ்க்கையும் பெற்றோரைச் சந்தோசப்படுத்துவதாகவே அமைந்திருக்கிறது. அவர்கள் தம் பிராயப் பிள்ளைகளுடன் விளையாடுவதில் சொற்பளவுக்கே சக்தியைச் செலவளிக்கிறார்கள்.

பாடசாலையிலும், அயலிலும் அவர்கள் தமது நல்லபிள்ளைக் குணத்தைத் தொடர்கிறார்கள். அவர்கள் பணிவும் நற்பண்பும் வாய்ந்தவர்களாகவும், தாம் பயப்படும் ஆசிரியரை அமைதிப்படுத்துவதில் அதிக நேரத்தையும், சக்தியையும் செலவிடுபவர்களாகவும் உள்ளனர். அவர்கள் ஆசிரியருக்கு அப்பிள்களைக் கொண்டு வந்து தரவோ, அவருக்காகப் படங்களை வரையவோ, கரும்பலகையை தானே துப்பரவு செய்யவோ செய்கின்றனர். இவர்கள் முதல் நாளிலிருந்தே தமது ஆசிரியர் எவ்வளவு நல்லவர் என்றும், அவர் மீது தங்களுக்கு எவ்வளவு விருப்பம் என்றும் கூறிக்கொள்ளக்கூடும். இந்தப் பாராட்டுரைகளும், அன்புப் பிரகடனங்களும் பெறுமதிமிக்கவையாகக் கருதப்பட முடியாது. இத்தகைய சிறுவர்கள் இதே சொற்களை ஒரு அன்னியருக்கும் சில வேளைகளில் தமது வகுப்பில் அதிகாரம் பண்ணும் ஒருவருக்கும் சொல்லக் கூடும். இத்தகைய இனிய வார்த்தைகளை அவர்கள் வெளிப்படுத்துவது, அவர்கள் தாம் கொண்டிருக்கும் பகைமை உணர்வு பற்றியும், அதன் காரணமாக மற்றவர்கள் அவற்றுக்கு கொடுக்கும் பதிலடி பற்றியும் எவ்வளவு தூரம் பயமடைந்திருக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்தும் ஒரு வடிவமாக இருக்கக் கூடும்.

இவ்வாறான குழந்தைகளிடம் அடிக்கடி அவதானிக்கப்படக்கூடிய ஒரு அறிகுறி தான் தொடர்ச்சியான மனச்சோர்வு ஆகும். பல 'நல்ல பிள்ளை' முகமூடிக்குப் பின்னால் பல 'மோசமான' தாக்கங்கள் மறைக்கப்பட்டிருக்கும். தமது பகைமை உணர்வுத் தாக்கத்தை ஒரு நற்பண்புள்ள நடத்தையாக மாற்றியமைப்பதற்கு தேவையான பெருமளவான விழிப்புணர்வைக் கொண்டிருப்பதானது இந்தச் சிறுவர்களின் ஆற்றலையும், வாழ்க்கையையும் பெருமளவுக்கு விழுங்கி விடுகிறது. அவர்கள் களைப்பாகவும் தேய்வுற்றவர்களாகவும் இருப்பதில் ஆச்சரியமில்லை.

மருத்துவம் இத்தகைய நல்லதனத்தை சீராக்கிச் சரிப்படுத்துவதில் பயனுள்ள பங்கை ஆற்றுகிறது. மருத்துவம் அவர்களது அடிமைத்தனப் போக்கை கை விடச் செய்து, சாதாரண உறுதிப்பாட்டை ஏற்றுக் கொள்ளச் செய்கிறது. அவதானிப்பின் மூலமாகவும் அனுபவத்தினூடாகவும் அவர்கள் பிறரின் நன்மதிப்பைப் பெறுவதற்காகவும் தன்னை மறைத்துக் கொள்வதற்காகவும் முயல்வதற்கு எந்த அவசியமும் இல்லையென்று புரிந்து கொள்வார்கள். அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக தமது உணர்வுத் தாக்கங்களை வெளிப்படுத்த முயல்வர். அவர்கள் தமது சொந்தத் தேவைகளைக் கண்டு கொள்ளவும், தமது சொந்த உணர்வுகளை அறிந்து கொள்ளவும் தமது அடையாளத்தை நிறுவவும் புரிந்து கொள்வர்.

### முதிர்ச்சியடையாச் சிறுவர்கள்

இந்தத் தலைப்பின் கீழ்வரும் சிறுவர்கள் குழந்தைகளைப் போல அன்பு காட்டப்பட வேண்டியவர்களாக தமக்கென சொந்த விருப்பும் தேவையும் கொண்ட வளர்ந்து வ்ரும் தனி நபர்களாக அல்லாமல் எப்போதும் தட்டிக் கொடுக்கப்பட வேண்டியவர்களாக உள்ள சிறுவர்களாவர். இத்தகைய மட்டுமீறிய செல்லமும், அதிகளவு பாதுகாப்பும் கொடுக்கப்பட்ட சிறுவர்கள் தமது குடும்ப எல்லைக்கப்பால் யதார்த்த நிலைமைகளை ஏற்றுக் கொள்ளத் தயாரற்று இருக்கிறார்கள். அவர்கள் மற்றவர்களது தேவைகளையும், உணர்வுகளையும் விளங்கிக் கொள்ளும் வாய்ப்புக் குறைந்தவர்களாக உள்ளனர். அத்துடன் அவர்கள் தமது உடைமைகளைப் பகிர்ந்து கொள்ள முடியாதவர்களாகவும், திருப்தி காண்பதற்கு நீண்ட நேரம் எடுப்பவர்களாயும் இருக்கின்றனர். அவர்கள் தாம் விரும்புவதை விரும்பும் நேரத்திலேயே பெற்றுக் கொள்ள விரும்புபவர்களாக பழுதாக்கப்பட்டவர்களாக இருப்பர். அவர்கள் தமது பெற்றோர், சகோதரர்கள், சக தோழர்கள் ஆகியோரில் பெரிதும் தங்கியிருப்பவர்களாகவும், தம்மீதான கவனம், தமக்கான உதவி, தமக்கான உத்தரவு என்பவற்றிற்கான தொடர்ச்சியான கோரிக்கைகளின் மூலம் மற்றவர்களை பெரிதும் இடைஞ்சல் படுத்துபவர்களாயும் இருப்பர். அவர்கள் தாம் முயற்சி செய்வதற்குப் பதிலாக, தமக்கு எல்லாம் வழங்கப்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பர். தமக்கு உடை அணிந்து விடப்படவேண்டும் என்றோ, தமக்காக மற்றவர்கள் காத்திருக்க வேண்டும் என்றோ, தமக்கு ஊட்டிவிட வேண்டும் என்றோ அவர்கள் எதிர்பார்க்கக் கூடும். இவ்வாறு தொடர்ந்தும் 'எடுக்குக் குழந்தை'களாக இருப்பவர்கள் முரண்பாடுகளுக்கு உள்ளாகிறார்கள். அவர்கள் வீட்டில் மனச்சுமையையும் பாடசாலையில் குழப்பத்தையும், அயலில் சண்டையையும் ஏற்படுத்துபவர்களாக உள்ளனர்.

மனோ வைத்தியம் கவனமாக தெரிவு செய்யப்பட்ட குழுக்களின் வடிவில் இச்சிறுவர்களுக்கு செய்யப்படுவதில் குறிப்பிடத்தக்க பயன் கிடைக்கிறது. இந்தக் குழுக்கள் ஊக்குவிப்பையும், வளர்ந்து வருவோருக்கான ஆதரவையும் வழங்குவதுடன் அவர்களுக்கு புதிய நடத்தை முறைகளைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கான பாதுகாப்பான ஒரு இடத்தையும் வழங்குகிறது. இந்தக் குழுவில் அவர்கள் சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத தமது பழக்க வழக்கங்கள் எவை, எத்தகைய பழக்கங்கள் தம்மிடம் எதிர்பார்க்கப்படுகின்றன என்பதை கற்றுக் கொள்கிறார்கள். இதன் விளைவாக, தமது சகவயதாளிகளுடைய தரத்திற்குத் தம்மைச் சரிசெய்து கொள்ள அவர்கள் முயற்சி எடுக்கிறார்கள். இந்தக் குழுவில் அவர்கள் பொருட்களைப் பகிர்ந்து கொள்ளல், அன்பான பெரியவர்களின் கவனத்தைப் பெற்றுக் கொள்ளுதல் போன்ற முக்கியமான நுட்பங்களை படிக்கிறார்கள். அவர்கள் போட்டியிடவும் ஒத்துழைக்கவும் கற்றுக் கொள்கிறார்கள். சண்டையிடவும், சமாதானமடையவும், தமது தேவைக்காகப் பேரம் பேசவும், சமரசம் செய்யவும் பழகிக்கொள்கிறார்கள். இந்த நுட்பங்களை இத்தகைய சிறுவர்களை தமது சகபாடிகளுடன் சம தளத்தில் நின்று எதிர்கொள்ளத்தக்க விதத்தில் தயார் செய்கின்றன.

### பின்வாங்கப்பட்ட சிறுவர்கள்

இவர்களை வெட்கம், அச்சம், கீழ்ப்படிவு, ஒதுங்கிப்போதல், தனித்துப் போதல், அமைதி, கீழ்ப்பணிவு என்பவற்றைக் கொண்டவர்கள் என்று சொல்லலாம். அவர்களுக்கு தமது சாதாரணமான உணர்வுகளையோ, அன்பையோ வெளிப்படுத்துவதில் சிரமம் தெரிகிறது. அவர்களுக்கு சொற்ப நண்பர்களே இருப்பர். அத்துடன் சமூக விளையாட்டுக் களையும், அவர்கள் தவிர்த்துக் கொள்வர். அவர்கள் எப்போதும் மற்றவர்களே முதலில் நட்பைத் தெரிவிக்க வேண்டும் என்று விரும்புவார்கள். அப்படித் தெரிவித்த போதும் அவர்கள் கண்டும் காணாதது போல இருப்பர்.

பின்வாங்கப்பட்ட சிறுவர்கள், பாடசாலையில் ஆசிரியர்கள் அல்லது விளையாட்டுத்திடலில் உள்ள மாணவர்கள் ஆகியோருடன் உரையாடுவதில் சிரமப்படுவர். அவர்கள், ஒரு கேள்விக்கான பதிலை உரத்துக் கூறுமாறு கேட்கப்படும் போது தாம் அவமானப்படுத்தப்பட்டதாக நினைக்கின்றனர். அவர்கள் 'ஓம்' அல்லது 'இல்லை' என்ற வார்த்தைகளுடன் தமது கருத்துப் பரிமாறலைச் செய்யலாம். அல்லது அதையும் சொல்லாமல் விடலாம். அவர்கள் சும்மா வானத்தை எந்தநோக்கமும் அற்றவர்களாக வெறித்துப்பார்த்தபடி அமைதியாக இருப்பதன் மூலம் நீண்ட நேரத்தைச் செலவு செய்வர். எந்த நோக்கமும் இன்றி அலைந்து திரிவர். அவர்கள் விளையாடும் போது அவ்விளையாட்டில் சமூகத்தில் கொடுத்து வாங்க அவசியமில்லாத அமைதியான ஒரு பங்கைத் தமக்கு தெரிவுசெய்து கொள்வர். அவர்களுக்கு சமூகத் தொடர்புகள் பலவந்தமாக ஏற்படுத்தப்படும் போது அவர்களது பதகளிப்பு பயந்து அற்றும் அளவுக்கு வெளிப்படுகின்றது.

இவ்வாறான பின்வாங்கப்பட்ட சிறுவர்கள், மனோ வைத்தியத்தின் உதவியைப் பெற்றுக் கொள்ள முடியும். நட்புணர்வுள்ள பெரியவர்கள், அதிகளவு பொருட்கள், சமூகத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட குழுக்கள் என்பன அவர்களைத் தமது கூட்டுக்குள் அடங்கியிருப்பதை கடினமானதாக்குகின்ற இந்த ஒழுங்குமுறை தனித்துப்போவதிலிருந்து மீண்டு வருதலைத் துரிதப்படுத்துவதுடன் விளையாடுவதிலும் பிற சிறுவர்களுடன் உரையாடுவதிலும் சுதந்திரத்தைக் கொண்டிருக்க உதவுகின்றன.

### பயங்கொண்ட சிறுவர்கள்

அரைத்த இறைச்சியும் முட்டையும் போல சிறுவர்களும் பயமும் ஒன்றாகவே இருக்கின்றன. ஆய்வொன்று 90%மான சிறுவர்களிடம் குறிப்பிட்ட பயங்கள் ஒரு தடவையாவது அவதானிக்கப்பட்டுள்ளதாகக் கூறுகிறது. 3 வயது சிறுவர்கட்கு பிரதானமாக நாயும், நான்கு வயதுச் சிறுவர்கட்கு இருட்டும் பிரதானமாக பயமூட்டுவதாக உள்ளது. இத்தகைய பயங்கள் வயது வரவரக் குறைந்து, 8 வயதாகும்போது இல்லாமல் போய் விடுகின்றன. சாதாரண சிறுவர்களிடம் அவதானிக்கப்பட்ட பிறபயங்கள் - நெருப்பு, எஞ்சின்கள், சைரன் ஒலி, பூமியதிர்ச்சி, ஆட்கடத்தல், வேகமாக வாகனமோட்டுதல், பாம்புகள், உயரமான இடங்கள் என்பனவற்றால் வருபவையாகும்.

சில சிறுவர்கள் ஓரளவான அச்சத்துக்குள்ளாயினர் என்ற போதும், பெற்றோர்களில் ஒருவர் அருகிருக்கும்போது அவ்வளவாக நிலைமைகளிலிருந்து பின்வாங்கிவிடவில்லை. ஏனையோர்கள் பெருமளவு அசௌகரியத்தைக் காட்டினர். இரவு முழுவதும் வெளிச்சம் போடப்பட்டிருப்பதை அவர்கள் விரும்பினர். அல்லது நெருப்பு எஞ்சின்கள் போகும் போதோ அல்லது களவு பற்றிப் பேசும் போதோ அவர்கள் மனச்சுமையை வெளிப்படுத்தினர்.

சில பயந்த சிறுவர்களுக்கு நிபுணத்துவ உதவி தேவைப்படுகிறது. இப்படியானவர்கள் தொடர்ச்சியான, செறிவான பயத்துக்குள்ளாகுபவர்களாவர். அவர்களது எதிர்வினையின் செறிவு தான் இதனை வெளிப்படுத்தும் சமிக்ஞையாகும். அவர்கள் தமது பங்களிப்பால் செயலற்றவர்களாகவும், எதையும் செய்யும் சக்தியற்றவர்களாயும் - அவர்களது பயங்கள் கொஞ்சமும் தர்க்க ரீதியற்றதாகினும் கூட- இருப்பார்கள். அவர்கள், ஆகாயம் கீழே விழுந்து விடும், மின்னல் எமது வீட்டைத் தாக்கி விடும், எமது முழுக்குடும்பமும் வெள்ளத்தால் அள்ளிச் செல்லப்பட்டு விடும் என்பன போன்ற பயங்களை கொண்டிருக்கலாம். அவர்களது பயத்துக்குரிய விடயங்களுக்கு ஒரு எல்லையே இருக்காது.

சில சிறுவர்கள் மிகவும் மட்டுமீறிய சத்தத்துடன் காணப்படுவார்கள். அவர்களுக்கு முழு உலகமுமே அழுக்கானதாக இருக்கும். அவர்கள் தாம் அழுக்கடையாமல் இருப்பதற்காக மிகவும் அவதானமாக இருப்பார்கள். தம்முடைய கைகளிலோ, உடையிலோ ஒரு துளி தூசு கூட படுவதை அவர்கள் சகிக்க மாட்டார்கள். அவற்றை உடனடியாக கழுவ முடியாவிட்டால் அவர்கள் மனமுடைந்து போய்விடுகிறார்கள். இன்னும் சில சிறுவர்கள் சத்தத்திற்குப் பயப்படுகிறார்கள். உயரமான இடங்கள், புதிய மனிதர்கள், ஓடும் நீர், இருட்டு மூலைகள், சிறிய பூச்சிகள், பெரிய மிருகங்கள் என்பவற்றிற்கும் அவர்கள் பயப்படுகிறார்கள். அவர்கள் தமக்குப் பயமூட்டும் இடங்களையும் செயல்களையும் தவிர்ப்பதன் மூலமாக அவற்றால் வரக்கூடிய தமது பதகளிப்பிலிருந்து தப்பிவிட முயல்கிறார்கள். இதனால் அவர்கள் தண்ணீருக்கு அருகாகப் போவதையோ, ஏணியில் ஏறுவதையோ இருட்டறையில் இருப்பதையோ தவிர்க்கிறார்கள்.

மனோ வைத்தியத்தின் போது சில சிறுவர்கள், பயந்த சிறுவர்கள் தமது பயத்துடன் போராட வேண்டிய நிலைமையை உருவாக்கக்கூடிய விளையாட்டிலோ செயற்பாட்டிலோ இறக்கப்படுகிறார்கள். அவர்கள் சத்தம்போடும் விளையாட்டுத் துவக்குகளால் சுடுகிறார்கள், விரல்பூச்சுக்களைப் பயன்படுத்துகிறார்கள். தம் உடலை சேற்றினால் பூசிக்கொள்கிறார்கள். அல்லது வெளிச்சத்தை அணைத்துவிடுகிறார்கள். இந்தக் குழு, பயந்த சிறுவர்களை தமது பயங்களிலிருந்து தப்பியோட முடியாத நிலைமையை ஏற்படுத்துகின்றது. வைத்தியர் பயந்த எதிர்வினைகளை அவை நடக்கும்போதே எதிர்கொள்கிறார். அவர், குழந்தைக்கு அவர்களது பயத்தை விளையாடவும், பேச்சாகவும் வெளிப்படுத்த உதவுவதன் மூலம் பயந்த குழந்தையின் மேலோட்டமான பயத்தால் ஏற்படும் பதகளிப்பைக் குறைக்க உதவுகின்றார்.

### பெண்தன்மையுள்ள பையன்கள்

தகப்பனற்ற குடும்பங்களில் வளர்ந்த அல்லது பெருமளவுக்கு பெண்கள் உள்ள குடும்பத்தில் ஒரே ஆண் குழந்தையாகப் பிறந்த ஆண் குழந்தைகளே பையன்களுக்கான நிபுணத்துவ உதவி தேவைப்படும் குழந்தைகளாக இருக்கின்றன.

வரும்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சென்ற இதழின் தொடர்ச்சி...

# கிரிக்கெட்:

## சிங்கக் குட்டிகள்

## சிங்கக் கொடி

## சிங்கள தேசம் ?

### இலங்கைக் கிரிக்கெட் அணி

இலங்கைக் கிரிக்கெட் அணியானது முற்றிலும் சிங்கள இளைஞர்களாலானது (விதிவிலக்காக ஒருவர் தவிர) இதனால் தன்னை சிங்கள தேசத்தின் விளையாட்டு அணியாக உணர்வதில் அதற்கு சிரமமிருக்கவில்லை. அவ்வுணர்வை மேலும் உறுதிப்படுத்துவதுபோல் அரசு பக்கமிருந்து அதற்குக் கிடைத்த அபரிமித சலுகைகளும், மக்கள் மத்தியில் இருந்து கிடைத்த எல்லையற்ற ஆதரவும் அமைந்தன. ஆகவே தான் இலகுவில் சிங்களத் தேசிய உணர்வுடன் தன்னை இணைத்துக் கொள்ளவும், அதன் சமகால தேசிய அபிலாஷைகளைப் புரிந்து கொண்டு அதைப் பிரதிபலிக்கவும் அதனால் முடிகிறது. இவ்வாறு பிற்போக்கு சிங்கள தேசியவாத உணர்வுடன் இணைக்கப்பட்டு, தனது முழு ஆற்றலையும் சிங்களத் தேசத்தின் வெற்றியாக மாற்றி, வெற்றி இலக்கை அடைவதற்கான உளவியல் தயாரிப்பும், தலைமைத்துவமும் அதற்குத் தேவைப்பட்டது. அத்தலைமையே அர்ஜுன ரணதுங்க.

அர்ஜுன ரணதுங்க ஒரு சிங்கள பௌத்த அரசியல் குடும்பத்தைச் சார்ந்தவர். இவரது தந்தையார் இன்றைய பொ.ஐ.மு.வின் அமைச்சரவையில் பிரதி அமைச்சராக இருக்கிறார். அதேபோல் அர்ஜுனவின் அண்ணனும் ஒரு அரசியல்வாதி. இக்குடும்பமே சுதந்திரக் கட்சியின் தீவிர ஆதரவாளர்கள். ஐ.தே.கவின் காலத்தில் இவரது வீடு முற்றாக எரிக்கப்பட்டது. வீடு எரியும் போது தான் கிரிக்கெட் மட்டையை மாத்திரம் எடுத்துக்கொண்டு வெளியேறியதாக அர்ஜுன கூறுவார்.

இப்படியாக, ஒரு அரசியல் சூழ்நிலையில் வளர்க்கப்பட்டு, வாழ்ந்து வருபவராதலால்தான் இவரால் தான் சார்ந்த கட்சி, அதன் அரசு, அது பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் ஆகியோரின் உளவியலைப் புரிந்து கொள்ளவும், அவற்றுடன் தொடர்புபடுத்தி தனது பாத்திரத்தைப் புரிந்து கொண்டு செயல்படவும் முடிகிறது. தனது அணியின் வெற்றி என்பதை தனது தேசத்தின் வெற்றியாக அவர் காண்கிறார். ஆகவேதான் ஒரு விளையாட்டு வீரனுக்குரிய தலைமைத்துவத்திலும் விட மிகச் சிறப்பான தலைமைத்துவத்தை அவரால் வழங்க முடிகிறது. இதற்கு அவரது அரசியல் பின்னணியும் காரணமாகும். தனது அணியின் ஒற்றுமை கூட்டுமுயற்சி, அனைவருக்கும் வாய்ப்புக்களை வழங்குவது, வளங்களை சமமாகப் பகிர்வது போன்றவற்றில் அவர் கூடிய கவனம் செலுத்துகிறார். அதன் மூலம் அணியின் விளையாடும் திறனை பாதுகாத்து வளர்த்தெடுக்கிறார்.

இப்படியான தலைமைத்துவத்தின் கீழ் விளையாடும் அணியின் அங்கத்தவர்கள் ஒவ்வொருவருமே தமது வெற்றி என்பதை சிங்களத் தேசத்தின் வெற்றியாக இனங்கண்டதால், தமது ஆற்றலை உயர்ந்த பட்சம் வெளிப்படுத்துகின்றனர். அதன் மூலம் தமது தேசியக் கடமைகளை உச்சபட்சம் நிறைவேற்றுவதாக உணருகின்றனர். அவர்களைப் பொறுத்தவரையில் கிரிக்கெட் மைதானம் என்பது ஒரு போர்க்களமாகவே தெரிகிறது. அவர்கள் பந்தை எதிர்கொள்வது ஒரு எதிரியை எதிர்கொள்ளும் உணர்வுடனேயே. அதனால் தாம் பந்துகளை எதிர்கொண்டது பற்றி குறிப்பிடுகையில் 'Attacked', 'Whacked', 'Blasted' போன்ற பதங்களைப் பிரயோகிக்கின்றனர்.

சனத் ஜயசூரியவிடம் அவரது வெற்றி / சாதனை தொடர்பாக கேட்கப்படும் போதெல்லாம் ''நான் முன்னுரிமையளிப்பது நாட்டுக்கு. பிறகே எனக்கு'', ''எனது நாட்டுக்கு இதனால் பெருமை'' போன்ற பதில்களே அவரிடமிருந்து வரும்.

கிரிக்கெட் போட்டியில் இலங்கை வெற்றி பெற்றதும், வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக்கொள்ள மேடைக்குவரும் அர்ஜுனவின் பின்னால் சிங்கக்கொடி எப்பொழுதும் நிழலாடும். சிங்களத் தேசத்தின் வெற்றியாக அவ்வெற்றி கொண்டாடப்படுவதற்கு இது குறியீடாக அமைகிறது. சிங்கர் கிண்ணத்திற்கான போட்டியில் வெற்றிபெற்றதும், பகிரங்கமாக பியர் போத்தலை உடைத்து மகிழ்ச்சி தெரிவிக்க அர்ஜுன மறுத்து விட்டார். அதற்கு அவர் கூறிய காரணம், நாட்டில் யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் தாம் இவ்வாறு மகிழ்ச்சிக் களியாட்டங்களில் ஈடுபடக் கூடாது என்பதாகும். அதன் மூலம் நாம் ஈடுபட்டிருப்பது மகிழ்ச்சிக்கான விளையாட்டிலல்ல, தேசத்திற்கான ஒரு கடமையில் என்பதை அவர் மறைமுகமாக உணர்த்தினார். இதற்கு மகுடம் வைத்தாற்போல் கிரிக்கெட் வீரர்களுக்கு 'தேசபந்து' விருது வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.




'தாம் வெல்லப்பட முடியாதவர்கள்' எனும் உணர்வுக்கே இலங்கை கிரிக்கெட் அணியினர் தற்போது வந்துள்ளனர்.

> ''கிரிக்கட் போட்டியில் இலங்கை வெற்றி பெற்றதும், வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொள்ள மேடைக்கு வரும் அர்ஜுனவின் பின்னால் சிங்கக் கொடி எப்போதும் நிழலாடும். சிங்களத் தேசத்தின் வெற்றியாக அவ் வெற்றி கொண்டாடப்படுவதற்கு இது குறியீடாக அமைகிறது.''

### தொடர்புசாதனங்களும் கிரிக்கெட்டும்

இலங்கையில் இனவாத சித்தாந்தத்தைக் கட்டியமைத்ததில் தொடர்பு சாதனங்களுக்கு முக்கிய பாத்திரமுண்டு. ஆரம்பகாலத்தில் சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் செய்துவந்த காரியத்தை தற்போது தொலைக் காட்சியும், வானொலியும் (குறிப்பாக சிரச, சவன போன்ற தனியார் சேவைகள்) மிகத் திறமையாகவே செய்கின்றன. கிரிக்கெட்டை, பிற்போக்கு சிங்களத் தேசிய உணர்வுடன் இணைத்து இனவெறி உணர்வுகளைக் கட்டமைத்ததில் இவற்றிற்கு மிகப்பாரிய பங்குண்டு.

கிரிக்கெட் விளையாட்டை ஒரு இராணுவச் செயற்பாடாகவே இவை சித்திரித்து வருகின்றன.

தொலைக்காட்சியில் கிரிக்கெட் போட்டிக்காக விளம்பரம் செய்யும் போது பண்டைய ரோமாபுரி பாணியில் மூடிய இராணுவ உடையணிந்த இருவர் வாள்ச்சண்டை செய்வது போன்ற காட்சி காட்டப்படும்.

தற்போது கிரிக்கெட் போட்டி ஒளிபரப்பாகையில் இடைக்கிடை இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான விளம்பரங்கள்/ இராணுவச் சாதனைகள் ஒளிபரப்பப்படுகின்றன. அத்தோடு, பாரம்பரிய சிங்கள நடனங்கள்/ பௌத்த ஸ்தலங்களும் காட்டப்படுகின்றன.

போட்டி ஆரம்பமாவதற்கு முன்னரும், பின்னரும் ''கிரிக்கெட் உலகை வெற்றி கொள்ளும் சிங்கக் குட்டிகள்...'' எனும் சிங்கள மொழிப் பாடல்கள் ஒலி/ஒளிபரப்பாகும். அந்நேரம் திரையில் சிங்கக்கொடி நிழலிட கிரிக்கெட் வீரர்களின் சாதனைகள் காட்டப்படும். அதேபோல், நீர் எமது சிறிலங்கா, நாம் உமது சிறிலங்கா...'' எனும் நந்தா மாலினியின் பாடலும் ஒலி/ஒளிபரப்பு செய்யப்படுவதும் வழமை.

சிங்கள, ஆங்கில பத்திரிகைகள் விளையாட்டு வீரர்களை இராணுவ வீரர்களாக வெளிப்படையாகவே சித்திரிக்கின்றன. ''மகிமை பெற்ற எமது வீரர்கள்'' எனும் சொல்லையே இவை உலகக் கிண்ண வெற்றியின் பின் இலங்கை அணியைக் குறிப்பிடப்பாவிக்கின்றன. இலங்கை அணிக்கு ஏனைய நாடுகளில்/ மக்கள் மத்தியில் இருந்து கிடைக்கும் ஆதரவை ஒரு விளையாட்டுக்கு' (Play) கிடைக்கும் ஆதரவாகக் கருதாமல் தமது தேசம் ஏனையவர்களை வெற்றிக்கொண்டதற்கு - அதன் வெற்றிவீரர்களுக்கு அளிக்கப்படும் மரியாதையாக - ஏனைய மக்கள் அதற்கு தலைவணங்கப்படுவதாக சித்திரிக்கின்றன. இது அப்பட்டமான ஆக்கிரமிப்பு உணர்வின் வெளிப்படை.

இங்கு சிங்கள வர்ணணையாளர்களின் பாத்திரத்தையும் குறிப்பிட்டேயாக வேண்டும்.

இவர்கள் இலங்கை அணிக்கு வெற்றி நிச்சயிக்கப்பட்டது போல் தமது சொந்த உணர்வுகளை வெளிப்படுத்துகின்றனர்.

இலங்கை ஆட்டக்காரர்களின் செயற்பாடுகளை அபரிமிதமாகவே புகழ்வர். தவறுகளை அப்படியே மறைத்து விடுவர்.

ஏனைய அணிகளின் சிறுதவறுகளையும் மிகைப்படுத்திக் கூறுவர். சாதனைகளைப் பற்றி அவ்வளவாகக் கதைப்பதில்லை.

வர்ணணைகள் எப்போதும் சிங்களத்திலே தான் நடைபெறும். தமிழுக்கு இடமளிப்பதில்லை. இடைவேளைகளின் போதுதான் நடந்து முடிந்த விளையாட்டுப்பற்றி தமிழில் சுருக்கமாக அறிவிக்க இடமளிக்கப்படும். தமிழ் வர்ணணையாளரே இதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதைவிட, பிற்போக்கு இனவெறி உணர்வுகளை இவர்கள் பச்சையாகவே கக்குகின்றனர். ''பாகிஸ்தான் வெற்றிபெற்றால் பட்டாசு கொளுத்திடும் இங்குள்ள சிலர்'' எனக் குற்றஞ்சாட்டுகின்றனர். இந்த வரிகள் முஸ்லிம் தேசத்தின் (Muslim Nation) மனவுணர்வுகளை மிகவும் பாதிக்கக் கூடியவை. ஆனால் எதுவித நாகரீகமுமற்று, இப்படிக் கூறுவது தமது உரிமை போல் நடந்து கொள்கின்றனர். இவர்களைப் பொறுத்தவரையில் இங்கு வாழும் மக்கள் இலங்கை அணியைத் தவிர வேறுயாருக்கும் ஆதரவு வழங்கிவிடக்கூடாது. அதை ஒரு தேசத்துரோகமாகவே இவர்கள் சித்திரிக்கின்றனர்.

இந்த உணர்வுகளையே சிங்கள மக்களும் வெளிப்படுத்துகின்றனர். தமது அயலில்வசிக்கும் காரியாலயங்களில் ஒன்றாக வேலை செய்யும் தமிழர்களிடம் ''நீர் இந்தியாவுக்குத் தானே சப்போட் பண்ணுகிறீர்?''என முகத்துக்கு நேரேயே கேட்கின்றனர். இது ஒரு விதத்தில் ''நீர் புலி தானே?'' எனக்கேட்பது போன்றதே. அரசியலில் தமிழர் பற்றி இருக்கும் அதே சந்தேகம் இங்கும் வெளிப்படுகிறது.

இதனால், தாம் ஆதரிக்கும் அணிகள் தொடர்பான மகிழ்ச்சியுணர்வை வெளிப்படுத்திக்கொள்ள முடியாது மனதுள் புதைத்துக்கொள்ளும் அவல நிலையிலேயே தமிழ், முஸ்லிம் மக்கள் உள்ளனர்.

எதிரணி ஆட்டக்காரர்களில் திறமையாக விளையாடுபவரை 'ஆபத்தான மனிதர்', 'அபாயமானவர்', 'இவரைத் தோற்கடிக்கா விட்டால் இலங்கைக்கு கஷ்டம்..'' என வர்ணிப்பதன் மூலம் மொழியை வன்முறையாகப் பிரயோகிக்கின்றனர்.

மக்களது கண்களுக்கு தெரியாமல் நடைபெறும் யுத்தத்தை தமது வர்ணணைகளினால் கிரிக்கெட்டின் வடிவில் கண்முன்னால் கொண்டு வந்து நிறுத்துகின்றனர். அதன் மூலம் மக்களை பிற்போக்கு தேசியவாத உணர்ச்சி வெள்ளத்தில் மூழ்கடித்து விடுகின்றனர்.

இப்படியாகத் தோல்வியை ஜீரணித்துக்கொள்ள முடியாத மனநிலைக்கு சிங்கள மக்களையும், ஆட்டக்காரர்களையும் கொண்டு வந்து விட்டுள்ளனர் இந்த வர்ணணையாளர்கள்.


மக்கள் மத்தியில் நிலவும் 'Cricket Mania'வை அரசு பெரிதும் விரும்புகிறது. மக்களை அந்த உணர்வு நிலையில் வைத்துக்கொண்டு திரைமறைவில் மக்களைச் சுரண்டும் வேலைகளை வெற்றிகரமாகச் செய்து முடிக்கிறது. சென்ற வருடம் கிரிக்கெட் போட்டிகள் நடைபெறுகையில் பால்மாவை விலையேற்றியது. இம்முறை, கிரிக்கெட் வெற்றிக்களிப்பில் மக்கள் மூழ்கியிருக்க, இரவோடிரவாக பாணுக்கு விலையேற்றி உழைக்கும் மக்களின் அடிவயிற்றில் குத்திவிட்டது.

இவற்றையெல்லாம் மூடிமறைக்க, ஜனாதிபதி உடனடியாக மைதானத்திற்கு வந்து வெற்றி பெற்ற இலங்கையணியுடன் சேர்ந்து 'கேக்' வெட்டி மகிழ்ந்தார். இதன் மூலம் தனது சிங்களத் தேசிய உணர்வை மக்களுக்குக்காட்டி வெற்றியைத் தனதாக்கிக் கொண்டார். அது மாத்திரமன்றி, தேசிய கிரிக்கெட் அணியிலுள்ள அனைத்து ஆட்டக்காரர்களுக்கும் ஆளுக்கு 20பரப்பு காணி 'பத்தரமுல்ல'வில் வழங்குவதாகவும் அறிவித்தார். இப்படியாக, கிரிக்கெட் அணியும் படிப்படியாக ஆளும் ஆதிக்க சித்தாந்தங்களின் அதிகாரத்துவக் கூட்டில் அங்கமாக்கப்பட்டு வருகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# புதிய ஈரானியத் திரைப்படம்:

# மெய்யியலுக்கும் மதத்திற்குமிடையிலான போராட்டம்

சேரன்

ஈரான் நாட்டைப் பற்றிய மேற்குலக நாடுகளின் பார்வையும், கருத்தியலும் பிம்பங்களுமே தொடர்பு சாதனங்களை ஆக்கிரமித்திருக்கும் ஒரு சூழலில் ஈரானிய சினிமா, அண்மைக் காலங்களாக ஈரானிய மக்களின் பல்வேறுபட்ட வாழ்வியல்களைக் கலாபூர்வமாகச் சித்திரிப்பதன் மூலம், ஈரான் பற்றிய பல மாயைத் திரைகளை அகற்றி வருகின்றது.

அப்பாஸ் கியோறஸ்ற்றமி, ஜஃபர் பனாஹி மக்மல் பாஃப் போன்ற உலகப் புகழ்பெற்ற நெறியாளர்களின் வரிசையில் பர்விஸ் ஷஹாபி, ஃபர்ஹாத் மெஹ்ரன்ஃபார் ஆகிய புதிய, இளைய நெறியாளர்களும் சேர்ந்து கொண்டுள்ளனர். கடந்த பத்து வருடங்களாக இந் நெறியாளர்களின் படங்கள் உலகின் முக்கியமான சினிமா நகரங்களில் பலத்த அதிர்வுகளை ஏற்படுத்தி வருகின்றன. இதன் உச்சக்கட்டமாக இந்த வருடம் ஃபிரான்ஸ் நாட்டின் கான் நகரில் இடம்பெற்ற உலகத்திரைப்பட விழாவில் அதியுயர்ந்த விருதான Palme' d'or (பாம்டோர்) விருது ஈரானிய நெறியாளர் **அப்பாஸ் கியோறஸ்ற்றமிக்கு** அவருடைய Taste of cherry (Ta'm e Guilass) எனும் படத்துக்காக வழங்கப்பட்டது. உலக சினிமாத் துறையைப் பொறுத்தவரை பாம்டோர் விருதுதான் மிகவும் உயர்ந்ததாகக் கருதப்படுகிறது.

***''சத்யஜித்ரே காலமான போது கலாபூர்வமான யதார்த்தத்தை இனி யார் சினிமாவாக்கப் போகிறார்கள் என்று நொந்து போயிருந்தபோது அப்பாஸ் கியோறஸ்ற்றமியின் படங்களைப் பார்க்க நேர்ந்தது. எனது துயரம் அக்கணமே தீர்ந்து போயிற்று''*** என்று குறிப்பிடுகிறார் ஸ்விடிஷ் நெறியாளரும் உலகப் புகழ்பெற்ற திரைக்கலைஞருமான இன்க்மார் பேர்க்மன்.

பரிசு பெற்ற அப்பாஸ் கியோறஸ்ற்றமியின் Taste of cherry தற்கொலையைப் பற்றியது என்றபடியால் ஆரம்பத்தில் ஈரானிய அதிகாரிகள் படத்தை விழாவுக்கு அனுப்ப உடன் படவில்லை. இறுதி நேரத்தில்தான் படம் ஒருவாறு அனுப்பப்பட்டது. எனினும் படத்தை ஈரானில் திரையிடுவது இப்போது தடை செய்யப் பட்டுள்ளது.

தெஹ்ரான் நகரைச்சேர்ந்த அப்பாஸ் கியோறஸ்ற்றமி சிறிதும் பெரிதுமாக இருபத்தியிரண்டு படங்களை இது வரை தயாரித்துள்ளார். அவ்வருடை பெரும்பாலான படங்களுக்கு அவரே படத்தொகுப்பாளராகவும், கதாசிரியராகவும் இருக்கிறார். திரைப் படங்கள் தயாரிப்பதற்கு அப்பால் குழந்தைகள் புத்தகங்களுக்கான சித்திரக் கலைஞராகவும் இருக்கிறார். Where is the Friends Home?, And Life goes on... Through the olive trees மற்றும் Taste of cherry ஆகிய படங்களே ஈரானிய சினிமாவின் முகங்களை மாற்றியதுடன், அப்பாஸ் கியோறஸ்ற்றமியை உலக சினிமா அரங்கில் முக்கியமான நெறியாளர்களுள் ஒருவராக இனங்கண்டுள்ளது. சிறுவர்களூடாகவே ஈரானின் சமகால வாழ்வைப் படம் பிடிக்கிறார் அப்பாஸ். *''எனது நண்பனின் வீடு எங்கே?''* என்ற திரைப்படத்தில் ஐந்தாம் தரம் படிக்கும் சிறுவர்களைச் சுற்றியே கதை பின்னப்படுகிறது. அவர்களுக்கும் அவர்களுடைய பெற்றோர்க்குமிடையிலான உறவு, அச்சிறுவர்களுக்கு இடையேயான உறவுகள், பிணைப்புகள் ஆகிய விஷயங்களை மிகவும் சிறப்பான முறையில் வண்ணங்கள், இயற்கை அமைப்பு / அழகு என்பவற்றின் பின்னணியில் படமாக்கியிருக்கிறார். படத்தில் முக்கிய பாத்திரமேற்று நடித்திருப்பவர்கள் திரைப்பட நடிப்பில் எவ்வித அனுபவமுமற்ற இரண்டு சிறுவர்கள். இந்தத் திரைப்படம் எடுக்கப்பட்டு ஐந்து வருடங்களின் பின் (1992) ஈரானில் பெரிய பூமியதிர்ச்சி ஒன்று ஏற்படுகிறது. அப்பாஸ் கியோறஸ்ற்றமி படம்பிடித்த சிறுவர்களது கிராமமும் பூமியதிர்ச்சியால் பெரிதும் பாதிக்கப்படுகிறது. அதனைக் கேள்வியுற்ற கணமே கமெராவைத் தூக்கிக்கொண்டு அந்த இடத்துக்கு வாகனத்தில் விரைகிறார் அப்பாஸ் கியோறஸ்ற்றமி. ''எனது நண்பனின் வீடு எங்கே?'' என்ற படத்தின் தொடர்ச்சியாகப் பின்னர் வெளியிடப்பட்ட ''எனினும் வாழ்க்கை தொடர்கிறது'' எனும் படம் அப்பாஸ் கியோறஸ்ற்றமி, பூமியதிர்ச்சியில் பாதிக்கப்பட்ட கிராமத்துக்கு தனது முன்னைய படத்தில் நடித்திருந்த அந்த இரு சிறுவர்களைத் தேடிச் செல்வது பற்றிய விவரணமே -;கும். எனினும் விவரணம் என்ற



சொல் இந்தப்படத்தைப் பொறுத்தவரை அர்த்தமிழந்த ஒன்றாகும். வாழ்க்கையையும், மரணத்தையும் பற்றிய இடையறாத விசாரணைகளே அப்பாஸ் கியோறஸ்ற்றமியின் கலாமூலம். பூமியதிர்ச்சியையும் அதன் பாதிப்புக்களையும் மனிதர்களின் ''எது வந்ததெனின் என்ன அதை வென்று செல்வோம்'' என்னும் உறுதிப் பாட்டின் பின்புலத்தில் வரைகிறார் அப்பாஸ் கியோறஸ்ற்றமி. அவருடைய படத்தில் நடித்திருந்த இரு சிறுவர்களுமே பூமியதிர்ச்சியில் இறந்து போய்விட்டார்கள். எனினும் அந்தத் தகவலைப் படத்தில் கொண்டு வரவில்லை அப்பாஸ் கியோறஸ்ற்றமி. ''வாழ்க்கையின் தொடர்ச்சியையும், வெற்றியையும் சொன்னாலே போதும் என்று தோன்றிற்று. எனவே அந்தத் தகவலைச் சொல்லி லட்சக் கணக்கான மக்களை ஏன் சோகத்துள் ஆழ்த்த வேண்டும்?'' என்று திருப்பிக் கேட்கிறார் அப்பாஸ் கியோறஸ்ற்றமி.

அப்பாஸ் கியோறஸ்ற்றமியின் இந்த வருடத் திரைப்படமான Taste of cherry ஒரு நடுத்தர வயது மனிதனைப் பற்றியது. பாடி என்றழைக்கப்படும் இம் மனிதர் வசதியானவர். இறந்து விடவேண்டும் என்று மிகவும் உறுதியாகத் தீர்மானித்து விடுகிறார். தெஹ்ரான் நகருக்கு வெளியே ஒரு அழகிய மலையடிவாரத்தில் தனக்கான ஒரு புதைகுழியை வெட்டி விடுகிறார். ஆயிரக்கணக்கான தூக்க மாத்திரைகளை விழுங்கிவிட்டு அக்குழிக்குள் இறங்கிப்படுத்து விட வேண்டும் என்பது அவரது திட்டம். எனினும் ஒரு முக்கியமான பிரச்சினை: புதைகுழிக்கு யார் மண் இட்டு மூடுவது? இவ்வேலைக்குப் பொருத்தமான ஒருவரைத் தேடிக்கொண்டு தன்னுடைய ஜீப்பில் கிளம்புகிறார். முதலில் சந்திக்கிற ஒரு இளம் போர் வீரன், அடுத்துச் சந்திக்கிற ஆப்கானிஸ்தான் நாட்டைச் சேர்ந்த மத போதகர் (தலிபா) இருவருமே பாடியின் வேண்டுகோளை ஏற்க மறுத்து விடுகிறார்கள். இறுதியாகச் சந்திக்கும்

---

*Taste of cherry படத்தின் வட அமெரிக்கத் திரையீட்டுக்காகக் கனடா வந்திருந்த அப்பாஸ் கியோறஸ்ற்றமி அவர்கள் சரிநிகருக்கு அளித்த நேர்முகத்தின் முக்கியமான பகுதிகள்:*

***★ உங்களுடைய படங்கள் ஒன்றின் தொடர்ச்சியாக இன்னொன்று என்ற வகையில் அமைந்திருக்கின்றன என்று தோன்றுகிறது. இது உண்மையானால் எல்லாப் படங்களையும் அவற்றின் வடிவமைப்பையும் நீங்கள் மிகத் துல்லியமாக முன்பே திட்டமிடுகிறீர்களா?***

உண்மையில் அப்படி அல்ல. ஒரு படத்தின் தொடர்ச்சியாக இன்னொன்றை எடுக்க வேண்டும் என்று நான் விரும்பியதில்லை. என்னுடைய முக்கியமான மூன்று படங்களையும் இணைத்து வருகிற ஒரு அம்சம்: மரணமும் வாழ்வும். இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால் என்னுடைய படங்கள் ஈடுபடுகிற தளம் மரணத்துக்கு மிக அருகே நிற்கும் வாழ்வைப் பற்றியது. இந்த விஷயம்தான் திருப்பித் திருப்பி என்னைப் பாதிக்கிறது. அந்த வகையில் ஒரு தொடர்ச்சியை நீங்கள் காண முடியும் என்பது உண்மைதான். ஆனால் அது திட்டமிடப்பட்டதல்ல.

***★ உங்களுடைய Taste of cherry, And Life goes on... ஆகிய படங்களில் Documentary படங்களின் சாயல் துலக்கமாக உள்ளது என்னும் கருத்தோடு நீங்கள் உடன்படுகிறீர்களா?***

என்னைப்பொறுத்தவரை Feature Film,Documentary Film என்ற பிரிப்பு கிடையாது. கமெராவுக்குப் பின்னால் நான் சென்ற அடுத்த கணமே அதனூடாகத் தெரிகிற அனைவரும்/ அனைத்தும் பாத்திரங்களாகி விடுகின்றன. தான் கமெராவின் முன் நிற்கிறேன் என்று தெரிந்த உடனேயே எல்லா மனிதர்களும் தம் 'இயல்பை' கணிசமான அளவு இழந்து விடுவார்கள். அந்த வகையில் Documentaryயையும் Feature படங்களையும் நீங்கள் வேறுபடுத்த முடியாது. ஒரு நல்ல திரைப்படம் என்பது நல்ல திரைப்படமாகத்தான் இருக்க முடியும். அது Documentaryயா Featureஆ என்பது பிரச்சினையே அல்ல.

***★ என்னால் பார்க்க முடிந்த உங்களுடைய திரைப்படங்கள் அனைத்திலுமே படத்தின் முடிவுகள் சற்று மிகைப்படுத்தப்பட்ட மாதிரி இருக்கிறது. கூடவே அந்த இடங்களில் மேற்கத்தேயப் பாரம்பரிய இசையையும் நீங்கள் பாவிக்கிறீர்கள். இந்த அம்சம் திருப்பித் திருப்பி வருகிற போது அது சலிப்பை ஏற்படுத்தும் அல்லவா?***

எனக்குத்தெரியாது. எனினும் எனது படங்களை முற்று முழுதாக இருண்டவையாக, நம்பிக்கையின் எந்தச்சுவடுமே அற்று நிறைவு செய்வதில் எனக்கு உடன்பாடில்லை. எனது படங்கள் ஒரு போதுமே முடிவதில்லை. அந்த வகையில் அவை எல்லாவற்றுக்கும் மிகவும் சுபமான, மங்களமான முடிவுகள் தான் உண்டு. மேற்கத்தேய பாரம்பரிய இசையை நான் பயன்படுத்துவது உண்மை. ஆனால் எந்த வகையான பாரம்பரிய இசையாகவிருந்தாலும் சரி, அவை உலகு தழுவிய பரிமாணம் உடையவை, உலகப் பொதுவானவை. எனவே அவற்றைப் பயன்படுத்துவதில் எனக்கு எவ்வித தயக்கமுமில்லை.

***★ ஈரானிலிருந்து வெளியாகிற படங்களுள் உன்னதமானவை எல்லாம் சிறுவர்கள் பற்றிய திரைப்படங்களாகவே உள்ளன என்பது என் அவதானம். இது எவ்வளவு தூரத்துக்கு உண்மை?***

ஈரானில் ஆண்டுக்கு அறுபது திரைப்படங்கள் வெளியாகின்றன. அவற்றுள் நான்கு அல்லது ஐந்து மட்டுமே சிறுவர்களைப் பற்றியும், சிறுவர்களுக்கானதாகவும் இருக்கின்றன. சிறுவர்களுக்குரிய கல்வி வளர்ச்சி மற்றும் உள வளர்ச்சி தொடர்பான ஈரானிய அமைச்சு சிறுவர்களை மையப்படுத்தி வருகிற படங்களுக்கு நிதியுதவி அளிக்கிறது. இந்தத் துறையில் எனக்கும் ஈடுபாடு இருப்பதால் நான் அத்தகைய படங்களை எடுக்கிறேன். இன்னும் அரசாங்க நிதியுதவி இருப்பதால் திரைப்படம் சார்ந்த ஈரானிய அதிகாரத்துவத்தினையும் சுலபமாக மீற முடிகிறது. பெரியவர்கள் பார்வையில் உலகத்தைப்பற்றியும் வாழ்க்கையைப் பற்றியும் பேசுவதை விடச் சிறுவர்களூடாக உலகையும் வாழ்க்கையையும் சித்திரிப்பது பெரிய சவால் எனறு கருதுகிறேன்.

***★ இஸ்லாமியப் புரட்சிக்கு முந்திய ஈரானியப் படங்களுக்கும் புரட்சிக்குப் பிந்திய படங்களுக்கும் இடையே என்ன வேறுபாடுகள் உள்ளன?***

அடிப்படையில் எந்த வேறுபாடுகளும் இல்லை. புரட்சிக்கு முந்தியும் சரி, பிந்தியும் சரி, சினிமா பற்றி எதுவும் தெரியாத அறிவிலிகள் தான் சினிமா தொடர்பாக முடிவெடுக்கும் அதிகாரம் உள்ள பதவிகளில் இருக்கிறார்கள். ஆட்களும் பெயர்களும் மாறி இருக்கின்றன. அவ்வளவுதான்.

***★ கான் உலகத்திரைப்பட விழாவில் உயர் பரிசு பெற்ற பிற்பாடு உங்களுடைய Taste of cherry பற்றி வந்த விமர்சனக் குறிப்புக்கள் சிலவற்றைப் படித்தேன். ஒரு சில விமர்சகர்கள், உள்ளடங்கிய முறையில் ஒரு பாலுறவு/ ஒரு பாலுணர்வு பற்றி நீங்கள் பேசுகிறீர்கள் என்று எழுதியிருக்கிறார்கள்?***

அது ஒரு கட்டுக்கதை. உள்ளடங்கியோ, வெளித்தள்ளியோ எத்தகைய ஒரு பாலுணர்வுத் தொனியும் எனது படத்தில் இல்லை. ஆண் - பெண் காமத்தைத் திரைப்படத்தில் கொண்டு வரவே ஈரானில் எங்களுக்கு இன்னும் ஆயிரம் வருடங்கள் தேவை. இந்த நிலையில் ஒரு பாலுறவை நாங்கள் கற்பனை செய்து பார்க்கவும் முடியாது.

***★ Taste of cherry உங்களுடைய சொந்த இயல்புகள் அனுபவங்களும் கலந்துள்ளனவா?***

இருக்கலாம். ஆனால், முக்கியமான அம்சம் என்னவெனில் வாழ்க்கையின் வலிவு, வாழ்க்கையை வாழ்வதின் வலிமை, மரணத்தின் வலிமையை விட அதிகமானது. இதுதான் நான் சொல்ல விரும்புவது.

எனது படங்களை முற்று முழுதாக இருண்டவையாக, நம்பிக்கையின் எந்தச் சுவடுமே அற்று நிறைவு செய்வதில் எனக்கு உடன்பாடில்லை. எனது படங்கள் ஒரு போதுமே முடிவதில்லை.



ஈரானிய திரைப்பட நெறியாளர் **- அப்பாஸ் கியோறஸ்றி**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மனிதர் சுவாரசியமானவர்; முதியவர் இயற்கை வரலாற்று அரும்பொருளகம் ஒன்றில் பறவைகள், விலங்குகள் போன்றவற்றைப் பதனிடும் பணியில் ஈடுபாடுள்ளவர். புதைகுழிக்குள் மண்ணைப்போட அவர் சம்மதித்தாலும் பாடியின் முடிவு அர்த்தமற்றது என்பதை உணர வைக்க அவர் பெரிதும் முயல்கிறார்.

பாடி திட்டமிட்டபடி இறந்து போகிறாரா அல்லது இறக்கவில்லையா என்ற கேள்விக்குப் படம் பதில் சொல்வதில்லை. ஒரு நிமிட இருளின் பின் படம் முடிந்தது போல் தோன்றும். எனினும், திடீரென மூன்று நான்கு நிமிடங்களுக்குப் படத்தின் இறுதிக் காட்சிகளைப் படம் பிடித்தமையும், வீடியோவில் படம் பிடித்தமையும், எல்லா நடிகர்கள், நெறியாளர்கள் ஏனையோர் மிக இயல்பாகப் படப்பிடிப்பின் பின் நடந்து வருவதையும் பார்க்கிறோம். பாடியும் தன்னுடைய குழியிலிருந்து நடந்து வருவதையும் பார்க்கிறோம். ஷூட்டிங் முடிந்தது என்று நெறியாளர் ஒலிபெருக்கியில் அறிவிக்கிறார். படம் முடிகிறது.

அப்பாஸ் கியோறஸ்ற்றமியின் இப்படம் அவருடைய முன்னைய படங்களிலிருந்து பெரிதும் மாறுபட்டது. படம் பெரும்பாலும் பாடியினுடைய ஜீப்பினுள்ளேயே நகர்கிறது. உரையாடலும், ஜீப் செல்லுகிறபோது மாறும் நிலப்பரப்புகளும். பாடி ஏன் தற்கொலை செய்து கொள்ள முடிவு செய்தார் என்பதைப் பற்றிய ஆய்வில் படம் ஈடுபடவில்லை. நெறியாளரின் மையமும் அதுவல்ல. உயிர் வாழ்வதையும் வாழ்க்கையின் வளங்களையும் கொண்டாடுவதின் முக்கியத்துவம் நெறியாளரின் நோக்கம். ''மரணத்துக்கும் வாழ்க்கைக்கும் பலலாயிரக்கணக்கான வருடங்களாக இடையறாத போராட்டம் நடந்து வருகிறது. வாழ்க்கையே வெல்லுகிறது என்பது என் கருத்து'' என்று சொல்கிறார் அப்பாஸ் கியோறஸ்ற்றமி. (இவ்விதழில் அவருடைய நேர்முகத்தைப் பார்க்கவும்) நம்பிக்கையூட்டுவதாகவும் மகிழ்ச்சிகரமானதுமாகவே தன்னுடைய படங்களின் முடிவு இருக்க வேண்டும் என்று விரும்புபவர் அவர். Taste of cherry படத்தில் பாடி (இப்படத்தில் நடித்திருக்கும் *ஹோமாயென் எர்ஷாடி* ஒரு மிகச் சிறந்த நடிகர்) எதிர் கொள்ளும் மூவரும் - போர்வீரன், தலிபா, அரும்பொருளக உத்தியோகத்தர் - மூன்று வேறுபட்ட நிலைகளில் வாழ்க்கையையும் மரணத்தையும் பற்றிய கருத்துள்ளோர். போர்வீரன் இளமை, அறியாமை, உணர்வு, கீழ்ப்படிவு மற்றும் பொதுப்புத்தி ஆகிய அம்சங்களின் வழி வாழ்வைப் பார்க்கிறான். தலிபாவோ நடுத்தரவயது, கல்வி பழமை, மதக்கோட்பாடுகளின் இறுக்கம் ஆகியவற்றின் பிரதிநிதி. அரும்பொருளக உத்தியோகத்தர் முதுமை, ஞானம், தத்துவம், நுண்ணுணர்வு என்பவற்றின் குறியீடாக இருக்கிறார் ஞானம், அனுபவம், மெய்யியல் என்பன பொதுப்புத்தியையும், மதக்கோட்பாடுகளின் இறுக்கத்தையும் இறுதியில் பெற்றுக் கொள்கின்றன என்ற கருத்துப்பட Taste of cherryயை நாம் விளங்கிக் கொள்ள முடியும் என *கொட்ஃபீரீ ச்செலியர்* எனும் விமர்சகர் வாதிடுகிறார்.

மனிதர்களுடைய சாதனைகளில் மிகவும் உயர்ந்தது மதக்கோட்பாடுகளல்ல; மெய்யியலும் அது தொடர்பான விசாரங்களையும் கருதுகிற அரபு மற்றும் பாரசீகச் சிந்தனைப் போக்குடன் அப்பாஸ் கியோறஸ்ற்றமியும் உடன்படுகிறார் என்று தோன்றுகிறது. அந்த வகையில் ஈரானியச் சூழலில் அப்பாஸ் கியோறஸ்ற்றமியின் திரைச் சிந்தனை ஒரு மௌனப் புரட்சிதான். ○

# புலிகள் முஸ்லீம்களை அழைத்தனரா?

## அறிக்கைப் போரில் முஸ்லிம் தலைமைகள்!



வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட ஏழாண்டு நிறைவு பல நிகழ்ச்சிகளூடாக பல்வேறு அமைப்புகளாலும் நினைவு கூரப்பட்டுக் கொண்டிருக்கிறது. அண்மைக்கால பத்திரிகைச் செய்திகளிலும் வடக்கு முஸ்லிம்கள் தொடர்பான செய்திகளும், வடக்கு முஸ்லிம்களின் பல்வேறு அமைப்பைச்சேர்ந்தவர்களின் அறிக்கைகளும் பிரதான இடம்பிடித்து வருகின்றன.

அச்செய்திகளையும், அறிக்கைகளையும் பொதுவாக அவதானிக்கையில் சொந்த மண்ணில் மீள் குடியேறுவதற்கான ஆர்வமும், ஆதங்கமும் முன்னெப்போதையும் விட இப்போது அதிகமாக உணரப்படுவதாகத் தெரிகிறது. இருந்தும் பல்வேறு அமைப்புகளிடையே இது தொடர்பான எதிரும் புதிருமான நிலைப்பாடு நிலவுவதையும் அவதானிக்க முடிகிறது. வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு, வடபகுதி இடம் பெயர்ந்த முஸ்லிம்களின் அமைப்பு, முசலிப்பிரதேச முஸ்லிம் மக்களின் ஒன்றியம், முஸ்லிம் காங்கிரஸ் மூத்த துணைத் தலைவர் மருதூர்க்கனி, பா.உ. உறுப்பினர் இல்யாஸ் போன்றோரது அறிக்கைகள், செய்திகள் இதுதொடர்பாக பிரதான இடம் வகித்ததை அண்மைய பத்திரிகைகளை வாசித்திருப்பவர் அறிவர்.

இதில் இடம்பெயர்ந்த வடபகுதி முஸ்லிம்களின் அமைப்பு (ஏ.சி. முபீன் - தலைவர், கே.எம்.எஸ். ஹமீத் - செயலாளர்) வடக்கில் குறிப்பாக யாழில் மீளக்குடியேறுவதற்கான சூழ்நிலை உருவாகியுள்ளதாகத் தெரிவித்து அறிக்கைகள், பேட்டிகள் கொடுத்தது. இவ்வமைப்பைச் சேர்ந்த பலர் யாழ்ப்பாணம் சென்று நிலைமைகளை நேரில் கண்டு வந்தனர். பொதுவாக இவர்கள் மீளக்குடியேறுவதில் தீவிர ஆர்வம் காட்டினர் எனலாம். எனினும் இவர்களது நிலைப்பாடு வேறு பல அமைப்புகளின் விமர்சனத்திற்கும், கண்டனத்திற்கும் உட்பட்டது. இவர்கள் தங்கள் வியாபார நோக்கங்களுக்காக மக்களை பலிக்கடாக்களாகப்போகிறார்கள். அரசு, யாழ்ப்பாணம் தனது பூரண கட்டுப்பாட்டில் இருக்கிறது என்பதை நிறுவ இவர்களைப் பயன்படுத்தி இவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கிறது என்றும் விமர்சனங்கள் கிளம்பின. இதற்கு மாற்றமாகவும், தங்கள் நிலைப்பாடாகவும் வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு, முசலிப்பிரதேச ஒன்றியம் ஆகியன அறிக்கைகள் வெளியிட்டன. அவை வடக்கின் பெரும்பாலான மக்களின் விருப்பை பிரதிபலிப்பவையாகவும் அமைந்தன. இவ்வமைப்புகளின் அறிக்கையின் படி மீள் குடியேற்றம் என்பது நீண்ட திட்டமிடுதலின் கீழ் இடம் பெற வேண்டும் என்பதாகவும், புலிகளின் முற்றுமுழுதான அழைப்புடனும், ஆதரவுடனும் இடம்பெறவேண்டும் என்பதாகவும் பல்வேறு நிபந்தனைகளுடன் கூடியதாக இருந்தது.

இதற்கு இடையில், இடம்பெயர்ந்த வடபகுதி முஸ்லிம் அமைப்பைச் சாடி மருதூர்க்கனி அறிக்கையொன்று வெளியிட்டிருந்தார். அதுவும், பொதுவாக இவ்வமைப்பு மீது வைக்கப்பட்டிருந்த விமர்சனம் போல் இருந்தாலும், வடக்கு கிழக்கு இணைப் பதிகாரி என்ற வகையிலும் அரசின் பங்காளிக் கட்சியான முஸ்லிம் காங்கிரசின் முக்கிய உறுப்பினர் என்ற வகையிலும் முக்கியம் பெற்றது. இதிலும், புலிகளின் அனுமதி பிரதானமாக கிடைக்கவேண்டும் என்ற நிலை தொனித்தது.

இவரின் இந்த அறிக்கைக்கு பதிலளிக்குமுகமாக இடம்பெயர்ந்த வடபகுதி முஸ்லிம் அமைப்பு மாற்று அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது. அதில் புலிகளால் பல்வேறு சந்தர்ப்பங்களில் முஸ்லிம்கள் தொடர்பாகவும், அவர்களது வெளியேற்றம் தொடர்பாகவும் வழங்கப்பட்ட பேட்டிகள் உதாரணம் காட்டப்பட்டிருந்தது. (இந்த அறிக்கையின் சில விடயங்கள் அதிலும் குறிப்பாக மருதூர்க்கனி தொடர்பான விடயங்கள் அரச பத்திரிகையான தினகரனில் முழுமையாகப் பிரசுரிக்கப்படவில்லையென்று அறியமுடிந்தது.) அதாவது புலிகள் தங்கள் அனுமதியை எப்போதோ வழங்கி விட்டதாகக் காட்டுவதற்காகவே அவை குறிப்பிடப்பட்டிருந்ததாகத் தெரிகிறது. எனினும், அப்பேட்டிகள் ஓர் மீள்குடியேற்ற நிலைப்பாடு எடுப்பதற்கு எந்தளவு தூரம் அழுத்தம் நிறைந்தது என்பது கேள்விக்குறியே. ஏனெனில் புலிகளின் கூற்றுக்கள் அனைத்தும் தவிர்க்க முடியாது எழுப்பப்பட்ட கேள்விகளுக்கான பதில்களாய் அமைந்தவையாகவே உள்ளன. பிரபாகரன், அன்டன் பாலசிங்கம், கரிகாலன், துரை போன்ற புலிமுக்கியஸ்தர்களின் முஸ்லிம்களது வெளியேற்றம் தொடர்பான கூற்றுக்கள் ஒரு 'மூன்றாம் நபருடனான தவிர்க்க முடியாத வெளியீடுகளாய் இருந்தனவேயொழிய அவர்களின் முஸ்லிம் மக்களுக்கான நேரடி வேண்டுகோளாக ஒரு போதும் அமையவில்லை. இவ்விடயம் புலிகளின் தேசிய, சர்வதேச தொடர்பூடகங்கள் மூலம் முஸ்லிம்களை நேரடியாக விளித்து எப்போதாவது வந்ததாக அறிய முடியாது. அவர்களின் மாற்றங்கள் மனமிரங்கல்களை வடக்கு முஸ்லிம்களின் எந்தவொரு அமைப்பிற்கும் கடிதங்களாகவோ, பிரசுரங்களாகவோ அனுப்பவில்லை. இதை வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பும் பல இடங்களில் சுட்டிக்காட்டியிருக்கிறது. இவ்வமைப்பு இதைவிடவும் ஒரு நல்லெண்ண முயற்சியாக பல்வேறு ஊடகங்களில் வந்த புலி முக்கியஸ்தர்களின் அறிக்கைகளை பேட்டிகளை தனது வெளியீட்டிலும் மறுபிரசுரம் செய்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான ஒரு நிலைமையில் அண்மைய பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் வந்த யாழ் மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் டொக்டர் இல்யாஸின் அறிக்கை அதிக கவனம் பெற்றிருக்கிறது. முஸ்லிம்கள் மீண்டும் வந்து தங்கள் வாழிடங்களில் குடியேற தமது மனப்பூர்வமான ஆதரவையும், அழைப்பையும் விடுப்பதாக செஞ்சிலுவைச் சங்கமூடாக புலிகள் தனக்கு அனுப்பியதாகத் தெரிவித்தார். இது ஏழாண்டு அகதி அவல வாழ்வை நினைவுகூரும் இத்தருணத்தில் அகதிகள் அனைவரும் குறிப்பாக யாழ்ப்பாண அகதிகள் தங்கள் பிரதிநிதியை திரும்பிப்பார்க்க வழியமைத்தது. இந்த அறிக்கை பற்றிய உண்மை நிலவரங்கள் தொடர்பாக வடக்கு பிரதிநிதிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டது. சிலருடனான எம். பியின் தனிப்பட்ட உரையாடல்களில் ''இவ்வாறான ஓர் அறிக்கை உண்மையில் வரவில்லை. இப்படியாவது போட்டுப்பார்ப்போம். ஏதாவது சமிக்ஞை காட்டுகிறார்களா என்பது தெரியவரும் தானே...'' என்று தெரிவித்ததாகவும் அறியமுடிகிறது.

இந்தச் சந்தேகத்தை ஊர்ஜிதப்படுத்தும் வகையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் தம்மூலம் இவ்வாறான ஓர் அழைப்பு விடுக்கப்படவில்லையென்று அறிக்கை விட்டிருந்தது. வடக்கு முஸ்லிம்களுக்கான உரிமைக்கான அமைப்பும் செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்பு கொண்டு இதை ஊர்ஜிதப்படுத்தியது. இது தொடர்பான இவ்வமைப்பின் அறிக்கை கடந்த சரிநிகர் இதழிலும் பிரசுரமாகியிருந்தது.

வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தொடர்பான அறிக்கைகளை அதிலும் அரசியல் களத்தில் தற்போது இருக்கின்ற இல்யாஸ், மருதூர்க்கனி ஆகியோரின் அறிக்கைகள் முற்றுமுழுதாக அரசியல் சித்துவிளையாட்டுக்களைக் கொண்டிருப்பதாக அவதானிக்க முடிகிறது. ஏனெனில் இருவரும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள். இவர்கள் இருவரும் வடக்கு முஸ்லிம் மக்களை (இல்யாஸ் யாழ் மாவட்ட காங்கிரசின் பாராளுமன்ற உறுப்பினர் மருதூர்க்கனி முஸ்லிம் காங்கிரசின் மூத்த துணைத்தலைவர், வடக்கு கிழக்கு இணைப்பதிகாரி) ஒரு வகையில் பிரதிநிதித்துவம் செய்பவர்கள். இவர்கள் இருவரினதும் அறிக்கைகள் ஏன் ஒன்றுக்கொன்றுமுரணாக எழுந்துள்ளன என்பது இப்போது கேள்வியாக பலரிடம் எழுந்துள்ளது. இருவரும் தங்கள் சுய அரசியல் நலன் சார்ந்த விடயங்களை முக்கியப்படுத்துவதே காரணம் என்பது வடக்கு முஸ்லிம்கள் பலரது அபிப்பிராயமாகவும் எழுந்துள்ளது. அதாவது, ஒருவருக்கு வடக்கு மக்கள் மீளக் குடியேறுவதும், மற்றவருக்கு அவர்கள் இங்கேயே தொடர்ந்திருப்பதுமே தங்கள் நலனை தக்கவைப்பதாக உள்ளது. இவ்வாறான நிலையில் முஸ்லிம் காங்கிரசின் அகதிகள் தொடர்பான தற்போதைய நிலைப்பாடும் என்ன என்பதும் கேள்வியாக எழுந்துள்ளது. முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சராக இருக்கின்றவர் என்ற வகையிலும், அறிக்கைகளை வெளியிட்டவர்கள் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் என்ற வகையிலும் இக்கேள்வி தவிர்க்க முடியாமல் எழும்பவே செய்கிறது.

இவ்வாறான அறிக்கைகளினது குழப்பமான நிலைமைகளிடையே அகதி முஸ்லிம்களது நிலைப்பாடு என்ன? அது எந்த வகையில் அமையப் போகிறது என்பதும் கேள்வியாகத் தான் உள்ளது. வடக்கு முஸ்லிம்களை பிரதிநிதித்துவப்படுத்துகிற அமைப்புகளிடையேயும் முரண்பட்ட நிலைப்பாடுகள் நிலவுவதையும், அவை தம் நிலைப்பாட்டை மக்களின் கருத்தாக வெளிக்கொணர்வதிலும் பிரயத்தனப்படுவதையும் அவதானிக்க முடிகிறது.

எனினும், புலிகள் ஒரேயடியான வெளியேற்ற அச்சுறுத்தல் போல், மீள்குடியேற்றத்துக்கான எதுவித உடனடிக்காரணங்களும் இல்லாத நிலையில் சிந்தித்துச் செயலாற்றுவதற்கான சந்தர்ப்பங்கள் நிறையவே உள்ளன. அந்தச் சந்தர்ப்பங்களைப் பொறுப்பானவர்களும், சம்பந்தப்பட்டவர்களும் எந்த வகையில் பயன்படுத்தப் போகிறார்கள் என்பது தான் பிரச்சினை. நீண்ட திட்டமிடலின் அடிப்படையில் வடக்கு முஸ்லிம்கள் மீள்வாழ்வு பெறுவார்களா? அல்லது சுயநலங்களுக்குள் தொடர்ந்தும் சோகப்பட்டுப்போவார்களா என்பதும் தான் அக்கறையுள்ளவர்களின் கேள்வி.

இதற்கான பதிலை எல்லோரும்தான் தேட வேண்டியிருப்பதும் மறுப்பதிற்கில்லை.

***“இப்னு பதூதா”*** ○


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒரு இரவும் நாலைந்து வண்ணத்துப் பூச்சிகளும்

பி.ரவிவர்மன்



உடைபட்டு ஒட்டுண்டு போய்க்கிடக்கும் இந்த மனசுக்குள் அப்படி என்னதான் கிடக்கிறதோ தெரியவில்லை. எந்த அதிர்வுகளையும் தாங்கக்கூடிய வல்லமையும், திடமும் அதுக்கு எப்போது வந்தது என்பது தான் எனக்கு இன்னும் ஞாபகமேயில்லை?

முந்திய ஒரு காலத்தில் மெல்லென அசைதலுக்கும் கரைந்தொழுகி, ஓவென்று அழ எழும் மனசு இப்போது உடைபட முடியா பாறாங்கல்லாய் திரண்டு போனது எப்படி.....

அழுகை விம்மல், கவலை, ஆற்றொணாத்துயரையே பார்த்து சிரித்தோ அல்லது ஒரு சிகரெட்டை ஊதித்தள்ளி வீசுவதைப் போலவோ நினைக்கத்தோன்றுகின்ற, அப்படியே நடந்து கொள்ளுகின்ற பக்குவம் எப்படி வந்தது?

சரியை, கிரியை, யோகம், ஞானம், எல்லாம் கடந்தே போனவாழ்தல், இந்த வாழ்தலே ஒரு பொய்மைதானே.

முகம் திருப்பிசிரித்தலிலும், வாய்பிளந்து பேசுதலிலும், அணைத்துக் கடித்து புணர்ந்தே எழுதலிலும், வாழ்க்கை உண்டென்பது, எந்தப் பைத்தியக்காரர்களின் உளறல்......

மாற்றங்கள் என்பது மனித மனங்களுக்குள்ளும், ஓராயிரம் கோடி எண்ணத்துகள்களின் தேக்கங்களின் பரிணாமம் என்பதை எப்படி சொல்ல வைப்பது. தொடர்பில்லாத வார்த்தைகளாய்..... விடுபட்டு போன உறவுகளாய்....

மனசுக்குள் உறைந்துபோய்க் கிடக்கிற ஒரு பழைய எஸ்.எம்.ஜி., நைன். எம்.எம்., நாலைந்து தேட்ர்டிசிக்ஸ் கிரனைட், பழைய சாக்கு, நைலோன் கயிறு, வைனட் கத்தி.....

கட்டியாய் உறைந்த இரத்தம் காய்ந்த சேட்டும் ரவுசரும், கூரிய வாயை இளித்தபடி கிடக்கும் மண்வெட்டி, கிரவல் மண்ணும் கிடங்கும், சுற்றிச்சுற்றித்திரியும் அந்தப்பேய்கள் எல்லாம் இன்னும் மனசுக்குள் உறைந்தே கிடக்கின்றன.

மனிதம் தின்ற அந்த சொறி நாய்கள் எங்கே போயின. அந்த நாட்கள் எப்படி கழிந்தன. இந்த இத்தனை வருடங்களையும் எப்படி கொண்டிங்கு வாழ்ந்தேன். இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்பதைவிட எதுவுமே இல்லையென்பது யாருக்குத்தான் தெரியப்போகிறது.

கனவுகள் வராத இரவுகளில் நினைத்து நினைத்துப் பார்க்கிறேன். எப்படி எங்கிருந்து வந்தன. அத்தனைக்கொடூரங்களும்.... எரிமலையின் குமுறல்களுக்குள் முகம் அழுத்தி எரிந்து சாம்பல் ஆகிறேன்.

புழுக்கமும் அவிச்சலும் நிறைந்த அறைக்குள் எதிர்த்தவீட்டு அணையா இரவு விளக்கின் ஒளித்துகள்கள் மட்டும் கதவிடுக்கின் உள்ளால் உள்ளே எட்டிப்பார்த்தன.

கழுத்து மடிப்புக்களுக்கிடையேயும், கவட்டுக்குள்ளேயும் வடிந்து கசியும், வேர்வைத் துளிகள்... சுருண்டும் நிமிர்ந்தும் கவட்டுக்குள் கைபோட்டும் படுத்துத் தூங்கியபடி கழிந்தே போகிற இரவுகள்...

இருள் மண்டி ஊர் உறங்கிக்கிடக்கிறது. கோவிலடிச்சந்தியிலும் சுந்தரத்திர கடையடியிலும் குரைத்தோய்ந்த நாய்களின் குரல்கள் மெல்ல மெல்ல மூடி மூடி எழுகின்றன.

பசைவாளியும், போஸ்டருமாய் அரைவாசி இரவு முடிந்து போகிறது. யாரும் கதவைத் திறந்தோ, அல்லது ஜன்னல் இடுக்குகளின் ஊடாகவோ பார்க்க அஞ்சுகிற இரவு. நாய்கள் வேண்டியமட்டும் குரைக்கும். அருகே வந்து வால் ஆட்டியபடியே நகரும். கோயிலடி வெட்டையில், படுத்துத்தூங்குகிற மாடுகள் வாலால் முதுகுரஞ்சி முகம் நிமிர்த்திப் பார்க்கும்.

இன்னும் ஏழெட்டு போஸ்டர்களே மிகுதியாய் இருந்தன. பள்ளிக்கூடச் சுவர்கள் வாசிகசாலையடி, மார்க்கெட், கோயில் மதில், உள்ரோட்டிலுள்ள எல்லாவீட்டு மதில்களிலும் சிவப்பும், மஞ்சளுமாய் இருக்கும்.

வீசுகிற காற்றில் ஈரம் தெரிகிறது. கோயிலடிச்சந்தியிலுள்ள லைட் போஸ்டில் தொங்கி வழிகிற லைட்டின் ஒளிக்கற்றைகள் மெலிதாய் சொட்டுகிற பனியின் கசிவு, கண்களுக்குள் விழுகின்றன.

எல்லைவீதியிலுள்ள பள்ளிக்கூடம், ஹனிபாவின் தேத்தண்ணிக் கடை தகரம் மிகுதியாய் உள்ள சுவர்களில் இருக்கிற போஸ்டர்களை ஒட்டிவிட்டு விடிய முதல் வீட்டுக்குள் புகுந்து அயர்ந்து தூங்க வேண்டும்.

நாளையம் பொழுதில் நிறையவே காத்திருப்புக்கள் தங்கியிருக்கின்றது. டியூசனுக்கு கட், மதியம் டவுனுக்குள்ள யாழ்ப்பாணத்திலிருந்து 'புதிதாய் வந்துள்ள அந்த தாடிக்கார அண்ணனைச் சந்திக்க வேண்டும். பின்னேரம் கடற்கரையில் இது பற்றி எல்லோருடனும் நிறையவே பேச வேண்டும்.

இனிவரும் காலங்களில் இவர்களின் மீது எத்தனைப் பொறுப்புக்கள். வாழ்க்கைபற்றிய நீண்ட நீண்ட பெரிய கனவுகள். மனசு முழுவதும் ஆர்ப்பரித்துக்கொண்டிருக்கும் சுகம். அவர்கள் எப்படி, இப்படி திடீரென முளைத்தெழுந்தார்கள். இந்த பிரபஞ்சத்தையே தூக்கி தோளில் சுமக்கிற பலம் எப்படி வந்தது.

உச்சியிலிருந்த நட்சத்திரங்கள் ஒளி சிந்தின. நிலவு உருண்டு திரண்ட மேகங்களால் இடையிடையே தொலைந்து போனது. பம்பல் இருட்டும் மெல்லிய ஒளிகளும் வீதி விளக்குகளும், தெருவோர நாய்களின் உறுமல்களும் வீதியின் குறுக்கே விழுந்து கிடக்கும் மரங்களின் ராக்கால நிழல்களும் அந்த இரவும் அவர்களின் புதிதாய்ப் பிறத்தலின் நண்பர்களாயின....

வரதன் தான் முன்னோக்கி நடந்தான். அவனுடைய கையில் மூன்று பெட்டரிகள் போட்ட டோச் லைற். அவனைத்தொடந்து யோகனின் கையில் நல்லையா மாஸ்டரின் வீட்டில் நாலைந்து நாளைக்கு முன்னர் பறித்தெடுத்த ஷொட் கண். மிகுதியாய் எல்லோரும் பசைவாளியும் போஸ்டருமாய் பின்தொடர்ந்தனர்.

கன்னங்கரேலென்று கிடந்தது இரவு. எல்லோருக்கும் முன்னால் கொஞ்சம் இடைவெளிவிட்டு வரதன். ''பொலிஸ்.. பொலிஸ்... ''அவனுடைய படபடப்பும் அவசரமும் கலந்த தொனியோட சேர்ந்தே எஸ். எல்.ஆரும், எஸ். எம்.ஜியும் சீறிப்பாய்ந்தன....

வரதன் அப்படியே விழுகிறான். அவனுடைய கையில் இருந்த டோச் ஒளியைப் பிதுக்கியபடி உருண்டோடுகிறது. நிலத்தில் ஊர்ந்தவாறு யோகன் ஒற்றைக்குழல் ஷொட் கண்ணால் இரண்டோ, மூன்று தடவை எதிரிகளின் திசைநோக்கி வெடிவைக்கிறான்.

அவர்களை ஏமாற்றிய அந்த இரவில் வரதனும் யோகனும் மல்லாந்து கிடக்கிறார்கள்.

நிலமெல்லாம் வடிந்தே காய்ந்து கிடந்தது இரத்தம். டோச் மங்கியது. யோகனின் கையில் இறுக்கியபடி ஷொட் கண் கிடந்தது. பசைவாளியும் போஸ்டர்களும் சிதறுண்டும் கிழிபட்டும் போய்க்கிடந்தன.

பள்ளிக்கூடமும் டியூட்டறியும், ஊரின் ஒவ்வொரு முகங்களும் அவர்கள் பற்றியே பேசிக்கொண்டன. யோனும் வரதனும் ஏன் இவர்கள் எல்லோருமே ஊரின் எல்லா மனங்களுக்குள்ளும் புகுந்து கொண்டார்கள்.

இவனும் காந்தனும் மதில் தாவி குதித்து தசைகிழிபட தப்பினார்கள். ரவியும் சந்திரனும் மூரளியும் மெகசினில் இருந்து கடிதம் எழுதினார்கள். பிறகு கவிதை எழுதினார்கள். இப்படியே வாழ்க்கை உடைபட்டே போயின.

காலம் கடத்தல், வாழ்வின் இறுக்கம் எல்லாம் சேர்ந்தே அலையாய் பெருகி, ஓய்வின்றி தொடர்ந்தன. அந்த இரவு அலையின் உரசலாய் வாழ்வின் மங்கா ஒளியுடன் இன்னும் காலம் கடத்துகிறது.

மழைக்கால இரவுகள் தேம்பித்தேம்பி அழுதன. ஓடைகள் நிரம்பி வடிந்தன. குளங்களில் தாமரையும் அல்லியும் பூத்துக்குலுங்கின. ஆறு கரையையும் தாண்டி வந்தது.

மீண்டும் கடும் கோடை வந்தது. திருவிழாக்கள் குறைந்தன. கோயில்கள் வெறிச்சோடின. பள்ளிக்கூடங்களின் வரவுகள் குறைந்தன.

பண்டிகைக்காலங்களில் பட்டாசுகள் வெடிக்கவில்லை. வண்ண வண்ண ஆடைகளையும், சிரித்த முகங்களுடன் செல்லும் மனிதர்களையும் காணவில்லை. அம்மாக்கள் வீட்டின் மூலைகளில் முகம் புதைத்தழுதனர். பிரேம் போட்ட கண்ணாடிகளில் இளைஞர்கள் சிரித்தனர்.

தெருவோரச் சுவர்களில் புதிதாய் போஸ்டர்கள் அப்பிக்கொண்டன. தெருவெங்கும் பேய்கள் உலாவின. இடியும் மின்னலுமென கடுங் கோடையாய் இரவுகள் நகர்ந்தன. இரத்தம் பூசிய வீதிகளில் பிணங்கள் எரிந்தன. இப்படியே போயின இந் நாட்கள்......

நீண்ட இரவொன்றில் மீண்டும் கனவுகள் உடைந்தன. தடதடவென கதவு தட்டப்பட்டது. ''கெதர கௌத'' திடுக்கிட்டு எழுந்தான். மீண்டும் பலமாய்த் தட்டினார்கள்.

அச்சமும் பீதியும் அவனுள் இறங்கின. கதவைத் திறந்தான். நாலைந்து பேர் ஏ.கேயுடன் உள்ளே நுழைந்தனர். அடையாள அட்டை, பொலிஸ் பதிவு எல்லாம் இருந்தன. கொட்டிக்கிளறினர். பூட்ஸ் கால்களால் உதைத்தே தள்ளிப் பார்த்தனர்.

பொலிஸ் பதிவையும், அடையாள அட்டையையும் ஒருவன் திருப்பித் திருப்பிப் பார்த்தான். ''கம கொய்த யாப்பணயத?'' இவன் தலையை அசைத்தான். சேட்டைப்போட்டுவிட்டு அவர்களுடன் நடந்தான். றூம் விரிந்து கிடந்தது. முன்வீட்டு லைட் வெளிச்சம் உள்ளே புகுந்தது. பக்கத்து வீடுகள் குசுகுசுத்தன. ''கொட்டியா கொட்டியா....''

இவனுடன் சேர்ந்து இன்னும் நாலைந்து பேர்களை கூட்டிவந்தார்கள். அந்த சின்ன லேனில் இருந்து பிரிந்து சந்திக்கு வந்தார்கள். அந்த அரசமரத்துக்கு கீழே இன்னும் நிறைய பேர் சாரத்துடனும், சேட் இல்லாமல் பலர், சில பெண்கள் நைட் கவுனுடன் கூனிக்குறுகியபடி நின்றனர். வேறு சில பெண்கள் தங்கள் குழந்தைகளை அணைத்தபடி நின்றார்கள். எல்லா முகங்களிலும் அச்சமும், பயமும் தேங்கி வழிந்தன.

கலியாண வயசில் லயித்துக்கிடக்கிற பெட்டைகள் மாதிரி அரச மரம் சடைத்து செழித்துக் கிடந்தது. தலைகளின் மேல் காகங்கள் பீச்சியடித்தன. அசையக்கூடாது. அவர்கள் அருகே நிற்கிறார்கள்.

அவன் இங்கு புதிதாய் வந்த போது இந்த அரச மரம் சின்னொன்றாய் இருந்தது. இதன் அடியில் ஒரு பிள்ளையார் தான் சிலையாய் உட்கார்ந்திருந்தார்.

பின்னைய நாட்களில் பிள்ளையாருக்கு என்ன நடந்தது என்று யாரும் அறிய விரும்பவில்லை. ஒன்றில் அவர் எங்காவது ஒரு தேசத்துக்கு புலம்பெயர்ந்து இருக்கலாம் இல்லையேல் அடைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்ற விடயம் கூட, இதுவரை யாருக்குமே அவசியம் இல்லாத ஒன்றாகவே இருக்கிறது. அப்படியான ஒரு அவசரம்.

பிள்ளையாருக்குப் பின்னர். கௌதமர் வந்து அந்த இடத்தை பிடித்துக்கொண்டார். மாலைவேளைகளில் பரவும் விளக்கொளிகளின் ஊடே மௌனம் காத்து கண்மூடி அயர்ந்து தூங்கினார்.

அரச மரத்துக்கு கீழே நின்ற எல்லோரும் ஒரு நீண்ட பஸ்ஸில் அடைக்கப்பட்டார்கள். முன்னேயும் பின்னேயும் ஜீப் வண்டிகள் நகர பொலிஸ் நிலையம் நோக்கி ஊர்ந்தன வாகனங்கள்.

அன்பைப்போதித்த புத்தர் அரச மரத்துக்கு கீழே தனித்துக் கிடந்தார். காற்றில் அசைந்தும் மங்கியபடியும் விளக்கொளி..... காகங்கள் அடிபட்டடெழுந்தன..... புத்தரின் தலையிலும் எச்சம் பிச்சீன. இந்த இரவும் இப்படியே கழிந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஆண்களுடைய ஒழுக்கந்தான் என்ன?

## ராஜஸ்தானத்துப் பெண்கள் கேள்வி எழுப்புகிறார்கள்

ரத்னா




''நான் ஒரு விபச்சாரி தான். பல ஆண்களுடன் படுப்பவள் தான். அதனால் என்ன? அது எனது சொந்த விடயம். அதற்காக, என்னைப் பாலியல் வல்லுறவு செய்யும் உரிமையை அது யாருக்கும் வழங்கி விடாது. நீங்கள் என்னுடைய ஒழுக்கத்தைப் பற்றிக் கேள்வி எழுப்பலாம். ஆனால் ஆண்களே உங்களுடைய ஒழுக்கம் மட்டும் என்னவாம்? ஒருவன் பாலியல் வல்லுறவு கொள்ள இன்னும் நான்கு பேர் வரிசையில் அதற்காகக் காத்திருப்பது தானே உங்கள் ஒழுக்கம்.'' என்று அதிர்ச்சி தரும் ஒரு கேள்வியை எழுப்புகிறார் ஒரு ராஜஸ்தானத்துப் பெண்மணி ஒருவர்.

செப். மாத முற்பகுதியில் அடுத்தடுத்து இடம் பெற்ற இரண்டு பாலியல் வல்லுறவுச் சம்பவங்களை அடுத்து அவற்றைக் கண்டிக்கும் வகையில் சுமார் 60 பெண்கள் அமைப்புக்கள் ஒன்றிணைந்து 'பலாத்கார் விரோதி அந்தோலன்' (Protest against women) என்ற பேரணி ஒன்றை நடாத்தினர். அந்தப் பேரணியில் கலந்து கொண்ட பெண் ஒருவர் எழுப்பிய கேள்வி தான் மேலுள்ளது.

செப். 4ம் திகதி ராஜஸ்தானின் ஜலூர் பிரதேசத்தில் நடுத்தர வயதுக் குடும்பப் பெண் ஒருவர் லோகேந்திர விஜய் என்கிற ஜெயின் முனி ஒருவனால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டார். இதில் எல்லோரையும் அதிர்ச்சியடையச் செய்த விடயம் என்னவென்றால் இந்த ஜெயின் முனி அப்பெண்ணினது மகனின் 'ஆன்மீகக் குரு' என்பது தான்.

ராஜஸ்தானின் ஜெய்ப்பூர் பிரதேசத்தில் இன்னொரு சம்பவம் இடம் பெற்றது. ஜெய்ப்பூர் பல்கலைக் கழகத்தின் ஜே.சி.போஸ் விடுதியில் வைத்து 25 வயதுப்பெண் ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உள்ளானார். எட்டுப் பேரைக் கொண்ட மாணவர் குழு ஒன்றே இதில் ஈடுபட்டது.

இவ்விரு சம்பவங்களுக்கும் சிறிது முன்பதாக ஜெய்ப்பூரில் நடைபெற்ற இன்னொரு சம்பவத்தில் தாயும் மகளும் வழக்கறிஞர் ஒருவராலும் இன்னும் சிலராலும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டனர். இது தவிர இரண்டு பிரபலமான ஹோட்டல்களின் முகாமையாளர் இருவர் ஒரு பெண்ணை மிரட்டி பலவந்தமாக தடுத்து வைத்து பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய சம்பவமும் ஜெய்ப்பூரில் தான் நடைபெற்றிருக்கிறது. ஏழு வருடங்களாக ஒரு பெண்ணை மிரட்டி எட்டுப்பேர் பாலியல் வல்லுறவு கொண்ட சம்பவமும் இங்கு தான் நடைபெற்றிருக்கிறது.

பெண்களுக்கெதிரான வன்முறைகள் அதிகரித்து வரும் மாநிலங்களில் ஒன்றாக ராஜஸ்தான் வளர்ந்து வருகிறது என்கிறார் ஒரு சமூக சேவையாளர்.

நிஷா மேத்தா, 37 (பெயர் மாற்றப்பட்டுள்ளது) என்ற அந்தக் குஜராத்திப் பெண் சொல்கிறார். ''எனது மகனை அழைத்து வருவதற்காக நான் அவர்களது இடத்துக்குச் சென்றேன். லோகேந்திரா விஜய் என்கிற அந்த ஜெயின் முனியிடம் நான் 'எனது மகனை அழைத்துச் செல்ல அனுமதி கேட்டேன். மகன் எங்கே என்றும் வினவினேன். அவன் சொன்னான். மகன் மாடியிலிருப்பதாக. நான் மாடிக்குச் சென்றேன். அப்போது எனக்குப் பின்னால் வந்த அவன் கதவை மூடினான். எனது கையைப் பிடித்துத் தன்னை நோக்கி இழுத்து எனது வாயைப் பொத்தினான். மறுகையால் எனது தலை முடியைப் பிடித்து நிலத்தில் தள்ளினான். அவர் ஒரு மிருக பலமுள்ள ராட்சதனைப் போல இருந்தான். என்னால் எதுவும் செய்ய இயலவில்லை. அவன் என்னைப் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கினான்.' குரல் உடைந்து தனதளக்கிறார் நிஷா.

''நான் கத்தினேன். 'நீ என்னை அழித்து விட்டாய்' என்று. அவன் சொன்னான், 'எனக்கு எப்போது இது தேவைப்படுகிறதோ அப்போதெல்லாம் நான் இப்படிச் செய்வேன்' என்று. 'எனது பெற்றோரிடம் இது குறித்து நான் சொல்வேன்' என்றேன். 'உனது மகன் என்னுடன் இருக்கிறான்' ஆகவே இது குறித்து வாய் திறக்காதே' என்று அவன் எச்சரித்து விட்டுச் சிரித்தபடியே வெளியே சென்றான்.

நிஷா வெளியே வந்து கண்ணில்பட்ட முதல் வீட்டுக்குள் நுழைந்து இது பற்றிச் சொன்ன போது அவர்கள் தங்களாலான சிறு உதவிகளைச் செய்தாலும், இது தொடர்பாக தம்மால் எதுவும் செய்ய முடியாது என்றும் ஏனெனில், ஜெயின் முனிகள் கடவுளைப் போலப் போற்றப்படுவார்கள். அவர்களுக்கு பின்னால் பலமிக்க வர்த்தக சமூகம் ஒன்றுள்ளது என்றனர்.

நிஷா தனது தந்தையிடம் இது பற்றிச் சொன்னார். அவரோ 'பேசாமல் வாயை மூடிக்கொண்டிரு' என்னுடைய பெயரையும் கெடுத்து, என்னுடைய வியாபாரத்தையும் பாழாக்கப் போகிறாயா? என்றே கேட்டார்.

நிஷாவைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய ஜெயின் முனியான லோகேந்திர விஜய் அரசியல்வாதி ஒருவருடன் நெருங்கிய தொடர்புடையவன்.

ஜே.சி. போஸ் விடுதியில் பாலியல் வல்லுறவில் ஈடுபட்ட மாணவர்களில் ஒருவர் அமைச்சர் ஹியான் சிங் சௌதாரியினதும், உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரதும் மருமகன்.

சிவானி ஜடேனா என்கிற 11ம் ஆண்டு படிக்கும் மாணவி பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டதோடு அசிட் வீசியும் தாக்கப்பட்டார். இதில் சம்பந்தப்பட்டவர்களின் பெயர்களைச் சிவானி கூறியும் கூட அவர்கள் பொலிசாரால் கைது செய்யப்படவில்லை. ஏனெனில் சம்பந்தப்பட்டவர்களில் ஒருவர் அமைச்சர் ஒருவரின் மகன்.

இவை இவ்வாறான குற்றவாளிகளுக்கு உள்ள அரசியல் பின்புலத்தைத் தெளிவாகவே புலனாக்குகின்றன.

இந்தச் சம்பவங்களில் அதிகாரத்துவமும், ஆணாதிக்கமும் எப்படி இணைந்திருக்கின்றன என்று பார்த்தீர்களா? பெண்கள் தொடர்பாக அவர்கள் என்ன அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள் என்றும் பாருங்கள். பிரச்சினையை எப்படித் திசை திருப்புகிறார்கள் என்றும் பாருங்கள்.

பிற மாநிலங்களை விடப் பெண்கள் இங்கே பாதுகாப்பாகவே இருக்கின்றனர். நாங்கள் அவர்களுக்குப் போதியளவு இட ஒதுக்கீடு செய்து கொடுத்திருக்கிறோம் என்று சொல்கிறார் பாரதிய ஜனதாக் கட்சியைச் சேர்ந்த மாநில துணை முதல்வர் கன்ஷியாம் திவாரி. துணை முதல்வருக்கு இச்சம்பவங்கள் பெரிய பிரச்சினைகளாகவே தெரிவதில்லை.

இன்னும் சில அரசியல்வாதிகள் பிரச்சினையையே திசைதிருப்பி விடுகிறார்கள். அந்தப் பெண்ணுக்கு எழு வருடங்களாகவே அவனுடன் தொடர்பு உண்டு..., அவளுக்கு 25 வயதுக்குமேல்..., அது அவளுடைய பொது போக்கு..., அவள் அவனுக்காக 40 நிமிடங்களுக்கு மேல் காத்திருந்தாள்..., அவள் அவனுடைய ஸ்கூட்டரிலேயே சென்றாள்... என்று எப்போதும் பெண்களுடைய ஒழுக்கம் குறித்தே பேசுகிறார்கள்.

'நிஷாவுக்கு முனியுடன் நீண்ட நாட்களாகவே தொடர்பு உண்டு. அவள் தனக்கு மும்பாயில் ஒரு வீடும் 5 லட்சம் பணமும் கேட்டாள்' என்கிறார் ஒரு ஜெயின் வர்த்தகர்.

ராஜஸ்தான் எம்.எல்.ஏ. ஒருவர் சொல்கிறார்; எப்படி மிரட்டி ஒருத்தி பல வருடங்களாக பாலியல் வல்லுறவு கொள்ள முடியும்? நிச்சயமாக அவள் ஒரு விபச்சாரியாகத் தான் இருக்க முடியும். சீதையையே அக்னிப் பரீட்சை செய்த இராமபிரானின் தொண்டரல்லவா, வேறெப்படி அவர் கேள்விழுெப்புவார்?

இரண்டு ஆண்களால் பன்வாரி தேவி பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட சம்பவம் (இது 1992இல் நடைபெற்றது) பற்றிக் கருத்துத் தெரிவித்த பா.ஜ.கட்சி எம்.எல்.ஏ. கன்ஹியா லால் 'பன்வாரிதேவி பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப் படவேயில்லை. அவள் சொன்னதெல்லாம் பொய்' என்றார்.

பெண்களது ஒழுக்கத்தை கேள்விக் குட்படுத்துவதினூடாகவே இவ்வாறான சம்பவங்களுக்கு நியாயத்தைக் கற்பிக்க முனையும் அரசியல்வாதிகள் குறித்து பாதிக்கப்பட்ட பெண் ஒருவர் சொல்கிறார். 'அவர்களது முதலாவது நடவடிக்கை பெண்களுடைய ஒழுக்கம் குறித்து கேள்வியெழுப்புவது தான். ஏனெனில் அவர்களுக்கு பெண்கள் தொடர்பாக எந்த மதிப்பும் இருப்பதில்லை என்கிறார்.

20வயதுப் பெண் ஒருவர் ஐம்பது வயதான ஆண் ஒருவரால் பாலியல் வல்லுறவு செய்யப்பட்ட சம்பவத்தின் விசாரணையின் போது பொலிசார் அப்பெண் சம்பவம் நடந்த அன்றிரவு கணவனுடன் உடலுறவு கொண்டாரா என்று அப்பெண்ணிடம் கேட்டதற்கு அவர் 'இல்லை' என்று பதிலளித்தார். ஆனால் பொலிசாரோ 'ஆம்' என்றே எழுதிக் கொண்டனர். இது விசாரணை ஆரம்பமாக முதலே வழக்கைக் கொன்று விட்டது என்கிறார் பெண்கள் மீதான வன்முறை எதிர்ப்பு இயக்கத்தைச் சேர்ந்த கவிதா. 'இது மட்டுமல்ல விசாரணைகள் ஒவ்வொரு மட்டத்திலும் வேண்டுமென்றே இழுத்தடிக்கப் படுவதும் உண்டு. பொலிசார், வழக்கறிஞர், வைத்தியர்கள் என்று அனைத்து மட்டத்திலுமே இது நடைபெறுகிறது என்றும் அவர் சொல்கிறார்.

அரசின் கருவிகளுக்கும் ஆணாதிக்கத்துக்கும் உள்ள தொடர்பை கவிதாவின் கூற்று வெளிப்படுத்துகிறதல்லவா?

மிரட்டி குழுவாக பாலியல் வல்லுறவில் ஈடுபடுவது பல்கலைக் கழகத்தில் மிகச் சாதாரணம் என்கிறார் ஜே.சி.போல் விடுதியின் காப்பாளர்.

பல்கலைக்கழகத் தேர்தலில்களின் ஊடாக அரசியலில் காலடி எடுத்து வைக்கத் தான் பல்கலைக்கழகம் பயன்படுகிறது என்கிறார் ஒரு பேராசிரியர் வருத்தத்துடன்.

ஜே.சி. போல் விடுதியில் பாலியல் வல்லுறவில் ஈடுபட்ட மாணவர்களில் பெரும்பாலானோர்களில் பணக்கார விவசாயிகளின் பிள்ளைகள், அரசியல்வாதிகளுடன் தொடர்புள்ளவர்கள். சிலர் சட்ட மாணவர்களும் கூட. எமது எதிர்கால சட்டவல்லுநர்களும், நீதிபதிகளும் இவர்கள் தானே என்கிறார் இன்னொரு பேராசிரியர்.

பெண்களுக்கெதிரான இவ்வன்முறைகள் அரசதிகாரம் ஆணாதிக்கம் மதம் என்பவற்றோடு நேரடித் தொடர்புடையவை என்பதில் சந்தேகமில்லை. அவற்றுக்கு எதிரான ராஜஸ்தான் பெண்களது போராட்டம் ஒரு முன்மாதிரி ஏனென்றால்; அது தான் ஆண்களின் ஒழுக்கம் குறித்தும் கேள்வி எழும்பியுள்ளது. அது ஒரு நல்ல விடயம் என்கிறார் பாதிக்கப்பட்ட ஒரு பெண்.

### பெண்களுக்கெதிரான வன்முறைகள்

| வன்முறைகள் | 1994 | 1995 | 1996 |
|---|---|---|---|
| பாலியல் வல்லுறவுகள் | 1002 | 1036 | 1162 |
| வரதட்சணைக்கொலைகள் | 330 | 369 | 349 |
| வரதட்சணைத்தற்கொலைகள் | 69 | 91 | 99 |
| வரதட்சணை சித்திரவதைகள் | 2608 | 3203 | 3920 |

**பன்வாரி தேவி:** 1992 செப்டெம்பர் 22ம் திகதி, வயலில் வேலை செய்து கொண்டிருந்த போது இருவரால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டார். நீதியை பெற்றுக்கொள்ளுமுகமாக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். மூன்று ஆண்டுகளாக பாலியல் வல்லுறவுகளுக்கு எதிராகப் போராடி வருகின்றார்.

**தாபுபாய் (40):** இரண்டு பொலிசாரினாலும் மேலும் ஒருவராலும் இவர் உட்பட அவரது கணவர், மகன் ஆகியோர் கடந்த ஜூன் மாதம் கடத்திச் செல்லப்பட்டனர். பின்னர் இவர் 8 பேரால் பாலியல் வல்லுறவு செய்யப்பட்டார். கணவரும் மகனும் இரும்புக்கம்பிகளால் தாக்கப்பட்டு பலத்த காயத்துக்குள்ளாக்கப்பட்டனர்.

**நிர்மலா:** 1995 ஜூன் மாதம், நான்கு வயதான நிர்மலா 53 வயதான ஒருவரால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டார். நிர்மலா குற்றவாளியை இரு முறை அடையாளம் காட்டியும் பொலிசார் ஒரு ஏழைப் பையனைக் கைது செய்தனர். சம்பந்தப்பட்ட குற்றவாளியோ பாரதீய ஜனதா கட்சியின் ஆதரவு கொண்டவர் என பெண்கள் அமைப்புகள் குற்றம் சாட்டுகின்றன.

**சுமன் சர்மா:** ஏழாவது வகுபபில் கல்வி கற்கும் பெண்ணான இவரை, பாலியல் வல்லுறவுக் குள்ளாக்கிய நபர், அப்பெண்ணின் தந்தையின் அழுத்தம் காரணமாக பொலிசாரால் கைது செய்யப்பட்டார். பாலியல் வல்லுறவு தொடர்பாக முறையீடு செய்யப்பட்ட போது, அம் முறைப்பாடு, பொலிஸ் அதிகாரியினால் கிழித்தெறியப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# திருக்கோயில் கவியுவனின்:

# வாழ்தல் என்பது..

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த திருக்கோவிலைப் பிறப்பிடமாகவும், இராசையா யுவேந்திரா என்ற இயற்பெயரையும் கொண்ட பொறியியல் பட்டதாரியான திருக்கோவில் கவியுவன் இதுவரை வீரகேசரி, சரிநிகர் பத்திரிகைகளில் எழுதிய சிறுகதைகளை 'நண்பர்கள்' இலக்கிய அமைப்பு தொகுத்து நூலாக வெளியிட்டிருக்கிறது. கவியுவனுக்கும் இது நூலுருப்பெறும் முதலாவது வெளியீடாகையாற்போலும் முன்னுரையில் கார்த்திகேசு சிவத்தம்பி, ஆசிரியரை நன்றாகவே தட்டிக்கொடுத்துள்ளார்.

இளம்படைப்பாளிகளின் படைப்புகளுக்கு முன்னுரை வழங்குவோர் நுனிப்புல்மேயாது படைப்பைப் பகுப்பாய்வுக் குட்படுத்துவது நல்லது. இங்கே கவியுவனின் படைப்புக்களில் உள்ள பலவீனங்கள் சற்றேனும் சுட்டப்படாமல் வெறுமனே கொம்பு சீவப்பட்டிருத்தல் இளம் படைப்பாளிக்கு ஆரோக்கியமானதல்ல.

நூல் தரமானதாளிலே பதிக்கப்பட்டுள்ளது. வழவழப்பான அட்டையின் முகப்பிலுள்ள படம் ஒரு வார்ப்புச்சிலை (துக்கித்திருந்து) யோசிப்பதுபோலுள்ளது. கண்ணாடிக்கூண்டினுள் அகப்பட்டுக்கொண்ட பறவையைப்போலும் தமிழர்தம் வாழ்வும், அதன் சோகமும் சிலையில் பிரதிபலித்து நூலைத்திறக்கவும் வாசகனையும் தொற்றிக் கொண்டு விடுகிறது.

மொத்தமும் தொகுப்பில் பத்துச்சிறுகதைகள். பத்திலும் மரணத்தின் தூது, தொடுவான வெளிகள், உடைத்துப் போட்டதெரு விளக்கு, இனியும் ஒரு சாவு, வாழ்தல் என்பது ஆகிய கதைகள் பேசக்கூடிய வகையில் நன்கு வார்க்கப்பட்டுள்ளன.

செவ்வந்தி கதை பாலியப்பருவத்திலிருந்தே நட்புடன் வளரும் செவ்வந்தி, சேந்தன் என்ற இரு அயலயல் வீட்டுக் குழந்தைகள் பற்றியது. செவ்வந்தி வயதிற்கு வந்ததும் அவள் படிப்பு தடைப்பட்டுப்போக தொடர்ந்து படிக்கும் சேந்தன் பல்கலைக்கழகம் போகின்றான். குழந்தைப் பராயத்திலேயே ஒருவர் மீது மற்றவருக்குள்ள அதீதமான ஆகர்ஷிப்பைக் காட்ட ஆசிரியர் செவ்வந்திக்கு அம்மை கண்டபோது சேந்தனும் ஒருவாரம் பள்ளிக்கூடமே போகாமல் அவளுக்குப்பக்கத்திலேயே இருந்தான் என்பது மிகை.

பொறியியல் வளாகத்திற்கு எடுபட்டுள்ள சேந்தனின் சமூக அந்தஸ்த்து அவன் அங்கிருந்து வெளியேறும்போது மிக உயர்ந்திருக்கும். சேந்தன் அவளை மணக்கலாம் அல்லது மணக்காமலும் விடலாம். சிறுவயது முதலே ஏற்பட்டுவிட்ட ஆகர்ஷிப்பு சற்றும் குறையாதபடி வளர்ந்துவிட்ட சிறுமி செவ்வந்தி இப்போது யௌவனம் நிறைந்த குமரியாகி - வேலிக்கு மேலாலே மச்சான் வெள்ளமுகம் தெரிவதெப்போ... எனக் கிராமத்தில் காத்துநிற்கிறாள்.

இது போன்ற கதைகள் ஏலவே தமிழில் நிறையவே சொல்லப்பட்டுவிட்டன.

'நனைதலும் காய்தலும்' கதையின் கருவும், ஸ்ரீதர் முதல் (சரியாக நினைவுக்கு கொண்டு வர முடியாதபடியால் படத்தின் பெயரைத் தருதலைத் தவிர்க்கின்றேன்) நடுவில் கமலஹாசன் வரையில் (வாழ்வே மாயம்) பல பழைய சினிமாவில் எடுத்தாளப்பட்டதுதான். காதலிணையில் ஒருவருக்கு உயிர் கொல்லும் நோய் வந்து விட பாதிப்புக்காளானவர் தன் காதலை வாபஸ் பெற்றுக்கொண்டு விடுவது, அல்லது மற்றவர் தன் சூழலாலேயே அவ்வாறு வாபஸ் பெற்றுக்கொண்டு விடும் நெருக்கடிக்குள்ளாவது. புதிய ட்றீட்மென்டுகள் இருந்தாலேயொழிய புதியவர்கள் பழைய கருக்களில் கைவைத்தல் அனாவசியம். ஆசிரியர் இக்கதைகளை எழுதுங்காலத்தில் பொறியியல் கல்லூரி மாணவனாகவுமிருந்ததால் தமிழில் அவரின் வாசிப்புப்பரப்பு குறைவாக விருத்தல் இயற்கையே.

'காற்றுக்கனக்கும் தீவு' மிக நல்ல ஒரு உருவகம். ஆனாலும் அதைப் பாட்டி குழந்தைகளுக்குச் சொல்வது போல் அமைத்தது சரியில்லை. கதை நகர்வது முற்றாகப் பாட்டியின் மொழியிலில்லை. கதையின் தரமும் பச்சைக்குழந்தைகள் புரியும் வண்ணமாயுமில்லை.

மரணத்தின் தூது கதையில் படையினரின், தமிழ்க்குழுவினரின் தேடுதல் - விசாரணை என்பவற்றையிட்டு அப்பாவி மக்கள் அடையும் பயம்; அவஸ்தைகள் என்பன நன்கு சித்திரிக்கப்பட்டுள்ளன. தொடுவான வெளிகள் கதையில் உலகில் அதிகமானோருக்கு வகுக்கப்பட்டிருப்பதைப் போல மிகச்சாதாரண வாழ்வையே அவாவும் ஒரு மாணவன் அப்பாவிடமிருந்து வரும் கடிதத்தால் பாதிக்கப்படுகிறான். அதில் காணப்படும் வாசகம் இதுதான்: நாங்கள் ஒரே நாளில் ஐந்துதரம் மாதாகோயிலுக்குப் போய்த்திரும்பியிருக்கிறோம். சிலவேளை நீ இதைப் படிக்கும்போது நாங்கள் மாதாகோயிலுக்குள்ளே நிரந்தரமாயிருக்கலாம். மாதாவோடும் நிரந்தரமாயிருக்கலாம்.

யாரும் விரும்பாமலே சமநிலை கெடுக்கப்பட்டிருக்கும் சமூகச் சூழலொன்றின் தாக்கம் பல மைல்கள் தாண்டியிருக்கும் மாணவனுக்குப் படிப்பில் மனதை ஒரு நிலைப்படுத்தமுடியாதவாறு பாதிக்கின்றது.

டியூசன் கொடுத்துக்கொண்டே பல்கலைக்கழகத்தில் பயிலநேரும் ஏழை மாணவன் ஒருவன் அனுபவிக்கும் தூக்கமின்மை, ஓய்வின்மை என்ற அவஸ்தைகளின் சேர்த்தியாக - கடனுக்கு வட்டி ஏறிக்கொண்டே ஏபாகுது... ஏலுமெண்டால் ஒரு ஆயிரம் ரூபாய் அனுப்பு- என்று தாயாரிடமிருந்து வரும் கடிதம் வரும் நிகழ்வானது கசப்புடன் கூடிய வாழ்வனுபவங்களின் தொடர்ச்சி என்ற வகையில் 'இனியும் ஒரு சாவு' கதையில் இடம்பெறுகிறது. கதையில் சோகச் சுவையை அதிகரித்துவிடவும் போலும் செவ்வந்திக்கு வேறு திருணமாகி விடுகிறது என்ற செய்தியையும் ஆசிரியர் சேர்த்து விடுகிறார்.

ஊருக்கு நல்லது செய்யவேணுமென நினைத்துப் பல சமூகசேவைகளைத் தானே இழுத்துப்போட்டுக்கொண்டு செய்யும் பெரியவர் ஒருவர் ஆயுதக் குழுவொன்றுக்குத் தன்வீட்டிலேயே ஆலோசனைகள், கூட்டங்கள் நடத்தவும் அனுமதிக்கிறார். பின்னர் அப்பெரியவருக்கும் அவ்வியக்கத்தினருக்கும் கருத்து வேற்றுமை வந்தபோது பெரியவர் நன்றிகெட்டத்தனமாய் தெருவிளக்குக் கம்பத்தில் கட்டப்பட்டு உடைத்துப்போட்ட தெருவிளக்கு கதையில் ஒரு தெரு நாயைப்போலக் கொல்லப்படுகிறார்.

திருக்கோயில் பகுதி மக்களின் பேச்சு வழக்குகளிலிருந்து கதை மாந்தர்களின் உரையாடல்களை அமைத்திருப்பதால் கதைகளில் கிழக்கு மாகாணத்தின் மண்வாசனை வீசுகிறது

ஒழுங்காகப் படித்துநேராக - கெம்பஸ் - புகுந்து விடக்கூடிய திறமையுள்ள ஒரு சகோதரன் படிப்பைப் பாதியில் நிறுத்திவிட்டுப் போராடப்போகிறான். ஒரு கண்ணின் பார்வை கொஞ்சம் குறைபாடுடையது, செங்கல் மங்கலான நேரத்திற்போலும் படையினரிடம் அநியாயமாகப் பிடிபட்டுப்போகிறான். அவன் மீண்டும் திரும்பி வருவான் என்ற நம்பிக்கை இழந்து எல்லோருமே அவனை மறந்துவிட்ட நிலையில் ஐந்து வருடங்கள் கழித்து நடைப்பிணமாய் ஒருநாள் வீடுவந்து சேருகிறான்.

இந்த ஐந்து வருடகால ஓட்டத்தில் அப்பா இறந்து போய்விடுகிறார்.... குடியிருந்த வளவு விலைப்பட்டுப்போகிறது.... அதற்குள் மேய்ந்துகொண்டிருக்கும் நெற்றியில் வெள்ளைப்பொட்டுடன் கூடிய சிவலை மாடும் அப்போது அவர்களதில்லை. அண்ணாச்சிமாரும், தனித்தனியாய்ப் போய்விடுகிறார்கள்.. அக்கா ஒரு குடிகாரன் ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டுப் போயிருக்கிறாள்... குடும்பமே சிதைஞ்சு குரங்கு கையில் கிடைத்த பஞ்சுப்பொதியாகிவிடுகிறது.

தம்பியாரிடம் சொல்கிறான்:- சின்னவா.. இந்தக்கண் மட்டும் ஒழுங்காத் தெரிஞ்சிருந்தால் அண்ணைக்கே செத்திருக்கலாம். அவங்கள் வந்தது தெரியாமப் போச்சு... அப்ப செத்திருந்தா இப்படிக் கவலைப் பட்டிருக்க நேர்ந்திருக்காது....

இதென்ன பயித்தியக்கத, வருத்தம் எல்லோருக்கும் வாறதுதானே அது சுகமாய்ப்போயிருக்கும்....

-உனக்கொண்டும் தெரியாது சின்னவா. சொன்னால் விளங்குமோ என்டுந்தெரியேல்ல... எல்லாருக்கும் என்மேல் நல்லா மனம் விட்டுப்போச்சு. படிக்கக் கொட்டினது காணாதெண்டு இப்ப வருத்தத்திற்கும் கொட்டவேண்டிக்




கிடக்கென்று அண்ணாச்சி யோசிக்குது. மூத்தண்ணாச்சி வீட்டபோனா ஒரு தொழுநோய்க்காரனைப் பார்க்கிறமாதிரி அருவருபபோட பாக்கிறாங்க, பிள்ளைகள் கிட்ட வந்தால் மச்சாள் உறுக்கிக் கூப்பிடுறா கடசி அக்கச்சிக்கூட என்னில் சலிப்பு வந்திட்டுது. அத்தான்ட குத்தல் கதையளையும் கேட்டுக்கொண்டு.....

-அதுக்கு செத்தா சரியாப் போயிருமா...

- அது மட்டும் வருத்தம் விட்டுவைக்குதோ தெரியாது... நேத்தும் சந்தையடியில் விழுந்துகிடந்தானாம்....

'வாழ்தல் என்பது' கதையில் இடம் பெறும் இப்போராளிப் பாத்திரம் பின்னால் ஒரு அனாதையைப்போல இறந்து போவதாகச் சித்திரிக்கப் படுகிறது. தேசத்துக்காக, தனது மக்களின் விடிவுக்காக அடிகளையும், உதைகளையும் இன்னோரன்ன இம்சைகளையும் தாங்கித் தமது இன்னுயிரையும் தருகின்ற தியாகிகளைச் சமூகம் எவ்வளவுதூரம் நன்றியுடன் எதிர்கொள்ளுகிறதென்பதை இக்கதை மூலம் கவிதைக்குரியன போலும் செட்டுமொழியில் வடித்துள்ளார் கவியுவன். தொகுதியிலேயே சிறப்பானது என்று சுட்ட மேலும் பல தகுதிகள் இக்கதைக்குள்ளன.

கவியுவன் தன் படைப்புக்களில் கருத்தியல் திணிப்புகள் எதுவும் செய்யாமலும், தான் காட்ட வந்த காட்சியை மட்டும் காட்டிவிட்டு ஒதுங்கிவிடுவதாலும் வாசகன் கதையைத் தொடர்ந்தும் பயணிக்க முடிகிறது.

தமிழ் இளைஞன் என்ற காரணத்தினால் வீட்டில் நிம்மதியாகத் தூங்கும் அவனது உரிமைகூடப் பறிக்கப்பட்டுவிடும் அவலம். தானே மக்களோடு மக்களாக வாழ்ந்து அவர்களது பிரச்சினைகளையெல்லாம் தானும் எதிர்கொண்டு ஆசிரியர் பெறும் வாழ்வனுபவங்கள் இங்கே படைப்புக்களில் மிக நுட்பமாகவும், யதார்த்தமாகவும் பிரதிபலிக்கின்றன.

எண்பதுகளின் ஆரம்பத்திலிருந்தே இலங்கையின் அரசியலானது ஆதிக்கம், வன்முறை, அடக்குமுறை என்றாகி தமிழர் வாழ்வு பந்தாடப்பட்டு சின்னாபின்னமாகிப் போனதின் சாட்சியங்களாக இவர்படைப்புகள் களத்தில் நிற்கும் செய்தியாளரின் விபரிப்புகளாக யதார்த்தத்துடன் விரிகின்றன. குழந்தைக்கு ஊட்டவேண்டிய பாலிலிருந்து பல்கலைக்கழக அனுமதிவரையில் போர் என்ற அரக்கன் பல்லுப்பதித்திருக்கும் காட்சிகள் காட்டப்படுகின்றன.

தமிழரைப் பொறுத்தவரையில் இழப்புக்கள் இயல்பாகிவிட்டனதான். போரினால் அதன் வீதம் அதிகரித்திருப்பதையும் இரகசியமல்லத்தான். கவியுவன் எல்லாப்படைப்புக்களிலும் இழப்புக்களையே முன்னிறுத்தும் போது அது அவர் முத்திரையென்றாகிவிடும். அனேகமான படைப்புக்களில் ஒரே மாதிரியான பகைப்புலமிருத்தல், கொஞ்சம் வறுமை, பொருளீட்ட ஒருவர் இல்லாத குடும்பம், விதவை அம்மா இந்த ஸ்டீரியோ வகைப்பாத்திர அமைப்புக்களோடு சிருஷ்டிக்கப்படுகையில் அப்படைப்புகளினூடாக கீழ்மத்திய வர்க்கத்து மாணவனாகக் கவியுவன் தலை நீட்டுவது தெரிகிறது. இக்குறைபாட்டை அ. முத்துலிங்கம் கதைகளிலும் அவதானிக்கலாம். இது படைப்பிற்கு எவ்வகையிலும் அழகு சேர்க்காது. இது கவியுவனின் கலைப்படைப்பையன்றி அவரின் டயரிக்குள் புகுந்துபடித்த அனுபவத்தையே வாசகனுக்குத் தருகிறது.

கதையின் அமைப்பில் சிக்கல்தன்மை குன்றி அனேகமாக எல்லாப்படைப்புகளுமே நேர்கோட்டுப்படைப்புகளாக அமைந்துவிடுவதும் கதைகள் கொஞ்சம் கட்டுரைத்தன்மை அடைகின்றன. பாத்திரவார்ப்புக்களில் நேர்த்திக்குறைவு போன்ற குறைகள் இவர் படைப்புக்கள் அதிகம் விமர்சனத்திற்குட்படாமையாற்போலும் இன்னும் களையப்படாது நிலை நிற்கின்றன.

மேலும் புற அனுபவங்களின் வர்ணிப்பும், விஸ்தரிப்பும் சற்றே தூக்கல்தான். கடலையும், அலையையும், வானையும் நிலவையும் எல்லாக் கதைகளிலும் கிருதயுகத்துப் பாணியிலே வர்ணித்துவிடுகிறார்; வர்ணிப்புகள் என்றுமே அகவியல் செய்திகளைத் தருவதுமில்லை. அவை மிகும்போது ஒரு கவிதையில் தொங்கிவிடும் உபரி வார்த்தைகளைப்போன்று படைப்பின் வீரியத்தைக் குறைத்துவிடவும் கூடும். இரண்டு மூன்று முத்துக்களே இருக்கக் கூடிய கச்சானுக்கு அரை அங்குலத் தடிப்பில் கோதிருந்தால் எப்படி... உடைத்துச் சாப்பிடச் சலிப்பாயிராது?

இசை, கலை, இலக்கியம் என்பன மனதும், அதன் நுட்பமான இரசனைகளும் சார்ந்த ஒரு துறையாகும். ஒரு படைப்பாளி நிஜவாழ்வின் அனுபவங்களையும் தன் கற்பனையில் அனுபவிக்கும் கலானுபவங்களையும், இதரவர்களும் அனுபவிக்க ரசிக்கத் தக்கவைக்க வேண்டும் என்பதற்காகவே சிருஷ்டிக்கின்றான். காலத்தின் சுவடுகள் எந்த இலக்கியத்திலும் பதிந்திருப்பது இயல்பு. ஆனால் அதற்காகவே இலக்கியம் தனிமுயற்சி எடுக்க வேண்டியதில்லை. அதாவது---

சரித்திரத்தைப் பதிவு செய்துகொள்ளுதல் இலக்கியத்தின் வேலையல்ல, அதற்காகப் படைக்கப்படுவதுமில்லை. (இதே கருத்தை ஜெயமோகன் போன்ற இலக்கியவாதிகளும் கொண்டுள்ளார்கள்) கா. சிவத்தம்பி அவர்கள் முன்னுரையில் குறிப்பிடுவது போல படைப்பிலக்கியங்கள் சரித்திரங்களை ஆவணப்படுத்தப் புறப்பட்டுவிட்டால் நாளடைவில் சரித்திரப் புத்தகங்கள் தான் எஞ்சும்... இலக்கியமல்ல.

திருக்கோவில் கவியுவனிடம் இவ்விளவயதிலேயே தன்னுணர்வுகளையும், அனுபவங்களையும் இலக்கியமாக வார்த்துவிடும் திறமை சிறப்பாகவே வாய்த்துள்ளது.

வருங்காலத்தில் இன்னும் சிறந்த படைப்புக்களை இவரிடமிருந்து எதிர்ப்பார்க்கலாமென்ற நம்பிக்கை பிறக்கிறது.

**பொ. கருணாஹரமூர்த்தி**
ஜேர்மனி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## வாசகர் செ(ற)ல்வழி



# கிராமியக் குளங்களை கபளீகரிக்கும் காசியப்பர்கள்

நீர்ப்பாசனம் பெரிய நீர்ப்பாசனம், சிறிய நீர்ப்பாசனம் என இருவகைப் படும். பெரிய நீர்ப்பாசனம்; கால்வாய்களால் தொடர்ந்தும் தேவைக்கேற்ப நீரைப் பெறுகின்ற அமைப்பு முறையாகும். சிறிய நீர்ப்பாசனம், பருவகால. மழைநீர் வடிச்சல்களாக அல்லது நிலைகளாக குளங்களில் சேகரிக்கப் பட்டு தேவைக்கேற்ப நீரைப்பெறுகின்றதொரு முறையாகும். கிராமியக் குளங்களும் இத்ற்கு ஒப்பானதொன்றாகும்.

பருவகால மழை நீர், வடிச்சலாக குளங்களை நோக்கிச் செல்கையில் அதனைப் பெரிய அணையிட்டுத் தடுத்து தேவைக்கேற்ப பயன்படுத்தப் படும் - முறையான ஆறு (06) கிராமியக் குளங்கள் கல்முனைப் பட்டினத்தின் வடக்கே அமைந்திருக்கும் பாண்டிருப்பு, மருதமுனை, பெரிய நீலாவணை ஆகிய கிராமங்களின் மேற்குத் திசையில் ஓரளவு நிரலாக அமைந்திருக் கின்றன. இந்நாடு வளர்ந்து வரும் ஒரு விவசாய நாடு என்பதனால் கடந்த அரசும் தற்போதைய அரசும் நெற்செய் கைக்கென கோடிக் கணக்கில் செலவு செய்வதாகச் சொல்கின்றன.இவற்றுள் சேகரிக்கப்படுகின்ற நீரைக் கொண்டு கடந்த பல நூற்றாண்டுகளாக 665 ஏக்கர் காணியில் இப்பகுதி மக்கள் நெற் செய்கை செய்து வந்தனர். கடந்த இருபது வருடங்களாக இக்காணிகளில் சரி பத்து வீதமான (10%) நெற் செய்கையே பண்ணப்படுகின்றது. இதற்கான காரணங்கள் பல. உதாரணமாக நூறு ஏக்கர் நெற்செய்கை பண்ணக் கூடிய நீரைக் கொள்ளத்தக்க ஒரு சிறிய கிராமியக் குளத்திற்கு இலட்சக் கணக்கில் செலவு செய்யக் கூடிய இக்கால கட்டத்தில், 665 ஏக்கர் நெற்காணிக்கு நீர் வழங்கக் கூடிய கிராமியக் குளங்களுக்கு உரிய திணைக்களம் பாராமுகமாக இருப்பது ஒரு புறம் கவலையைத் தருகின்றது. மறுபுறம் இக்குளங்களின் கிழக்கு கரைகளில் குடியிருக்கும் பொது மக்களும், அரிசி ஆலைச் சொந்தக் காரர்களும் இக்குளங்களின் பெரும் பகுதிகளைக் கபளீகரம் செய்துவிட்டனர். இக்குளங்களில் அத்துமீறிய ஆக்கிரமிப்பைத் தடைசெய்வதற்கு ஒரு அரச அதிகாரியும் முன்வரவில்லை. இந்நிலை தொடர்ந்தால் நெற்செய்கையும் பாதிக் கப்பட்டு இந்தத் தொழிலையே நம்பி வாழுகின்ற 291 தமிழ் முஸ்லிம் விவசா யக் குடும்பங்கள் சொல்லொண்ணாத் துன்பங்களை அனுபவிப்பர் என்பதில் ஐயமில்லை.

1978ன் ஆரம்ப பகுதியில் ஐ.தே.க ஆட்சியின்போது பாண்டிருப்பு பெரிய குளத்திற்கு சுமார் 2 கி.மீ. தொலைவில் உள்ள 'கிட்டங்கி' என்னும் இடத்தில் இருந்து நீரை வெளித்தள்ளல் மூலம் (Pump) கொண்டு வரலாம் என நீர்ப் பாசனத் திணைக்களம் மட்டம் மதிப்பீடு என்பன செய்து கால்வாய் (Cannel) ஊடாக நீரைக் கொண்டு வந்து இருக் கின்ற ஆறு (06) குளங்களையும் இணைத்து ஒரு தனிக்கால்வாயாக அமைக்கலாம் என எண்ணி அத்திட் டத்தை நிறைவு செய்தது. ஈற்றில் மட்டம் பிழைத்து நற்பிட்டிமுனைக் கிராமத்தின் கிழக்குக் கரைக் குளங்களான பனையான் குஞ்சுக்குளம், ஒட்டன்குளம் என்பன நீரில் அமிழ்ந்ததுடன், அவற்றின் கரையோரங்களில் அமைந்திருந்த நூற்றுக்கணக்கான குடிசைகளும் வெளித் தள்ளப்பட்ட நீரில் அமிழ்ந்தன. இதனால் கல்முனைப் பிரதேச நீர்ப் பாசனத் திணைக்களம் அத்திட்டத்தைக் கைவிட்டது. இதற்காக செலவு செய்யப் பட்ட தொகையும் பெரிது. இக்கால கட்டத்தில் இந்த 6 குளங்களினதும் தேவை இல்லாமல் போய்விடும் என்று எண்ணிய இப்பகுதி மக்கள் தங்களின் பலத்துக்கேற்ப பாரிய அளவில் ஆக்கிர மிப்புச் செய்தனர். ஆனால் யார் என்ன செய்தார்களோ தெரியாது அக்கணமே ஆக்கிரமிப்பாளர்கள் கல்முனைப் பொலிசார் மூலம் அப்புறப்படுத்தப் பட்டனர். மாறாக இப்போது எறும்பு ஊர்வது போல் குளக்கரைகளின் எல்லைகள் நகர்ந்து செல்கின்றன.

இக்குளங்கள் கமநல சேவைகள் திணைக்களத்திற்கு உரியதா அல்லது கல்முனைப் பிரதேச சபைக்குரியதா என இப்பகுதி விவசாயப் பெருமக்களுக்கு புரியாத புதிராகவே இருக்கின்றது. இக்குளங்களை 1978ன் இறுதிப் பகுதி தொடக்கம் 1989ம் ஆண்டின் ஆரம்பப் பகுதிவரை எவராவது ஆக்கிரமிப்புச் செய்தால் அப்போது பதவி வகித்து வந்த பயர்ச்செய்கை உத்தியோகத்தர் களுக்கு 1978ம் ஆண்டைய 58ம் இலக்க கமநல சேவைகள் சட்டத்தில் அவ்வாக் கிரமிப்பை தடைசெய்து சட்ட நீதிமன் றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவும் ஏற்புடையதாகவும் இருந்தது.

பின்பு 1989.02.01ல் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் கிராம அலுவலர் களாக உள்ளீர்க்கப்பட்ட பின்பு அக்கருமங்கள் 'குளக் குழுக்கள்' அமைக்கப்பட்டு அதனிடம் ஒப்படைக் கப்பட்டன. மாறாக அதில் பொறுப்பான அரச அதிகாரியும் இல்லாத காரணத் தால் ஆக்கிரமிப்புக்கெதிரான நடவடிக் கைகள் ஆமை வேகத்தில் செல்கின்றன. இதனால் ஆக்கிரமிப்பு கரையில் இருந்து நடுப்பகுதி வரை சென்று நிலையான கட்டிடங்களாகியும் இருக்கின் றன.

இச்செயல் தொடர்ந்தால் நீலாவணைக் கமநல கேந்திர நிலையத்தின் ஆதிக்கத் தின் கீழுள்ள மேட்டுவட்டை வடகண் டம், மேட்டு வட்ட கிழல் கண்டங்களில் உள்ள 665 ஏக்கர் நெற்காணிகளும் செய்கை பண்ண முடியாத ஒரு அவ்லநிலை தோன்றலாம்.

எனவே தயவு செய்து சம்பந்தப்பட்ட திணைக்களமோ அல்லது அரச நிறுவனமோ அல்லது விவசாய அமைப்புகளோ கரிசனையுடன் கருத்திற் கொண்டு எதிர்கால சந்ததியினராவது முழுப் பயன் பெறும் வண்ணம் நடவடிக் கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

***ஏ.எச்.ஏ. லாஹிர்,*** *மருதமுனை*

# காலத்தின் தேவை!

இது நாள் வரை வெளிவந்த பல நூல்கள் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் ஆரம்ப வருகை தொடர்பான வரலாற்றினையும், தொழிற் சங்கப் போராட்ட வரலாற்றினையும் கொண்டதாக மட்டுமே காணப்பட்டது. இலங்கை நாடு சுதந்திரம் பெற்றவுடன் சுதந்திர மற்றவர்களாக்கப்பட்டு நாடற்றவர் களாக்கப்பட்ட இம்மக்கள் தம் சுதந்தி ரத்திற்காக, போராடிய வரலாற்றின் முதல் நூல் 'எழுதாத வரலாறு' என்பதை சிவசேகரம் அறிய மாட்டாரா?

இலங்கை திராவிடர் முன்னேற்றக் கழகம் எவ்வாறான ஒரு சாதனையை செய்துள்ளது என்பதை இளைய தலை முறைக்கு தெரிவிக்கும் முகமாக சில உண்மைகள் வெளிச்சத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. சிவசேகரத்துக்குப் பிடிக்கவில்லையோ என எண்ணத் தோன்றுகிறது.

மலையக மக்கள் மத்தியில் அறியாமையும் எழுத வாசிக்கத் தெரியாத நிலையும் கோலோச்சிய கால கட்டத்தில் இலங் கைத் திராவிடர் கழகம் செயல்பட ஆரம்பித்ததும் குறிப்பிடத்தக்கது. இன்று தொழிற்சங்கங்கள் பல்கிப் பெருகியுள்ளன.

ஒவ்வொரு தொழிற்சங்கமும் பல உரிமைப்போராட்டங்களையும் மேற் கொண்டுள்ளது. ஆனால் அடிப்படை மனித உரிமையான குடியுரிமைக்கான மக்கள் போராட்டத்தினை முன்னெடுக்க வில்லை.

இ.தி.மு.க முன் எடுத்த குடியுரிமைப் போராட்டத்தைத் தடுக்க பல இனவாத சக்திகள் முயன்ற போதும் திட்டமிட்ட படி நாடற்றோர் மறுப்பு மகாநாட்டை பண்டாரவளை நகர மண்டபத்தில் நடத்திய பெருமை இ.தி.மு.காவையே சாரும்.

இ.தி.மு.க தமது பரிணாம வளர்ச்சியின் உயர்கட்டமாக இடதுசாரி அரசியலைக் கடைப்பிடித்த போதும், தமிழ் பேசும் மக்கள் முகம்கொடுத்த இன ஒடுக்கல் விடயத்தில் இடதுசாரி அரசாங்கம் அதனை அணுகிய முறையின் பிரதி பலனாக இ.தி.மு.கவும் தமிழ் மக்கள் மத்தியில் செல்வாக்கை இழந்தது உண்மையே.

எஸ்.வி.ஆரின் கருத்துக்களை நான் முழுமையாகவே ஏற்றுக் கொள்கிறேன். இவரின் கருத்துக்களில் என்னை மிகவும் கவர்ந்த வரிகள் இவையாகும். ''இலங்கையில் திராவிடர் இயக்கம் என்ற பொதுவான வரைவிலக்கணத் தின் கீழ் முத்துலிங்கம் எழுதியுள்ள நூலிலுள்ள முக்கியமான குறைபாடு, அந்நூல் பெரிதும் 1949ஆம் ஆண்டு டன் தொடங்குகிற இலங்கைத் திராவி டர் முன்னேற்றக் கழகத்தின் வரலாறாக உள்ளதேயன்றி அதற்கு முந்திய சுய மரியாதை இயக்கம், திராவிடர் கழக வரலாறு என்பன ஒரு சில வரிகளுக்குள் குறுக்கப்பட்டு விட்டது தான்'' என்பதை நானும் ஏற்றுக்கொள்கிறேன்.

உண்மையிலேயே இந்நூல் இளைய தலைமுறைக்கு ஒரு காப்பகம் என்றே சொல்லத் தோன்றுகிறது. காலத்தின் தேவையறிந்து இந்நூலை முத்துலிங்கம் படைத்துள்ளார் என்பதை மறுக்க முடியாது.

***சந்தனம் சத்தியநாதன்,*** *புசல்லாவை*

# தும்பிழந்த துடைப்பான்!

சரிநிகர் 134இல் ''தேசியத்தின் பிறப்பாக்கம் தவறானது'' எனும் தலைப்பில் வெளியான கட்டுரையில் ஜேர்மனிய தேசிய வாதத்தையும் புலிகளின் தேசிய வாதத்தையும் ஒப்பிட்டு எழுதியிருக்கிறார் துடைப்பான். ஜேர்மனியில் ஹிட்லர் தானாகவே உருவாக்கிக் கொண்ட ஒரு கொள்கை யினடிப்படையில், அவனது நாசிப் படைகளும், கூட்டமும் மாத்திரமே உயர்ந்த ஜாதிகளென்றும், உலகை ஆளப்பிறந்தவர்கள் என்றும், உருவாக் கப்பட்டது தான் அவனது தேசியவாதம்.

இலங்கையின் சுதந்திரத்தின் பின் காலம் காலமாக ஏமாற்றப்பட்ட, அடிமைகள் போல் நடத்தப்பட்ட ஒரு சிறுபான்மை இனத்தின் தேசிய விடுதலைப் போராட் டத்தின் பிரதான அங்கமே தமிழீழ விடுதலைப் புலிகள். விடுதலைக்கெனப் புறப்பட்ட ஏனைய குழுக்கள் இன்று முதுகெலும்பிழந்து நிற்கின்றன.

இந்த யதார்த்தத்தை துடைப்பான் புரிந்து கொண்டால் சரி!

**இராமன்,** *களுவாஞ்சிக்குடி*

# பட்டிமன்ற வியாபாரம்

அண்மையில் லியோனி எனும் பட்டிமன்றக்காரர் நம்நாட்டுக்கு அழைக் கப் பட்டிருப்பதை பத்திரிகைகள், பிற ஊடகங்கள் மூலம் அறியக் கிடைத்தது. இது சென்ற ஆண்டு இலங்கை வந்திருந்த தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழக 'அறிவியல் தமிழ்' போராசிரியர் கலாநிதி இராம. சுந்தரம் அவர்கள் கூறிய சம்பவம் ஒன்றை நினைவிற்குக் கொண்டு வந்தது. திருச்சியில் 'கும்பகர்ணனா விபீடணனா சிறந்த தம்பி' எனும் தலைப்பில் ஒரு பட்டிமன்றம் நடை பெற்றதாம். நடுவர் விபீடணனே சிறந்த தம்பி என்று தமது முடிவை பட்டிமன்ற இறுதியில் தெரிவித்துவிட்டு மேடையை விட்டு இறங்கிய வரும் போது ஒரு பட்டிமன்ற ரசிகர் தலையில் கையை வைத்துக் கொண்டு நடுவரைப் பார்த்து ''என்ன சார் பண்ணிட்டீங்க'' என்று கேட்டாராம், அதற்கு நடுவர் ''உங்க பிறாபிளம் என்ன சார்?'' என்று கேட்டா ராம். அதற்கு ரசிகர் 'கும்பகர்ணனையல்லவா சார் சிறந்த தம்பி என்று டிகிளயர் பண்ணியிருக்க வேண்டும்'' என்றாராம். உடனே நடுவர் ''அதில பிறாபிளமே இல்ல சார் உங்க ஊர் எது சார்?'' என்று கேட்க ரசிகர், ''கும்ப கோணம்'' என்றாராம். ''அப்படீன்னா நீங்க ஒன்று பண்ணுங்க, கும்பகோணத் தில் வாற மாசம் இதே டபிக்கில பட்டி மன்றம் ஒன்னு அரேன்ஜ் பண்ணிடுங்க'' நான் இதே ஆக்களோட வந்து கும்ப கர்ணர் தான் சிறந்த தம்பி என்று சொல்லி விடரேன் என்றாராம்.


இந்தியாவில் கல்யாணச் சமையல்காரக் கூட்டுபோல இது ஒரு வியாபாரம். 800 மில்லியன் பேர் உள்ள நாட்டில் தனி நிகழ்ச்சியில் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் ஒரேயொரு தங்கப்பதக்கம் கூடப் பெறமுடியாத வெட்டிப் பேச்சுக் காரர்கள் இவர்கள். இங்கே நமக்கு தலைபோகிற பிரச்சினைகள் பல இருக் கின்றன. ''பழைய சினிமாப் பாட்டா, புதிய சினிமா பாட்டா சிறந்தது?'' என்பது நமக்குத் தேவை தானா, அதைக் கூட காசு கொடுத்து கூப்பிட்டு இந்த அறிவிலிகளிடமிருந்தா அறிய வேண் டும். கோணேஸ்வரிகள், கிரிஷாந்திகள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்படும் போது கண்ணகியா மாதவியா 'கற்பில்' சிறந்தவள் என்பது அவசியம் தானா? சற்றுக் காலத்துக்கு முன்னர் வந்த இன்னொரு கோலஉடை பட்டிமன்றக் காரர் கம்பர், இளங்கோ, வள்ளுவர், பாரதி போன்றோர் உடைகளிலேயே தோன்றி கோயில் வீதியிலேயே தற்கால சினிமாச் சிலேடை கீழ்த்தர ஹாஸ் யத்தை (நமசிவாயம் எனும் நடுவர் என நினைக்கின்றேன்) திருவாய் மலர்ந்த ருளினார்கள். சிலுக்கு, விசித்திராவுக்கு அடுத்த படையெடுப்பு இது. இலக்கியப் பேச்சுக்கள் முற்றாக ஒதுக்கப்பட வேண்டியவை என நான் சொல்ல வில்லை. ஆனால் இவை ஸ்தாபனப் படுத்தப்பட்ட வியாபாரம். இது இங்கு தொடர்வது நிறுத்தப்பட வேண்டும். இல்லாவிடில் புரையோடத் தொடங்கி விடும்.

***கா.சிவபாலன்,*** *திருமலை*

# அடிமைப்புத்தி பிறப்புடன் வருவதில்லை!

எவர் எப்படிப் போராட்டம் நடத்தினாலும், போராட்டத்தில் எத்தனை உயிர்கள் பலியாகி எத்தனை பேர் அகதிகளாகி எவ்வளவு சொத்துக்கள் அழிந்தாலும் [illegible] செய்யப் போவதில்லை [illegible] அடிமைத் தனத்தை கைவிடவும் தயார் இல்லை என்ற பாணியில் சில வடக்கு கிழக்கு மாகாண அதிகாரிகள் நடக்கிறார்கள்.

தமிழ் அதிகாரியான பொன்னையா ஜகதீஸ்வரன் என்பவர் தமிழர் தலை நகரத்தின் நகராட்சிமன்றத்தலைவர் சூரியமூர்த்திக்கு தனிச்சிங்களத்தி லேயே கடிதம் எழுதியுள்ளார். பிரதேச உள்நாட்டு உதவி ஆணையாளரான இந்த அதிகாரியின் செயலைக் கண்டு சிரிப்பதா அழுவதா என்று குழம்பிப் போயிருக்கிறார்கள் நகராட்சி மன்ற ஊழியர்கள்


මෙම් දන්වා සිටිමි.

පී. ජෙගදීස්වරන්,
ප්‍රාදේශීය පලාත් පාලන සහකාර කොමසාරිස්,
ත්‍රිකුණාමලය.

தமிழைப் பயன் படுத்தும் உரிமைக்கான போராட்டங்கள் எல்லாம் இவர்களைப் பொறுத்த வரையில் பைத்தியக்காரத்தன மானது போலும்.

அடிமைப்புத்தி பிறப்புடன் வருவதில் லையே?

**-விவேகி**

www.tamilarangam.net

Registered as a newspaper in Sri Lanka.

## காணாமல் போனோர் சங்க கூட்டத்தில் கேட்ட கதை!

கடந்த நவ. 18 அன்று யாழ் மாவட்டத்தில் கைது செய்யப்பட்டு காணாமல் போனோரின் உறவினர்கள் ஊர்வலமொன்றை நடத்தினர். ஊர்வலத்தின் முடிவில் மகஜர்களும் கையளிக்கப்பட்டன. ஐ.நா.தூதுவராலய யாழ் அலுவலகத்தில் மகஜரைக் கையளித்தபோது நாங்கள் தொண்டர் ஸ்தாபனங்களைத் தான் நம்பியிருக்கிறோம். நீங்களும் கையை விரித்தால் நாங்கள் என்ன செய்வது என்றனர் ஊர்வலம் வந்தோர்.

மகஜர் கையளிக்கப்பட்ட பின்னர் சங்கத்தில் கூட்டமொன்றும் நடைபெற்றது. அங்கு காரசாரமான விவாதங்களும் இடம்பெற்றன. வர்த்தகர் சங்கம், ஆசிரியர் சங்கம் மற்றும் அரச ஊழியர் சங்கங்களும் தமது போராட்டத்திற்கு ஒத்துழைப்பு நல்க வேண்டுமென முதியவர் ஒருவர் கோரிக்கை விடுத்தார். அவர்களுக்கு நாங்கள் அழைப்பு அனுப்பினோம், ஆனால் அவர்கள் எவரும் எம்முடன் ஒத்துழைக்கவில்லையென்றார் செயலாளர். வேலையில்லாப் பட்டதாரிகள் சங்கம், வேலை வாய்ப்புக் கோருகிறார்கள், சம்பள உயர்வு கோரிப்போராடுகிறார்கள். எம்முடன் ஒத்துழைத்தாலென்ன என்றார் இளம் பெண் ஒருவர். இன்னொரு யுவதி எழுந்து ஒரு வரப்பிரகாஷ் மரணமடைந்ததற்கு நாடே அல்லோலகல்லோலப்படுகிறது. பல்லைக்கழக மாணவர்கள் கூட காணாமல் போயுள்ளனர். அதற்காகவாவது பல்கலைக்கழக மாணவர்கள் எமது போராட்டத்திற்கு ஒத்துழைப்பு நல்கக் கூடாதா என்றார். அதற்கு செயலாளர் நாம் பல்கலைக்கழக மாணவர்களுடன் தொடர்பு கொண்டபோது அவர்கள் இப்போது இராணுவம் எங்களைக் கடுமையாக சோதிப்பதில்லை. ஆனால் நாங்களும் உங்களுடன் இணைந்து போராட்டம் நடத்தினால் எம்மையும் இராணுவத்தினர் சந்தேக் கண்ணோடு நோக்குவார்கள் எனக்கூறியதாகத் தெரிவித்தார். உடனே சபையினர் அப்படியானால் அதனை பத்திரிகைகளில் பிரசுரியுங்களேன் என்றார். அதற்குக் காரியதரிசி எம்மால் கல்லெறி வாங்க முடியாது. உதயனுக்கு நடந்தது தெரியும் தானே என்றார்.

பின்னர் ஒரு முதியவர் எழுந்து எமது யாழ் மாவட்ட எம்.பிக்கள் என்ன செய்கிறார்கள். அவர்கள் இதற்காகத் தமது பதவியை ராஜினாமாச் செய்யக் கூடாதா என்றார். அவர்களுக்கு எங்களைப் பற்றி அக்கறையில்லை எனவும் சொன்னார். கூட்ட-முடிவில் சிலர் இராணுவ முகாமுக்கு முன்னால் உண்ணாவிரதப்போராட்டம் நடத்துவோம். கோயில்களில் உண்ணாவிரதப் போராட்டம் இருந்து பிரயோசனமில்லை என்றனர். அதற்கு செயலாளர் நீங்கள் நினைத்தபடி இராணுவ முகாமிற்கு முன்னால் போய் உண்ணாவிரதம் இருக்க முடியாது. அவர்கள் உங்களைச் சுட்டுத்தள்ளி விடுவார்கள் என்றார். அடுத்த முறை யாகப்பர் ஆலயத்தில் உண்ணாவிரதம் இருப்பதற்கு ஆலய நிர்வாகம் அனுமதியளித்துள்ளது என்றார்.

-பரமர்

## மீனவர் கடத்தல்!

பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் திருகோணமலைக் கடலில் வைத்து இரண்டு மீனவர்கள் விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கப்படுபவர்களால் கடத்திச் செல்லப்பட்டிருக்கின்றனர். அத்துடன் இரண்டு வெளியிணை மோட்டார்களும் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றன.

வழக்கம் போல நாணயக்கார சம்பத் (23), டி.ஜி. பத்மசிறி (32), உ பாலி அப்புகாமி (36) ஆகிய மூவரும் வெளியிணைப்பு மோட்டார் பூட்டப்பட்ட நாரிழைப் படகில் கடற்றொழிலுக்குச் சென்றிருக்கின்றனர். நவ. 24ம் திகதி திட்கட்கிழமை மாலை 4மணிக்குப் புறப்பட்ட இவர்கள் கோணேசர் கோவிலை அண்மித்த கடற்பரப்பில் மீன்பிடித்துக்கொண்டிருந்த போது தான் இருவர் கடத்தப்பட்டனர்.

இந்த இடம் மிகவும் பாதுகாப்பான பகுதி, கடற்படைத்தள வீரர்களின் நடமாட்டம் எப்போதும் இருக்கும். பாதுகாப்பு வலயத்துள் மீனவர்கள் நுழைந்து விடாதிருக்கும் பொருட்டு ரோந்துப்படகுகள் சேவையிலீடுபடுத்தப்பட்டிருக்கும். இதனை மீறி இச்சம்பவம் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. தப்பி வந்த மீனவரின் (உ பாலி அப்புகாமி) கூற்றுப்படி மாலையானதும் படகுகளில் வந்த விடுதலைப்புலிகள் மூன்று மீனவர்களையும் தங்கள் படகில் ஏறுமாறு பணித்தார்களாம். அவர்கள் மத்தியில் காணப்பட்ட ஒரு பெண் போராளி உ பாலியை வீடு செல்லுமாறு கேட்டுக் கொண்டாராம்.

மோட்டார் கழற்றியெடுக்கப்பட்ட நிலையில் உ பாலி கரைக்கு வந்து சேர்ந்துள்ளார். புலிகள் கடத்திப் போவதாக கரையில் போய்க் கூறுங்கள் என்று தான் பணிக்கப்பட்டதாக உ பாலி தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் ஒரு மணிக்கும், எட்டு மணிக்கும் இடையில் நடந்திருக்கிறது. பத்மசிறி மூன்று பிள்ளைகளின் தந்தை. மரக்கறி வியாபாரம் செய்து நட்டமடையவே கடற்றொழிலிலாவது பிழைத்துக் கொள்ளலாம் என்று மீன்பிடிக்கச் சென்றதாக அவரது உறவினர்கள் கூறுகின்றனர். சம்பத் மூன்று வருட காலமாக லவ்லேன் அகதி முகாமில் வாழ்ந்து வருகிறார். உப்புவெளிப்பொலிசிலும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ''நாங்கள் எவருக்கும் விரோதிகளல்லர். எவருக்கும் தீங்கிழைக்காமலேயே வாழ்ந்து வருகிறோம். விடுதலைப் புலிகளால் பிடிக்கப்பட்டவர்களுக்கு எவ்விதத் தீங்கும் நேராது என நாம் நம்புகிறோம். அவர்கள் விரைவில் விடுதலை பெற கடவுளைத் தான் பிரார்த்திக்கிறோம் என்று கூறும் இவரது குடும்பத்தினரும் இறக்கக்கண்டி மக்கள் விடுதலையானது போல் இவர்களும் விடுதலையாவார்கள் என நம்பிக்கையுடன் இருக்கிறார்கள்.

அன்றைய தினம் - ஏழத்தாழ அதேநேரம் சாகுல் ஹமிட், மீரா முகைதீன் என்பவரது வெளியிணை மோட்டாரும் அபகரிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தச்சம்பவங்கள் கடற்படையினரின் பாதுகாப்பிலுள்ள குறைபாடுகளையே சுட்டிக் காட்டுவதாக மீனவர்கள் கூறுகின்றனர். எங்கள் விடயத்தில் இறுக்கமாக நிற்பவர்கள் புலிகள் விடயத்தில் கோட்டை விடுவது எப்படி என்கிறார் மீனவர் ஒருவர்.

-விவேகி

## மகசீன் சிறை...

டிசம்பர் 2ஆம் திகதியும் திவய்ன பத்திரிகையில், அதன் ஆசிரியர் தலையங்கத்தில் "சிறைக்குள் இருக்கும் புலிகளுக்கு வெடி குண்டு தயாரிக்கக் கூடிய பியூஸ், டிரான்சிஸ்டர் போன்றவை எவ்வாறு சென்றன என்பது குறித்து விசாரணை செய்ய வேண்டும்" எனக் கூறி அரச படைகளையும், சிறை ஊழியர்களையும் காரசாரமாக கண்டித்திருந் .தது.

இந்த செய்திகள் உண்மைக்கு முற்றிலும் மாறானதாகவே இருந்தன. இம்முறையும் அரசின் கைக்கூலிகளான தமிழ் அரசியல் தலைவர்கள் தங்களது துரோகத்தனத்தை ஆற்றத் தவறவில்லை. உண்ணாவிரதத்தை கைவிடச்செய்ய போலி வாக்குறுதிகளை வழங்கினர். உண்ணாவிரதிகளின் நிலைமை குறித்து கடும் நடவடிக்கை எடுத்திருப்பதாக பத்திரிகைகளுக்கு பிரச்சாரம் செய்து "ஹீரோக்கள்" ஆகினர்.

1983 இனப்படுகொலை சம்பவத்தின் போது குட்டிமணி, தங்கத்துரை உட்பட 53 தமிழ் அரசியல் கைதிகள் சிறைஊழியர்களாலும், தண்டனை பெற்ற சிங்களக் கைதிகளாலும் வெட்டிக் கொல்லப்பட்ட சம்பவமும் இதே சிறையில் தான் இடம் பெற்றதும் இங்கு நினைவிற் கொள்ளத்தக்கது.

அது மட்டுமன்றி கடந்த வருடம் பெப்ரவரி 19ஆம் திகதி இதே சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் சிறை ஊழியர்களாலும் குற்றத் தண்டனை பெற்ற சிங்கள கைதிகளாலும் விரட்டி விரட்டி தாக்கப்பட்ட சம்பவம் நடந்தேறிய போதும், "விடுதலை செய்! அல்லது விசாரணை செய்!" என்ற உண்ணாவிரதப் போராட்டங்களின் போதும் இதே அரசியல் தலைவர்கள் போராட்டத்தைக் கைவிடச் செய்வதில் முனைப்பாக இருந்தார்களே ஒழிய அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவோ கைதிகளுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதிலேயோ தொடர்ச்சியான கவனம் செலுத்தவே இல்லை. கவனம் எடுக்கப்பட்டிருந்தால், இது போன்ற சம்பவங்களை ஓரளவு தானும் தடுத்திருக்கலாம்.

சிங்கள அரசாங்கமும் சிங்களப் படைகளும் தமிழர்களை புலிகளாகக் காண்பதும் அல்லது அதன் ஆதரவாளர்களாக காண்பதும் அதே நோக்கில் அவர்களை சித்திரவதை புரிவதும் புதிய விடயமல்லத் தான். அவர்களைப் பழி வாங்க கிடைக்கும் சந்தர்ப்பங்களை எவ்வாறேனும் உருவாக்கிக் கொள்ள காத்திருக்கும் சிங்கள பேரினவாத அரசுக்கு தினம் தினம் தீனி போடுவது இதே நக்கிப் பிழைக்கும் கூட்டம் தானே. ஆயிரமாயிரம் அப்பாவி இளைஞர் யுவதிகள் கைது செய்யப்படுவதற்கும், கடத்தப்படுவதற்கும், காணாமல் போவதற்கும், சித்திரவதை செய்யப்படுவதற்கும் காரணமான அவசரகால சட்டத்தை நிறைவேற்றும் கூட்டமும் இதே தமிழ் அரசியல் சக்திகள் தானே? சிங்கள அரசு வழங்கும் எச்சங்களுக்காக இன்னமும் ஜொள்ளுவிடும் கனவான் கூட்டமும் இவர்கள் தானே? காலாகாலமாக தமிழ் அரசியலை பின் நோக்கி நகர்த்திக் கொண்டிருக்கும் சக்திகளும் இவர்கள் தானே? எத்தனை காலம்.:.?

-ஜென்னி

## சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி....

- *காணாமல் போதல்*
- *கண்மூடித்தனமான கைதுகள்*
- *சித்திரவதை*
- *மனித சுதந்திரத்திற்கான தடை*

தமிழ் மக்கள் மீதான அனைத்து வன்முறைகளுக்கெதிரான ஆர்ப்பாட்டம்

**டிசம்பர் - 10 பகல் 12.00 - 1.00 மணிவரை**
**கொழும்பு கோட்டை புகையிரத நிலையம் முன்பாக**

இருப்பு நிச்சயமற்றதாக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களே!

இதயமுள்ள மனிதர்களே!!

தவறாமல் கலந்து கொள்ளுங்கள்!!

**மனித கௌரவத்திற்கான மன்றம் மற்றும்**
**தென்னிலங்கை மனித உரிமை அமைப்புகள்**

### *1998ஆம் ஆண்டு சிறப்பு மலர்*

***நியூஹாம் தமிழர் நலன்புரி சங்கம்***

ஐரோப்பியா, கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளைச் சார்ந்த தமிழ்ப் படைப்பாளிக்களின் ஆக்கங்களைத் தாங்கி 1996இல் ஒரு சிறப்பு மலரினையும், 1997இல் 'கிழக்கும் மேற்கும்' என்ற தலைப்பில் ஒரு சிறப்பு மலரினையும் நியூஹாம் தமிழர் நலன்புரி சங்கம் வெளியிட்டது.

1998 சித்திரை மாதத்தில் மூன்றாவது மலரினை வெளியிடுவதற்கான ஆயத்தங்களில் தற்போது இச்சங்கம் ஈடுபட்டுள்ளது. இயலுமானவரை முன்னைய மலர்களிலும் பார்க்க பரந்த அளவில் ஆக்கங்களை உள்ளடக்கும் வகையில் மலர் அமைய வேண்டும் என்பது சங்கத்தின் அவா.

அ. புலம்பெயர் சூழலில் தமிழர் தம் வாழ்நிலை அனுபவங்கள், எதிர்கொள்ளும் பிரச்சினைகள் சார்ந்த கட்டுரைகள்;

ஆ. இலக்கியப் படைப்புக்கள், சிறுகதை, கவிதை, விமர்சனம்;

இ. ஓவியம், புகைப்படம் மற்றும் நிகழ்கலைகள், திரைப்படம் சார்ந்த ஆக்கங்களை

உள்ளடக்க அவாவுகின்றது.

இம்மலரை செழுமைப்படுத்தத்தக்க வகையில் தங்களிடமிருந்து ஏலவே வேறெங்கும் பிரசுரிக்கப்படாத ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம். ஆக்கங்களை 1998 தை மாதம் 15ஆம் (15.01.1998) திகதிக்குள் கிடைக்கக் கூடியதாக

**R. Pathmanaba Iyer**
**Tamil Welfare Association (Newham) UK**
**P.O.Box 13794**
**London E12 5 Tk**

என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டுகின்றோம்.

Tel: 0181 - 478 0577

### மனித உரிமைகள் தினம் - 10 டிசம்பர் 1997

எல்லைப்புறக் கிராமங்களிலுள்ள சிறுவர்களின் புகைப்படக் கண்காட்சித் திறப்பு வைபவம்

**இடம் இலங்கை மன்றக் கல்லூரி,**
**இல. 100, சுதந்திர சதுக்கம்,**
**கொழும்பு 07.**

காலம்: 05.12.1997 - மு. ப. 10.00 மணி

★ புகைப்படக்கண்காட்சி.
★ சுவரொட்டிகளும் மனித உரிமைகள் தொடர்பான ஏனையஆவணங்களும்.
★ இறுதி வினா விடைப்போட்டி நிகழ்ச்சி.
★ பரிசளிப்பு.

ஆகியவை 1997 டிசம்பர் 5இற்கும் 10இற்கும் இடையே இடம்பெறவுள்ளன.

**அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.**

*அநுசரணை:*

*இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம்* (M.I.R.J.E)

*சட்டக்கல்விக்கும், உதவிக்குமான திட்டம்* (L.E.A.P.).

*இலங்கை மன்றக் கல்லூரி* (S.L.F.I).

*மேல் மாகாணக் கல்வி அமைச்சு* (W.P.M.E.).

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்